
# சகடயோகம்



கசின்

உ

அன்பு நண்பர் செம்பியன் செல்வன்
ஆயிரம் பிறை கண்டு அப்பாலும் வாழ்க.

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)
01 - 01 - 2003.

# சகடயோகம்

- கசின் -

பதிப்பாசிரியர்
பொ. ஆனந்தலிங்கம்

சந்திரா வெளியீட்டகம்
பம்பலப்பிட்டி
கொழும்பு.

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| பதிப்பு | : | ஜுன் 2001 |
| தலைப்பு | : | சகடயோகம் (நாவல்) |
| ஆசிரியர் | : | க. சிவகுருநாதன் (கசின்) |
| பதிப்புரிமை | : | பொ. ஆனந்தலிங்கம் |
| பக்கங்கள் | : | 104 |
| நூல் வடிவம் | : | சு. கிருஷ்ணமூர்த்தி<br>பவானி கிருஷ்ணமூர்த்தி |
| அச்சுப் பதிப்பு | : | சக்தி என்டர்பிரைஸஸ் |
| வெளியீடு | : | சந்திரா வெளியீட்டகம்,<br>எச்-6, அரசினர் தொடர்மாடி,<br>பம்பலப்பிட்டி, கொழும்பு - 04. |
| விலை | : | ரூபா 140/= |

| | | |
|---|---|---|
| Title | : | **'Sakadayogam'** (Novel) |
| Author | : | K. Sivagurunathan (Kasin) |
| First Published | : | June 2001 |
| Copyright | : | P. Ananthalingam |
| Publishers | : | Chandra Publishers,<br>H - 6, Government Flats,<br>Bambalapittiya, Colombo - 04. |
| Layout & Design | : | Mr. & Mrs. S. Krishnamoorthy |
| ISBN | : | 955-97467-0-7 |

# அணிந்துரை

"*சாஸ்வதமானதும் அவசியமானதும் மனிதவர்க்கத்தின் வளர்ச்சிக்கு நிலையானதுமான உண்மைகளை இனங்கண்டு, நிலையற்றதும், தற்செயலானதும், வெறும் சம்பிரதாயங்களுக்காக மாத்திரம் ஏற்பட்டது மான உண்மைகளைப் பிரித்துணரும் பண்பு, வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமின்றி, அதைவிட மேலான நோக்கத்துடன் படிப்பதற்கு மிக அவசிய மானது' என்று தாமஸ் ஹார்டி 1885 ஆம் ஆண்டி லேயே சொல்லியிருந்தார்.*"

பெ.கோ.சுந்தரராஜன்(சிட்டி), சோ. சிவபாதசுந்தரம் - அணுகிய முறை, தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும், வளர்ச்சியும்

*மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' 1879 இல் வெளியாயிற்று. இதுவே, தமிழிலே தோன்றிய முதல் நாவல் (Novel) எனக்கொண்டு, 1979 இல் மதுரைப் பல்கலைக் கழகமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமக்கே உகந்த வகையிலே 'தமிழ் நாவல் நூற்றாண்டு விழா'வைக் கொண்டாடின. இந்தக் கணக்கின் அடிப்படையிலே நோக்குகையில் 2001 ஆம் ஆண்டிலே தமிழ் நாவலுக்கு 121 வயது நடக்கின்றது. ஆங்கிலத்தில் நாவல் தோன்றிய காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என்று கொள்ளப்படுகின்றது. அவ்வாறாயின் தமிழ் நாவலானது ஆங்கில நாவலுக்கு நூற்று நாற்பதாண்டுகள் இளமையானது. அஃதாவது, தமிழ் நாவலுக்கும் ஆங்கில நாவலுக்குமிடையே ஐந்து தலைமுறை இடைவெளி உள்ளது எனலாம்.*

*காலத்தின் விரைந்த ஓட்டத்தினாலும், ஆங்கிலக் கல்வியின் தேர்ச்சியினாலும் படைப்பிலக்கிய உருவாக்கத்திலே நம்மவர் கொண்ட தீவிர ஆர்வத்தினாலும் சுயத்துவத்தினாலும் ஆங்கில நாவலின் தரத்தைத் தமிழ்நாவல்கள் இன்று எட்டிக் கொண்டிருக்கின்றன. இந்த உண்மையை விமர்சனப் பல்லிகள் சில ஏற்காத போதிலும் இதுதான் உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.*

**தமிழ் நாவலும் ஈழத்தவரும்**

வாசகருக்கு ஏதாவது நல்லதைச் சொல்ல வேண்டும், அதனைச் சுவையாகச் சொல்வதற்குக் கதை வடிவமே உகந்தது என்ற கருத்தே நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வடிவங்களுக்குத் தோற்றுவாய். பொது நியதியாய் இருந்து வந்த இந்தக் கருதுகோளை ஏற்பதில் ஈழத்தவரும் - எழுத்தாளரும் - விலக்கல்லர். ஓரளவு ஆங்கிலக் கல்வியும் இவர்களின் கருத்துக்கு உரம் ஊட்டி இருக்கலாம். இந்நிலையில் 1885 இல் இஸ்லாமியரான சித்தி லெவ்வை மரிக்கார் 'அஸன்பே சரித்திரம்' என்ற நாவலை எழுதினார். 'அராபிய இரவுக் கதை'களில் ஈடுபாடு கொண்ட தமிழறிஞரான இவரின் இந்த நாவலே ஈழத்தில் எழுதப் பட்ட முதல் நாவல் எனக் கொள்ளப்படுகின்றது.

'அஸன்பே சரித்திர'த்தை அடுத்து 'ஊசோன் பாலந்தை' (இன்னாசித்தம்பி) 'மோகனாங்கி' (தி. த. சரவணமுத்துப்பிள்ளை) ஆகிய நாவல்கள் முறையே 1891,1895ஆம் ஆண்டுகளிலே வெளி யாயின. இவை ஈழத்தவரால் எழுதப்பட்டபோதிலும் ஈழத்தைக் களமாகக் கொண்டனவாகவோ, மண்வாசனை உடையனவாகவோ இருக்கவில்லை.

"ஈழத்து மண்ணைக் களமாகக் கொண்டு தமிழ் நாவல் எழுதும் மரபு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலேயே தோற்றம் பெறுகின்றது" என்பது 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' என்ற ஆய்வு நூலின் ஆசிரியரான பேராசிரியர் நா. சுப்பிரமணியத்தின் கணிப்பீடு. 1905 ஆம் ஆண்டு சி. வை. சின்னப்பிள்ளை (ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையின் சகோதரர்) வெளியிட்ட 'வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம்' என்ற நாவலே ஈழத்தவரின் வாழ்வைப் பிரதிபலிக்கும் முதல் நாவல் என்கிறார் அவர். இந்நாவலில் வரும் தலைமைப் பாத்திரமான வீரசிங்கன் "வீரம், அறிவு, அன்பு, ஒழுக்கம் முதலிய நற்பண்புகள் பொருந்தப் பெற்றவனாயும், அவன் காதலி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு வாய்ந்தவளாயும்" சித்திரிக்கப்பட்டு அற்புத சம்பவங்கள் பொதிந்ததாய் 'வீரசிங்கன்' நாவல் விளங்குவது தொடக்ககால ஈழத்துத் தமிழ் நாவலின் நோக்கையும் போக்கையும் புலப்படுத்துவதாகும். ஆனால், 1919 இல் திருமதி மங்களநாயகம் தம்பையா எழுதிய 'நொருங்குண்ட இருதயம்' என்ற நாவல் இப்போக்கிலிருந்து விலகி அக்காலச் சமுதாயப் பிரச்சனைகளை ஓரளவு எடுத்தியம்புவது குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் தமிழகத்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தோன்றிய 'கமலாம்பாள் சரித்திரம்' (ராஜமையர்) 'பத்மாவதி சரித்திரம்' (மாதவையர்) போன்றோ இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே வெளியான 'மஞ்சரியின் கதை' (பாரதியால் எழுதப்பட்டுப் பூர்த்தியாகாத நாவல்) போன்றோ சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களுக்கு ஈடான கருத்துக்களை ஈழத்தின் ஆரம்ப கால நாவல்களிலே காண்பது அரிது என்பதை மறுத்தல் இயலாது.

**1930 இன் பின்.....**

1930 இல் டொனமூர் விசாரணைக்குழு இலங்கைக்கு நடத்திய விசாரணையின் பயனாக இலங்கை மக்களில் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட, புத்தி சுவாதீனம் உள்ள ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்குகின்றது. இதன் அடிப்படையிலே அரசாங்க சபை அமைக்கப்படுகின்றது. ஓரளவு அரசியல் விழிப்புணர்வும், சமுதாய சீர்திருத்த உணர்வும், சுதந்திரவேட்கையும் ஈழத்துத் தமிழர்களிடையே வெளிப்படத் தொடங்குகின்றன. இவற்றிற்குத் தூண்டுதலாக இந்தியச் சுதந்திரப் போராட்டமும், சிறப்பாகத் தமிழகத்தின் சமூகசீர்திருத்தச் சிந்தனைகள், தமிழ்மொழி சார்ந்த மறுமலர்ச்சிச் சிந்தனைகள், அவை தொடர்பான புத்தாக்கங்கள் (சிறுகதை, நாவல், கட்டுரை) என்பன அங்கு வெளியான பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் மூலம் எம்மவரிற் செல்வாக்குச் செலுத்தத் தொடங்குகின்றன. 'வீரகேசரி' (1930), 'ஈழகேசரி' (1930), 'தினகரன்' (1933) ஆகிய பத்திரிகைகள் புதியதொரு படைப்பாளிகள் கூட்டத்தின் உருவாக்கத்திற்கு வித்திடுகின்றன. இந்த வித்து, நாற்பதுகளிலே சிறு செடியாக வளர்ச்சி காண்கின்றது.

**நாற்பதுகளில் படைப்பிலக்கியத்தின் நிலை**

ஈழத்தின் படைப்பிலக்கியங்கள், படைப்பாளர்கள் பற்றி நாம் ஆராய முற்படுகையில் அன்று நிலவிய கல்வி முறை பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளுதல் அவசியம். ஆங்கிலம் ஆட்சி மொழியாக நிலவிய அந்தக் காலத்தில், உத்தியோக வாய்ப்புக்களும் அவற்றால் கிடைக்கக் கூடிய பொருளாதார, சமூக மதிப்பும் கருதி நடுத்தர வர்க்கத்தினரும் மேற்றட்டு வர்க்கத்தினரும் தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலக்கல்வியைப் பெற்றுக் கொடுத்தனர். பொருளாதார வளமோ, சமூகக் கணிப்போ குறைந்த சாமானியரின் பிள்ளைகள் தாய்மொழி யாகிய தமிழையே கற்றனர். முன்னவருக்கு எல்லாவகை அரச உத்தியோகங்கள்,

வைத்தியம் (ஆங்கில முறை), சட்டம் ஆகிய துறைகளில் சுதந்திரமாகத் தொழில் புரியும் வாய்ப்புக்கள் என்பன கிடைத்தபொழுது, பின்னவரான தமிழ் கற்றோருக்கு ஆரம்ப, இடைநிலைப் பள்ளிகளிலே தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் உத்தியோகமே கிடைத்தது. ஆங்கிலம் கற்றோர் தமிழிலே பேசுவதும், எழுதுவதும் கௌரவக் குறைவு என்று கருதிய அக்காலத்தில், தமிழையே கற்று அதனையே தமது வயிற்றுச் சோற்றுக்கும் ஆதாரமாகக் கொண்ட தமிழாசிரியர்களே தமிழைப் பேசியதோடு எழுதவும் (படைப்புத்துறைசார் ஆக்கங்களை எழுதவும்) - முனைந்தனர். எனவே, நாற்பதுகளிலே படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டோரிலே பெரும்பான்மையராக விளங்கியவர்கள் தமிழாசிரியர்களே.

உத்தியோகங்களிலும், ஆசிரியத் தொழிலிலும் (தமிழ், ஆங்கிலம்) ஈடுபட்டோர் தமது பதவிகளில் உயரவும் அவற்றினூடாகப் பொருளாதார மேம்பாடடையவும் இலண்டன் பல்கலைக்கழகக் கலைமாணிப் பரீட்சைக்கு (B.A.) த் தோற்ற ஆங்கில மொழியூடான பாடங்களோடு தமிழ், சமஸ்கிருதம், பாளி முதலாம் மொழிகளையும் கற்கவேண்டியிருந்தது. இவ்வாறு கற்றவரும், கற்றுத் தேர்ந்த வருமான ஒரு சிலர் இயல்பாகவே தமிழில் முகிழ்த்த படைப்பார்வத்தின் பயனாய்த் தமிழில் ஆக்க இலக்கியங்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டினர்.

தமிழையே கற்றுத் தமிழாசிரியர்களாய் விளங்கியவர்களின் எழுத்தாக்கங்களிலே (முறையான தமிழ்க்கல்வி காரணமாக) பிழையின்மையும், பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கின் பாதிப்பும், சமகாலத்திலே வெளியான தமிழகத்து நவீன இலக்கியங்களின் போக்கினைப் பின்பற்றும் ஆர்வமும் பெருமளவு காணப்பட்டன.

ஆங்கிலத்தை முதன் மொழியாகவும், தமிழைப் பட்டப் படிப்புக்கான துணைமொழியாகவும் கற்றவர்களின் ஆக்கங்களிலே ஆங்கில இலக்கியக்கல்வியின் பாதிப்புக் கூடுதலாக இருந்ததில் வியப்பில்லை. முறையான தமிழ்க் கல்வியின்மையால் மரபை மீறிய சொல்லாட்சி, வாக்கிய அமைப்பு என்பன இவர்களின் எழுத்துக்களிலே ஆங்காங்கு புலப்பட்டன. இந்தப் புலப்பாட்டில் ஒருவகைப் புதுமைக் கவர்ச்சியும் இருந்தது என்பதை மறுத்தல் இயலாது. இதனோடு சமஸ்கிருத இலக்கியக் கல்வியின் செல்வாக்கினால் இவர்களின் வருணனைகள், உவமை உருவகங்கள், விவரணங்கள் என்பவை மெருகிடப்பட்டிருந்தன.

நுணுக்கமான இந்த வேறுபாடுகளுக்கு அப்பால் அக்கால எழுத்தாளர்களிலே காணத்தகும் பொதுப்பண்புகளெனக் கூறத் தக்கவை அவர்களின் சமூகப் பிரக்ஞையும், புதுமை செய்ய வேண்டும் என்ற ஆர்வமும், தமிழை அது காலாதிகாலமாகச் சென்ற தடத்தி லிருந்து மீட்டு உலகின் தலைசிறந்த மொழிகளுக்குச் சமமானதாய் அதன் வெளிப்பாட்டுத் திறனை வளர்த்திட வேண்டும் என்ற தணியாத வேட்கையுமே.

ஐம்பதுகளிலே தொழிலாளர் மத்தியிலிருந்து ஆக்கத்திறன் படைத்த எழுத்தாளர் சிலர் உருவாயினர். அறுபதுகளிலே தாய்மொழி மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புப் படித்துத் தேறிய எழுத் தாளர், திறனாய்வாளர், ஆய்வாளர் வெளிக்கிளம்பினர். இவ்விரு பரம்பரையோடு, தமிழாசிரிய எழுத்தாளர் பரம்பரையும் சங்கமித் துள்ள போதிலும் அவர்களுக்கேயுரிய சில தனிப் பண்புகளை அவர்கள் கைவிடவில்லை. இப்பரம்பரை, இன்று அருகியபோதிலும் இவர்களிற் சிலர் இன்றும் தமது படைப்பார்வத்தைக் கைவிடாது தொடர்வது குறிப்பிடத்தக்கது.

இவ் எழுத்தாளர் வரிசையிலே, ஆயிரம் பிறை கண்ட 'கசின்' என்ற புனைபெயராளர், பண்டிதர் க. சிவகுருநாதன் அடங்குகின்றார்.

ஏற்கனவே 'கசின்' சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இப்பொழுது 'சகடயோகம்' என்ற நாவல் வெளியாகின்றது.

### 'கசின்' பற்றிய விமர்சகர்களின் மதிப்பீடு

"கசின்' என்ற புனைபெயரையுடைய க. சிவகுருநாதன் ஐம்பது களில் ஈழகேசரியில் பதினொரு தொடர் நாவல்கள் எழுதியுள்ளார். இவற்றுள் பல குறுநாவல்கள். இந்நாவல்களிலே சமகால சமூக குடும்ப ஊழல்கள் நகைச்சுவையுடன் தொட்டுக் காட்டப்படுகின்றன. ஆசிரிய ரான இவர் தனது நாவல்களிலே ஆசிரியப் பணியோடு தொடர்பு டையவர்களையே பாத்திரங்களாகக் கொண்டுள்ளார்."

இது, பேராசிரியர் நா. சுப்பிரமணியனின் கணிப்பீடு. (**ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் பக். 63**). இக்கணிப்பீடு வெளியான ஆண்டு *1978*. (இவர், தமது முதுமாணிப் (M.A.) பட்டத்திற்குச் சமர்ப்பித்த ஆய்வேடு *1978* இல் நூல் வடிவில் வெளியாயிற்று.)

இரசிகமணி கனக செந்திநாதன் 1964 இல் கசின் பற்றிப் பின்வருமாறு மதிப்பிடுகின்றார்.

"........கசின் எண்ணிக்கையில் அதிகமான தொடர்கதைகளை எழுதியிருக்கின்றார். அவருடைய கதைகள் முறை தவறிய காதலையோ, காமத்தையோ சித்திரிப்பனவாகவும், எங்கேயோ நடந்த உண்மைக் கதைகளை வாசிப்பதான எண்ணத்தை ஊட்டுவன வாகவும் அமைந்திருக்கின்றன. ஆசிரிய சமூகத்தின் நடமாடும் பாத்திரங்களே அதிகமாக அவரது கதைகளிலே இடம்பெறுகின்றன. அவரது கதைசொல்லும் பாணி சிக்கலின்றி ஒழுங்காக அமைந்துள்ள தால், சாதாரண வாசகரை அவராற் கவர முடிகின்றது." (ஈழத்து இலக்கிய வளர்ச்சி, பக். 105)

**சகடயோகம்**

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றிலே இடம்பெறத்தக்க கணிசமான நாவல்கள், சிறுகதைகளைப் படைத்து, அவற்றின் வாயிலாகத் தரம் வாய்ந்த விமர்சகர்களின் கணிப்புக்கு உள்ளான 'கசின்' ஈழகேசரியில் 1949 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட நாவல் '**சகடயோகம்**'. இவ்வகையிலே பார்க்கும்பொழுது இந்நாவலின் வயது 52! நடுத்தர வயதினைக் கடந்து முதுமையிலே காலெடுத்து வைக்கின்ற வயது! ஆனால் கதை ஓட்டமும், சம்பவ விவரணமும் இன்னமும் இளமைத்துடிக்கு மாறாது, கவர்ச்சி குன்றாது விளங்குவதே சிறப்பித்துக் கூற வேண்டுவதாகும்.

சுகம், துக்கம் என்பன சகடம் உருண்டு மேல் கீழாகவும் கீழ் மேலாகவும் வருதல் போல மாறி மாறி வருவது உலக நியதி. இவ்வாறு ஒருவரின் வாழ்வில் நிகழும் பலனைச் 'சகடயோகம்' எனச் சோதிட நூலார் குறிப்பர். இந்தக் குறிப்புப் பொருளினைத் தரும் பாடல் ஒன்றின் அடிகளைச் 'சகடயோகம்' நாவலின் ஒவ்வோர் அத்தியாயத் தினதும் தொடக்கத்தில் கசின் தந்துள்ளார்.

கசின், நாவல் எழுதத் தொடங்கிய காலத்திலே, தமிழகத்தின் நாவல்களின் சிலவற்றிலே அத்தியாயங்களின் தொடக்கங்களிலே அவ்வவ் அத்தியாயங்களுக்குப் பொருத்தமான மேற்கோள் வாசகங் களை இட்டுக்கொள்ளும் முறைமை நிலவியது. [தமிழக எழுத்தாளர் 'தேவன்'முதன்முதல் தமிழிலே இந்த வழக்கத்தினைப் புகுத்தினார் என்று கருதுகிறேன். பின்னாளில், 'மணியன்'(இதயம் பேசுகிறது) தமது

நாவல்களில் இம்முறையினைப் பரவலாகக் கையாண்டார்.] அம் முறைமை சகடயோகத்திலும் மிகப் பொருத்தமாகக் கையாளப்படு கின்றது.

தமிழ்ப் பாண்டித்தியம் மிக்கவரான 'கசின்' பழந்தமிழிலக்கியங் களிலிருந்து பாரதி பாடல் வரை எடுத்தாண்டுள்ள தொடக்க மேற் கோள்கள் அவரின் நாவலுக்கு ஒரு காத்திரத்தை வழங்கியுள்ளன என்பேன்.

சகடயோகத்தின் தோற்றகாலத்து நாவல்களின் இலக்கியக் கோட்பாடு இன்று பத்தாம்பசலி என்று தள்ளப்படலாம். சம்பவங்களி னால் வளர்க்கப்படுவன நாவல்களேயல்ல என்று புறம் தள்ளப் படலாம். ஆனால், அக்காலத்து எழுத்தாளர்களுக்குச் சில பிரக்ஞைகள் இருந்தன. நடப்பியல் வாழ்க்கையின் உறுத்தல்கள், கவர்ச்சிகளைத் தம்மால் இயன்ற அளவு சுவைபடக் கூறி அவற்றின் மூலம் சிரிக்க, அழ, கோபிக்க, அருவருக்க, அதிசயிக்க வைக்கும் ஆற்றலினை அவர்களின் படைப்புக்கள் கொண்டிருந்தன. அவ்வுண்மையை நடுநின்று ஆராய்வார் ஏற்கத் தவறார்.

இவ்வகையில் பார்க்கும்பொழுது 'கசினு'டைய நாவல்கள் பலவற்றிலும் பிற சுவைகள் ஆங்காங்கே வெளிப்பட்டாலும் நகைச் சுவையும் எள்ளலுமே (Satire) மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம். சகடயோகமும் இவ்வம்சங்களையே பெரிதும் கொண்டுள்ளமையால் வாசகருக்கு எவ்விடத்திலும் சலிப்புத் தோன்றாதிருத்தல் சிறப்பித்துக் கூறவேண்டிய ஒன்றாகும். ஆசிரியரான அவர் தம் சமகாலத்து ஆசிரியர்களின் இருப்புக்கள், இக்கட்டுக்களை நன்கு அறிந்தமையா லும் அவர்களைத் தம் கதைகளிலே பாத்திரங்களாய் உலாவவிட்டமை வியப்புக்குரிய ஒன்றல்ல. எவருக்கு எதில் அதிக பரிச்சயம் உள்ளதோ அதனையே சிறப்பித்துக் கூறுவது அவரின் இயல்பாக இருக்கும் என்பதை மறுத்தல் இயலாது. வேறு வகையில் நோக்குவோமானால், அவர் அந்த விடயத்தை வெளியிடுவதன் மூலமே தமது சிறப்பாளு மையை மிகச்சிறப்பாக வெளிப்படுத்துகின்றார் எனலாம். ருஷ்ய எழுத்தாளரான அன்ரன் செக்கோவ் (Anton Chekov) ஒரு வைத்தியர். அவரின் கதைகளிலே வைத்தியத்துடன் தொடர்பான பாத்திரங்களே அதிகம் அதிகமாய் இடம்பிடித்துள்ளன.

எனவே, "ஆசிரியரான இவர் தனது நாவல்களிலே ஆசிரியப் பணியோடு தொடர்புடையவர்களையே பாத்திரங்களாகக் கொண்டுள்ளார்" என்ற நா. சுப்பிரமணியனின் கூற்றும், "ஆசிரியர் சமூகத்தின் நடமாடும் பாத்திரங்களே அதிகமாக அவரது கதைகளிலே இடம் பெறுகின்றன" என்ற இரசிகமணி கனக செந்திநாதனின் கருத்தும் - (அவர்கள் எந்த நோக்கிலே குறிப்பிட்டார்கள் என்பது இவ்விடத்தில் முக்கியமல்ல) 'கசின்' அவர்களுடைய தனித்தன்மைக்கு நற்சான்றிதழ்கள் என்றே நான் கருதுகின்றேன். இதனாலேதான் "எங்கேயோ நடந்த உண்மைக் கதைகளை வாசிப்பதான எண்ணத்தினை" இவரின் நாவல்கள் ஏற்படுத்துகின்றன.

ஆனால், சகடயோகத்தில் வரும் மூன்று காதற் சோடிகளில் ஒரு சோடி மட்டுமே ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சதாசிவம் என்ற பெயர் கொண்ட பாத்திரம் தனது படிப்புக் காலத்தில் எப்பொழுதும் முதல் மாணவனாகத் திகழ்ந்து, பொருளாதாரப் பின்னடைவால் ஆசிரியப் பயிற்சி பெற்றபோதிலும் அக்காலத்தில் நிலவிய வேலை இல்லாத் திண்டாட்டம் காரணமாகச் சமையற்காரன் ஆக நேர்கின்றது! (ஆசிரியத் தொழிலின் சமூகக் கணிப்பு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எவ்விதம் இருந்தது என்பதன் எதார்த்த சித்திரம் தான் சதாசிவம்) சதாசிவத்தின் காதலியாகிய சந்திரா அவனுக்காகக் காத்திருந்து, அவனுக்காகவே ஆசிரியையாகி (பொருளாதார உயர் மட்டத்தினள் என்பதால் கொழும்பில் மிகச் சுலபமாக ஆசிரியை ஆகும் வாய்ப்பு அவளுக்குக் கிடைக்கின்றது) அவனைப் பல இடங்களிலும் தேடி அலுத்துச் சலிக்கின்றாள். கடைசியில் அவனைத் தனது வீட்டிலேயே எதிர்பாராத சூழ்நிலையில் சமையற்காரனாகச் சந்திப்பது கதையின் எதிர்பாராத திருப்பம். எதிர்பாராத திருப்பம் (Suspense) என்பது இன்றுங்கூடச் சம்பவ வளர்ப்பில் கணிசமான இடம்பெறுகின்றது என்பதை மறுக்க முடியுமா?

சதாசிவம்-சந்திரா, மகாதேவன்-சாரதா, சண்முகம்-இராஜேஸ்வரி ஆகிய மூன்று சோடிகளில் முதல் இரண்டினதும் ஆண்கள் படிப்பில் திறமை பெற்றிருந்தும், வாழ்வை அமைத்துக் கொள்ளும் திறமையின்றி, குறித்த ஒரு தொழிலுக்கே தகுதிப்படுத்திப் பிற தொழில்களை நாடாது அந்தத் தொழிலுக்கே காத்திருந்து கிடைக்காதபொழுது தமது காதலியரையே விட்டு ஓடிப் பலவித துன்பங்களுக்கு ஆளாகின்றனர். பெண்களோ கையறு நிலையில் தம் காதலரை எதிர்பார்த்து எதிர்பார்த்து வருந்துவதொன்றே தொழிலாகக் கொள்கின்றனர்.

ஆனால் படிப்பிலே கடைசி மட்டத்திலிருந்த சண்முகமும் இராஜேஸ்வரியும் மற்றிரண்டு காதல் சோடிகளையும் சேர்த்து வைத்து அவர்களுக்கு வாழ்வு அளிப்பதோடு, தாமும் தமது முயற்சியினால் முன்னேறிச் சமூக அந்தஸ்திலே அனைவரது கணிப்பிற்கும் உள்ளா கின்றனர்.

எவ்விடத்திலும் தொய்வேயின்றி வளர்த்துச் செல்லப்படும் சகடயோக நாவலில் அக்கால எதார்த்த நிலைகள் சில மிகவும் திறம் படச் சித்திரிக்கப்படுகின்றன.

1. குறித்த தொழில் ஒன்றுக்கென்றே தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு அது கிடைக்காதபோது மனந் தொய்வடைந்து வாழ்விலிருந்து தப்பியோடுவது முட்டாள்தனம்.

2. பரீட்சையிலே தோல்வி கண்டதும் மன இடிவுடன் சமூகத்தி லிருந்து ஒதுங்கிக் கொள்வதால் எதையும் சாதித்து விடல் இயலாது.

3. பள்ளிக்கல்வியிலே உயர் திறமை பெறுவதால் மட்டும் எதனை யும் சாதித்துவிட முடியாது. தன்னம்பிக்கையும், அயரா முயற்சி யும் இருந்தால் வாழ்க்கையின் எந்த நிலையிலும் முன்னேற்றம் காணலாம்.

4. யாழ்ப்பாணத்தின் குடியேற்றக் கிராமங்கள் நல்ல தகைமையில் இயங்குமானால் அவை மிக விரைவில் வளர்ச்சி கண்டு பட்டினங்களாவது சாத்தியமே.

இவ்வாறு கதைநுவல் திறம், கதையினூடாகச் சில உண்மை களை லாவகமாக வெளிப்படுத்திச் சிந்திக்க வைக்கும் திறம், எவ்விடத்தும் சலிப்பின்றி வாசிக்கத் தூண்டும் எளிமையான நடை, எதிர்பாராத் திருப்பங்களை அமைத்திடும் பாங்கு என்பவற்றால் சகடயோகம் ஐம்பது ஆண்டுகளின் பின்பும் சீரிளமைத் திறத்தோடு விளங்குகின்றது என்பதை எவ்வித தயக்கமுமின்றி எடுத்துரைக்கலாம்.

எனது தலைமுறையின் மூத்தவரான 'கசின்' அவர்களுக்கு எனது உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்
*2001. 05. 31*

**க. சொக்கலிங்கம் எம். ஏ.**
**(சொக்கன்)**

# பதிப்புரை

மூத்த எழுத்தாளர் 'கசின்' க. சிவகுருநாதன் 1946 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கட்டுரை, சிறுகதை, நாவல் போன்ற துறை களில் தடம் பதித்தவர். 1995 ஆம் ஆண்டு வரை அவரது ஆக்கங்கள் நூலுருப் பெறவில்லை. அதன்பின் அவரது ஆக்கங்கள் வெளி வருவதற்கும், அவரை இலக்கிய உலகிற்கு இனங்காட்டவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்கள் மல்லிகை டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான் கலாநிதி. க. குணராசா, தினக்குரல் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு ஆ. சிவனேசச்செல்வன் ஆகியோராவர்.

மல்லிகை ஜீவா அவர்கள் 1994 ஆம் ஆண்டு புரட்டாதி மாத 'மல்லிகை' அட்டையில் மூத்த எழுத்தாளர் 'கசின்' அவர்களுடைய படத்தை வெளியிட்டு, 'செங்கை ஆழியான்' எழுதிய 'மூத்த எழுத்தாளர் கசின்' என்ற கட்டுரையையும் பிரசுரித்து இளைய தலைமுறையி னருக்கு அவரை இனம் காட்டினார். அக்கட்டுரையிலும், 1994 ஆம் ஆண்டு மார்கழி மாதம் யாழ்ப்பாணத்தில் இலங்கை இலக்கியப் பேரவை ஒழுங்கு செய்திருந்த 'கசினை' கௌரவிக்கும் நிகழ்விலும் உரையாற்றிய செங்கை ஆழியான் அவர்கள், 'தன்னடக்கமும் எழுத் தாற்றலும், இலக்கிய ஆளுமையும் நிரம்பிய கசினுடைய எழுத்துக்கள் எவையும் நூலுருப் பெறவில்லையே' என்ற ஆதங்கத்தையும், அவருடைய குடும்பத்தினர் கசினுடைய ஆக்கங்கள் நூலுருப் பெற உதவவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளை ஏற்று, 1995 ஆம் ஆண்டு அவரது இளையமகன் 'காதலும் கடிதமும்', 'நிதானபுரி' என்ற இரு நூல்களை வெளியிட்டார். 'காதலும் கடிதமும்' என்ற நூலுக்கு அணிந்துரை வழங் கியிருந்த முன்னாள் வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. ஆ. சிவனேசச் செல்வன் அவர்கள் தமது அணிந்துரையில், "இந்த நூலைத் தொடர்ந்து கசினுடைய சிறுகதைகளும், கட்டுரைகளும், மற்றைய ஆக்கங்களும் நூலுருப் பெறவேண்டும். குடும்ப உறவுகள், மென்மையான காதலு ணர்வுகள் ஆகியனவற்றை வரம்பு மீறாமல் எடுத்துச் சொல்லும்

ஆற்றல், ஆற்றோட்டமான வசனநடை ஆகியன இளைய தலைமுறை யினருக்கு வழிகாட்டும் ஆதர்சனமான எழுத்துக்களாக விளங்கக் கூடியவை."

"நாற்பதுகளில் ஈழத்தில் உருவாகிய மறுமலர்ச்சி இலக்கிய ஓட்டத்தின் வெளிப்பாடாகவும், ஈழகேசரிப் பண்ணையில் உருவாகிய நறுமலராகவும் உதித்த 'கசின்' அவர்களுடைய எழுத்துக்கள் இன்றைய தலைமுறையினருக்கு முழுமையாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆற்றலும் ஆளுமையும் நிறைந்த ஆக்க இலக்கிய கர்த்தாவின் பணிகள் இலை மறை காயாகிப் போய்விடக்கூடாது."

"ஈழத்து இலக்கிய உலகின் சென்ற தலைமுறையின் 'முதுசம்' ஆகவுள்ள 'கசின்' அவர்களின் இலக்கிய ஆளுமை துலங்க அவருடைய எழுத்துக்கள் யாவும் முழுமையாக வெளிக்கொணரப்பட வேண்டும் என்பதே இலக்கிய ஆர்வலர்களின் வேணவா" என்று குறிப்பிட்டி ருந்தார்.

இந்தக் குறிப்பு 'கசினு'டைய மூத்த மகனை ஈர்த்தது. 1999 ஆம் ஆண்டு 'கசின்' அவர்களுடைய சிறுகதைகள் என்னால் தொகுக்கப் பட்டு, 'கசின் சிறுகதைகள்' என்ற நூல் அவரால் வெளியிடப்பட்டது.

2000 ஆம் ஆண்டு ஆனி மாதம் 'கசின்' அவர்களுடைய இல்லத்தில் 'மூத்த எழுத்தாளர் கசின் அவர்களுடன் ஒரு மாலைப் பொழுது' என்ற இலக்கியச் சந்திப்பொன்று மல்லிகை ஜீவாவினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. அந்நிகழ்வில் கல்ஹின்னை தமிழ் மன்ற ஸ்தாபகர் சட்டத்தரணி எஸ். எம். ஹனிபா அவர்களும் கலந்து கொண்டிருந்தார். அந்த நிகழ்வுகளைச் செவிமடுத்த திரு. எஸ். எம். ஹனிபா அவர்கள், 'கசினு'டைய நாவலொன்றை தங்கள் தமிழ் மன்றம் வெளியிட வேண்டுமெனக் கேட்டு, 'குமாரி இரஞ்சிதம்' நாவலைப் பெற்றுச் சென்று 2000 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

தற்போது என்னால் வெளியிடப்படும் 'சகடயோகம்' நாவல் அவரது ஐந்தாவது நூலாகும். இது வடபகுதியிலிருந்து வெளிவந்த 'ஈழகேசரி'யில் 1947 ஆம் ஆண்டு தொடராக வெளிவந்ததாகும். இந்த நூல் மூலம் அன்றைய யாழ்ப்பாண மக்களின் சமூக, பண்பாட்டுத் தளங்களை அறியக் கூடியதாக இருக்குமென நம்புகின்றேன். 'கசின்'

அவர்களுடைய வெளிவராத ஏனைய ஆக்கங்களும் வரும் வருடங்களில் நூலுருப் பெறும். இந்த நாவலுக்கு அணிந்துரை தந்த மூதறிஞர் சொக்கன் ஐயா அவர்களுக்கும் நூலை வடிவமைத்த திரு. திருமதி. சு. கிருஷ்ணமூர்த்தி, அட்டைப்படத்தை வரைந்த ஓவியர் ரமணி ஆகியோருக்கும் இந்நூலை அச்சிட்டுத் தந்த சக்தி என்டர்பிரைஸஸ் பதிப்பகத்தினருக்கும் எனது நன்றிகள்.

*எச்-6, அரசினர் தொடர்மாடி,*
*பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.*
*2001. 06. 01*

**பொ. ஆனந்தலிங்கம்**

## எமது தேசத்தில் எல்லா இனத்தவர்களையும் பீடித்திருக்கும் தாழ்வு மனப்பான்மை

*கலை, இலக்கியப் பேரவை ஆரம்ப விழாவில் 'கசின்' நிகழ்த்திய தலைமையுரை*

**"இன்று தாழ்வு மனப்பான்மை என்னும் நோய் எமது தேசத்தில் எல்லா இனத்தவர்களையும் பீடித்திருக்கிறது. எமது தமிழினத்தைப் பொறுத்த வரையில் இந்நோய் இன்று பெருமளவில் பரவியுள்ளது. இத் தொல்லையினின்றும் 'முன்னேற்றம்', 'முன்னணி' என்பன போன்ற சொற்றொடர்கள் பல தோன்றி இன்று கண்சிமிட்டிக் காதல் புரிகின்றன. இது, ஒரு நோயின் ஊற்றன்றி, வாலிப மிடுக்கல்ல"**

'கலை, இலக்கியப் பேரவை' என்னும் பெயரில் நேற்றுக்காலை கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட புதிய சங்கத்தின் தலைவர் திரு. க. சிவகுருநாதன் ('கசின்') அவர்கள் தமது தலைமைப் பேருரையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது :-

நிச்சயமாகத் தமிழ், உலகத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும் இலக்கியத்துறையில் வழிகாட்டக்கூடிய வளர்ச்சியை அடைந்திருந்தும், அதை உணராத தமிழ்ப் புலவர்கள் எவ்வளவு பச்சாதாபத்திற்குரியவர்கள். மேலைத் தேசத்தவர்கள் எங்களை நோக்கி வருகிறார்கள் என்பதை உணராமல், நாங்கள் அவர்களை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோமே. நாங்கள் அவர்களுடன் சேர்ந்து மீண்டும் திரும்பி வருவதைப் பார்த்து நகைக்க இச் சந்ததியோ, மனித இனமோ இருக்குமென்று கூறமுடியாது.

'வீணை மலடு கறந்து இழைத்திட்டோம்', 'உமி குற்றிக் கை சலித்திட்டோம்' என்று நமது தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர், இந்தத் திரும்பிச் செல்லும் பணியில் கால் சலித்த தமிழர்களை நோக்கி நகைப்போடு கண்ணீர் விடுகின்றார்.

இன்று தாழ்வு மனப்பான்மையினால் வந்த வழி மீண்டு செல்வோரைத் தடுத்து நிறுத்த வேண்டியது தமிழர் எல்லோரினதும்

கடமையாகும். இதுவே முடியுமோ என்று கூறமுடியாத சந்தேகத்துக் கிடமான நிலைவரத்தில், இதிலும் மிகவும் பெரிய கடமையும் ஒன்று எங்களுக்கு உண்டு. அதுதான் எங்களுடைய பண்பாட்டை உலகறியச் செய்து தறிகெட்டோடும் மனித இனம் முழுவதையும், எங்கள்பால் ஈர்த்து, மனித இனத்தை உய்விப்பதாகும்.

முயற்சி செய், பலனை எதிர்பாராதே. இரத்தினச் சுருக்கமான இவ்வுரையை ஆறி அமர்ந்து சிந்திக்குமாறு வேண்டுகின்றேன்.

பண்பாட்டை வளர்க்கும் முயற்சியில் மதங்கள் சிறந்த பங்கெடுத்தன. ஆனால், வாழ்க்கைத் தரத்தை உயர்ந்த மதத்தை எப்பொழுது மனிதன் உபயோகிக்கத் தலைப்பட்டானோ அப்பொழுது தொடக்கம் மதத்தின் பயன் மங்கத் தொடங்கியது.

தமிழர்களாகிய நாம் இலக்கியங்களின் மூலமும், சமயத்தின் மூலமும் எமது பண்பாட்டை வளர்த்து வந்திருக்கின்றோம். புலவர்களும் சமயாசாரியார்களும் எமது பண்பாட்டை வளர்க்க, வேந்தர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் உழைத்திருக்கிறார்கள்.

யாம் முன்கூறிய காரணங்களினால் அடிமைகளாக்கப்பட்ட பொழுது - சுதந்திர அரசை இழந்தபொழுது - புலவர்கள் தமது முயற்சியைச் செய்யும் வேகம் தடைப்பட்டது. பெருங்காயம் இட்ட பாத்திரம் போன்று, அருகி அருகியேனும் இம்முயற்சி தொடர்ந்து கொண்டுதான் வந்தது. இன்றைய வார்த்தைகளில் சொல்வதானால் எழுத்தாளர்கள் ஒரு நாட்டின் பண்பாட்டை வளர்க்கும் மாபெரும் தொண்டைச் செய்கிறவர்கள் என்று நம்பி வந்தார்கள்.

அகண்டாகாரமான வெளியில் பிரயாணஞ் செய்யும் ஒருவன் தூரத்தே தோன்றும் மனிதன் ஒருவனைப் போகிறானா வருகிறானா என்று கூறமுடியாது. அதுபோலவே, நீண்ட மனிதசரித்திரத்தின் இலக்கியத்துறையில் வெகுதூரம் முன்னேறிவிட்ட எங்களுக்கு மேலைத்தேச இலக்கியத்துறை எங்களை நோக்கி வருகின்றதா? அன்றேல், நாங்கள் பின்தங்கி விட்டோமா? என்ற மலைப்பைக் கொடுப்பது அதிசயமன்று. அத்தோடு பொருளாதாரத் துறையில் வெகுதூரம் முன்னேறிய மேலைத் தேசத்தவரின் கலைத்துறையும் முன்னேறித்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பதில் அதிக தப்புமில்லை'

**நன்றி - தினகரன் 1963 - 05 - 27**

# சகடயோகம்

- கசின்

# சகடயோகம்

அகடில் மன்னனுக் காறெட் டொடுவியத்தில்
இகடி லாமதி தானு மிருந்திடில்
சகட யோகம் ........

'சுகநாடி' என்னும் சோதிடநூல்.

## அத்தியாயம் - 1

விளக்கிலேதிரி நன்கு சமைந்தது
மேவுவீர் இங்கு தீக்கொண்டு தோழரே!
களங்கமுற்ற இருள்கடந் தேகுவார்
காலைச் சோதிக் கதிரவன் கோவிற்கே
துளக்க முற்றவிண் மீனிடம் செல்லுவார்
தொகையில் சேர்ந்திட உம்மையுங் கூவினார்
களிப்பு மிஞ்சி ஒளியினைப் பண்டொரு
காலம் நீர் சென்று தேடிய தில்லையோ.

- தாகூர், மொழிபெயர்ப்பு : பாரதியார்.

'நமப் பார்வதி பதயே', 'ஹரஹர மஹா தேவா' என்னும் ஒலி, அம்பிகாபுரம் இந்துக் கல்லூரியிற் காலை ஒன்பது மணிக்கு வானைப் பிளந்துகொண்டு சென்றது. மாணவர்கள் எல்லோரும் பரபரப்பாகத் தங்கள் தங்கள் ஆசனங்களில் சென்று இருந்து கொண்டனர். ஆசிரியர்களும் தங்கள் தங்கள் வகுப்பறைகளில் போய் நுழைந்தார்கள். எங்கும் அமைதி.

அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியிற் படித்தவர்கள் இன்று அவ்வூரிலே 'பென்ஸனியர்'களாக இருக்கிறார்கள்; உயர்தர

உத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கையின் உச்சாணிக் கொப்பிலிருந்துகொண்டு பாமர ஜனங்களின் நாளாந்த வாழ்க்கையோடு விளையாடும் சில உயர்தர உத்தியோகஸ்தர்களின் வாலிப நாட்களை அம்பிகாபுரம் இந்துக்கல்லூரி முன்றில் நிற்கும் மாமரங்களைக் கேட்டால் நன்கு சொல்லும். அம்பிகாபுரம் இந்துக் கல்லூரியிற் குறுக்கும் நெடுக்குமாகப் பல கட்டிடங்கள் தோன்றிவிட்டன. ஆனால் அவை அவற்றிற்கூடே நிற்கும் மாமரங்களைப் போல மாணவர்களை மகிழச் செய்வனவல்ல. அந்த மாமரங்கள் வழங்கும் மாங்காய்களைப் போல, அவர்கள் பெற்றார்கள் ஊட்டும் உணவு அவர்களுக்கு சுவையைக் கொடுத்ததில்லை. இப்படிச் சரித்திரப்பிரசித்தம் வாய்ந்த மாமரங்களின் கீழே ஒவ்வொரு நாளும் காலை பதினொன்றரை மணிக்கு எத்தனையோ சம்பவம் நிகழும்.

அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் மாணவர்கள் எல்லோரும் காலை பதினொன்றரை மணியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பதினொன்றரை மணி மாத்திரம் ஒவ்வொரு நாளும் வராவிட்டால் மாணவர்கள் பாடசாலைக்கே போக மாட்டார்கள். பதினொன்றரை மணிக்குக் கல்லூரி மணி அடித்ததும் எல்லார் தேகத்திலும் ஒரு புது இரத்தம் ஓடி உற்சாகத்துடன் துள்ளிக் குதிப்பார்கள். பதினொன்றரை மணியிலிருந்து பத்து நிமிஷம் வரையும் அவர்கள் நிலத்தில் நிற்பதேயில்லை. ஆகாயத்திற்றான் சஞ்சரிப்பார்கள். வாயிற் படிகளால் இறங்கமாட்டார்கள். மேலேயிருந்து குதிப்பார்கள். மெதுவாக நடக்கமாட்டார்கள். துள்ளித் திரிவார்கள்.

கல்லூரி நேரத்தில் மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் பயந்து எவ்வளவு ஒதுங்கி இருப்பார்களோ, அவ்வளவு இந்தப் பத்து நிமிஷ நேரத்திலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயந்து ஒதுங்கி இருந்து கொள்வார்கள். தற்செயலாக ஒரு ஆசிரியர் மாணவர்கள் மத்தியில் அகப்பட்டுக் கொண்டால் அவர் பாடு பெரும் திண்டாட்டமாய்ப் போய் விடும். 'என்ன சேர்; அது சேர்; இது சேர்;' என்று ஆயிரம் கேள்விகளும் நியாயங்களும் கூறி அவரைத் திக்குமுக்காடச் செய்து விடுவார்கள். நீரில் மூழ்கினவர் மாதிரி ஆசிரியர் தத்தளிப்பார். அனேகமாக ஆசிரியர்கள் பலர் அந்த நேரத்தில் ஒதுங்கிக் கொள்வார்கள்.

மாணவர்கள் வேறு கோஷ்டியாகவும், மாணவிகள் வேறு கோஷ்டியாகவும் ஆங்காங்கே நின்று கும்மாளம் அடிப்பார்கள்.

தற்செயலாக ஒரு மாணவி பையன்களின் கோஷ்டிக்குள் சென்றாளா னால் அவள் அழுதுகொண்டு திரும்பவேண்டியும் நேரிடும். அவள் எவ்வளவு வாய்க்காரியானாலும் அவ்வளவு பையன்களின் பலவிதமான பேச்சுக்களுக்கும் ஒருத்தி எப்படிப் பதில் சொல்ல முடியும்? அவள் ஒரு மாதிரித் தப்பிச் சென்றாலும் பையன்களின் கூட்டத்திற்குட் போய் வந்ததற்காக அவளின் சகமாணவிகள் அவளைக் கேலி செய்யாமல் விடமாட்டார்கள்.

அது போலவே, ஒரு பையன் மாணவிகளின் கோஷ்டிப் பக்கம் சென்றானானால் அவனைத் திணற அடித்து விடுவார்கள். 'அங்கே பார்; இங்கே பார்; என் கதையைக் கேள்; அவள் கதையைக் கேள்;' என்று அவனை ஒரு பைத்தியமாக்கி விடுவார்கள். மீண்டு சென்ற பையனை ஏனைய பையன்கள் வம்புப் பட்டம் கட்டிவிடுவார்கள்.

ஒருத்தி பையன்கள் பக்கம் பார்த்தால் போதும்; அன்றைக்கு அவளுடைய கதைதான் மாணவிகள் எல்லோருக்கும் பொழுது போக்கு. ஒருவன் பெண்கள் பக்கம் பார்த்தாலே போதும்; மாணவர் கூட்டம் ஆர்த்தெழும்.

இப்படி மாணவர்களையும் மாணவிகளையும் அந்தப் பத்து நிமிஷ நேரத்தில் இயற்கை பிரித்துவிடுகின்றது. இயற்கைக்குத் தெரியாதா? அவர்கள் சேர்ந்திருந்தால் ஆபத்து என்று. ஆனால் என்னதான் இயற்கை பிரித்துவைத்த போதிலும், எப்படித்தான் மாணவர் கள் ஒருவருக்கொருவர் காவலாக இருந்தபோதிலும் அவற்றையும் வென்று கொண்டு சில காரியங்கள் நடக்காமல் விடவில்லை.

அம்பிகாபுரம் இந்துக் கல்லூரி மணி காலை பதினொன்றரை மணிக்கு அடித்ததும் மாணவர்கள் எல்லோரும் நான்முந்தி நீமுந்தி என்று வெளியே போவார்கள். அந்தப் பத்து நிமிஷத்தில் ஒரு செக்கனையும் வீணாக்காமல் கழிப்பதற்காக அவர்கள் ஆத்திரப் படுவார்கள். அந்தப் பரபரப்பில் தன்னை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள் என்று தெரிந்த, ஜன்னல் ஓரத்தில் இருக்கும் ஜே.எஸ்.ஸி. மாணவன் சதாசிவம் ஒரு காகிதத் துண்டை வெளியே போடுவான். சில செக்கனுக்குள் அவனுடைய மடியில் வேறு ஒரு காகிதத் துண்டு வந்து விழும்.

அக்கடிதங்கள் இரண்டிலும் உருப்படியான விஷயங்கள் ஒன்றும் இராது. விஷயமறியாதவர்களின் கடிதங்களில் என்ன விஷயமிருக்கப் போகிறது. 'மானே, தேனே' என்றும், 'இந்திரனே, சந்திரனே' என்றும்,

அர்த்தமற்ற வார்த்தைக் கூட்டமாகத்தான் இருக்கும். அதுவும் வாழ்க்கையே என்னவென்று தெரியாத பள்ளிச் சிறுவர்களின் கடிதம் என்றால் கேட்கவா வேண்டும்! பருவம் வந்த மாணவர்கள் படிக்கும் உயர்தர வகுப்புக்களில் இப்படியான நாடகங்கள் நடப்பது சர்வ சாதாரணம்.

சதாசிவம் சாதாரண குடும்பத்திற் பிறந்தவன்; அவன் ஒரு உத்தியோகத்தனின் மகனல்லன். அவனுடைய தகப்பனார் ஒரு கைவந்த கமக்காரன். சதாசிவம் காலையும், மாலையும் பள்ளிப் படிப்போடு கம வேலையும் செய்வான். தனது வீட்டு வேலைகளில் உள்ள கவனமளவு படிப்பிலும் கவனமுள்ளவன். கஷ்டப்பட்டுப் படித்து வகுப்பில் முன்னுக்கு வந்துவிடுவான்.

அவனை வகுப்பில் முந்தவேண்டுமென்ற முயற்சியோடு படிப்பவள் சந்திராதேவி. அதனால் சதாசிவத்திற்கும் சந்திராதேவிக்கும் பகை மூண்டு வந்தது. சதாசிவமே அதிகமாக முதலாமாளாக வரலானான். ஆனால், சந்திரா ஒரு முறை முதலாம் பிள்ளையாக வந்துவிட்டாள். அதிலிருந்து அவன் மிகவும் கடுமையாக முதலாவதாக வருவதற்கு முயற்சி செய்தான். அதனால் அவளுக்குச் சதாசிவத்தின் மேல் பொறாமை ஏற்பட்டது. ஒருவரையொருவர் பகைத்தனர். ஒருவர், பாடநேரத்தில் சிறிது பிழை விட்டாலும், மற்றவருக்குச் சிரிப்புப் பெரிதாக வந்துவிடும். பரீட்சை நெருங்கி விட்டால், இரவு பகல் நித்திரையின்றிப் பொறாமையுணர்ச்சியோடு படிப்பார்கள்.

பரீட்சை நடைபெறலாயிற்று. கணித பாடம்; சந்திரா கணித பாடத்திற்றான் குறைவு. பரீட்சை மண்டபத்திற் சதாசிவமும் சந்திராவும் அருகருகே இருக்கின்றனர். நேரம் போய்க்கொண்டிருந்தது. சந்திராவால் மேலே கணக்குச் செய்ய முடியவில்லை. சதாசிவம் விரைவாகச் செய்து கொண்டு போகிறான்.

சந்திரா சுற்றுமுற்றும் பார்த்தாள். சதாசிவம் செய்த கணக்குக ளெல்லாம் அவளுக்கு நன்கு தெரிந்தது. மறுமொழிகளும் தெளிவாகத் தென்பட்டன. தெரிந்துகொண்டு அவளால் சும்மா இருக்க முடியவில்லை. பார்த்து எழுதத் தொடங்கிவிட்டாள். சதாசிவம் பார்த்தெழுதவிடாமல் மறைத்திருக்கலாம். அவனுடைய இரக்க உணர்ச்சி அவனை அப்படிச் செய்யவிடவில்லை. இருந்தபோதிலும் பார்த்தெழுதினாளானால் தன்னை வகுப்பில் முந்தி விடுவாள் என்று அவன் உடனே நினைத்தான்.

அவளைப் பார்த்து எழுதவிடப்படாது என்று எண்ணிக்கொண்டு கையை எடுத்துத் தனது விடைத்தாள்களை மறைக்கப் போகுஞ் சமயம், சந்திரா அவனைப் பார்த்தாள். அவனும் பார்த்தான். அந்தப் பார்வை அவன் மனதை முற்றாக நெகிழச்செய்துவிட்டது. பாவம்; அவன் மேலே மறைக்க முயற்சிக்கவில்லை.

சந்திராவே முதலாம் பிள்ளையாக வந்தாள். ஆனால் அந்த இரகசியம் சந்திராவுக்கும், சதாசிவத்துக்குமல்லவா தெரியும். சந்திரா பெருமைப்படவுமில்லை; சதாசிவம் பொறாமைப்படவும் இல்லை.

அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு அன்புணர்ச்சி வளர்ந்து வந்தது. பாடநேரத்தில் ஆசிரியர் கூறும் சம்பவங்களை, ஒருவரை யொருவர் பார்த்து பகிர்ந்து இரசித்தனர். அவள் பார்க்க அவனும் பார்ப்பான். அவ்வளவு அவர்களுக்கிடையில் ஒற்றுமையிருந்தது. அவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்குமிடையில் எவ்வளவோ வித்தியாசம் இருந்தது. அவர்களிலும், தாங்கள் எல்லா விதத்திலும் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்கள் இருவருக்கும் இருந்தது.

தங்கள் நட்பை எவரும் அறியமாட்டார்கள் என்று தமக்குள் ஒரு பெருமையாகவும் எண்ணிக்கொண்டனர். கலாசாலையால் வீட்டுக்குப் போனதும், மற்றவர்களுடன் சேராமல், தனிமையிற் படித்துக் கொண்டும், சிந்தித்துக் கொண்டும் இருப்பார்கள். அவர்கள் காதல் வயப்பட்டவர் களோ? கல்வி வயப்பட்டவர்களோ? என்று பார்த்தவர்கள் இலகுவிற் கூறமுடியாது. அவ்வளவு ஆழமானவர்கள்; அமைதியானவர்கள்.

# அத்தியாயம் - 2

காதல் புரியும் அரம்பையர் போலிளம்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு

- பாரதியார் பாடல்.

சில நாடுகள் செழிப்பு மிகுதியால் அங்கேயுள்ளவர்களைச் சோம்பேறிகளாக்கி விடுகின்றது. சில வரட்சி மிகுதியால் உழைப்பாளிகள் ஆக்கி விடுகின்றன. அம்பிகாபுரம் இந்த இரண்டு வகுப்பிலும் அடங்கா மல் அளந்து வைத்த மாதிரி பாடுபட்டவர்களுக்குத் தக்க பலனைக் கொடுத்து வந்தது. அதனால் அது அழகு வாய்ந்தும் விளங்கியது.

அம்பிகாபுரத்தை ஒரு நகரம் என்றும் சொல்லமுடியாமல், ஒரு கிராமம் என்றும் சொல்ல முடியாமல், இரண்டு வகையான இலக்கணங் களும் பொருந்திய எல்லோரையும் கவரும் தன்மை வாய்ந்து விளங்கி யது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வருபவர்கள் அம்பிகாபுரத்தைத் தரிசிக்காது போகமாட்டார்கள். அம்பிகாபுரம் யாழ்ப்பாணப் பட்டினத்தி லிருந்து பத்து மைல் தூரத்திலே பெரிய தெருவில் அமைந்துள்ளது.

நீதிஸ்தலம், நகர் காவலர் நிலையம், யாழ்ப்பாணத்திலேயே பேர் போன சந்தை, பகட்டான கடைவீதி, இவைகள் எல்லாம் ஊருக்கு மத்தியிலே அமைந்திருந்தன. அம்பிகாபுரத்தின் தெற்கு அரணாக நீண்ட வயல் வெளியும், இரண்டு அழகான தாமரைக் குளங்களும் இருந்தன. ஒன்றிலே பெண்கள் நீராடுவார்கள். மற்றதில் ஆண்கள் நீராடுவார்கள். பெண்கள் நீராடும் குளத்தில் செந்தாமரையும், ஆண்கள் நீராடும் குளத்தில் வெண்டாமரையும் அழகுசெய்தன. பெண்களின் குளக்கட்டில் கடப்பமரங்கள் பூத்துக் குளக்கட்டைச் செந்நிற மணிகளால் இழைத்த குன்று போல் அழகு செய்தன. ஆண்களின் குளக்கட்டில் மருத மரங்கள் பூத்துக் குளக்கட்டைத் தங்கத் தகடுபோல் மிளிரச் செய்தன. இந்தக் குளங்களில் ஸ்நானம் செய்தால் மலடு நீங்குமென்று பரம்பரைக் கதை. அது எவ்வளவு உண்மையோ தெரியாது. ஆனால், நான் அறிந்த வரையில் அந்த ஊரில் மலடுகள் கிடையாது. இன்னும் சிலர் குழந்தையில்லாத தம்பதிகள் அவ்வூரில் உத்தியோக சம்பந்தமாக வந்து இருந்து குழந்தை குட்டிகளைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள்.

அம்பிகாபுரத்தில் துன்பத்துடன் உலாவுபவர்களைக் காண முடியாது. உற்சாகமும், மகிழ்ச்சியும் எல்லார் முகத்திலும் தென்படும்.

நோயாளிகளையும், சோம்பேறிகளையும் காணமுடியாது. ஆண்களும், பெண்களும் துள்ளித் திரிவார்கள். அம்பிகாபுரம் அழகுள்ள மக்களுக்குப் பேர்போனது என்று யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் பேசிக் கொள்வார்கள்.

போக பாக்கியங்கள் குறைவற்ற அம்பிகாபுரத்தை யாழ்ப்பாணம் கண்டி றோட்டு இரண்டாகப் பிளந்துகொண்டு செல்கிறது. பெண்கள் தங்களைச் சிங்காரித்துக்கொண்டு உல்லாசமாக நடந்து செல்வார்களா னால், அத் தெருவினால் செல்லும் நீண்டதூரப் பிரயாணிகளும், தங்கள் பிரயாணக் களைப்பை மறந்து ஒருமுறை ஸ்தம்பித்து நிற்பார்கள்.

அம்பிகாபுரம் கிழக்கு மேற்கென இரு பிரிவுகளை உடையது. மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் உத்தியோகஸ்தர்களும் பென்சனியர் களும் ஆவர். ஆங்காங்கே அழகான கல் வீடுகள் உண்டு. அவற்றிற்கு ஊடே வளைந்து ஓடிச்செல்லும் ஒழுங்கைகளையுங் காணலாம். ஒழுங்கையின் இரு பக்கமும் தென்னங் கீற்றினால் வரிவரியாக அடைக்கப்பட்ட அழகான வேலிகள். தென்னங் கீற்றுகள் பொருத்தப் பட்ட இடந்தெரியாமல் வரியாகச் செல்லும். சிறிது தூரத்துக்கொரு சங்கடக் கொட்டில், சங்கடக் கொட்டிலின் இரு பக்கமும் அழகான இரு திண்ணைகள், அகத் திண்ணைகளிற் பளபளப்பும், வில்லு வடிவமும் பொருந்திய தொந்தியையுடைய ஒரு பென்சனியர் வெள்ளிப் பூண் போட்ட பிரம்பு சகிதம் இருப்பார். அவரின் மக்கள், மருமக்கள் எல்லோரும் இலங்கையின் பல பாகங்களிலும் உத்தியோகமாக இருப்பார்கள்.

கிழக்குப் பகுதியில் இப்பொழுதுதான் ஆங்காங்கே உத்தியோ கஸ்தர்கள் தோன்றி வருகின்றனர். அங்கே பென்சனியர்கள் கிடையா; அங்கே சங்கடக் கொட்டில்களே கிடையா. அருமையாக ஒன்று இரண்டு இருந்தாலும் அதிற் குந்தியிருந்து பொழுது போக்குவார் அபூர்வம். நீண்டு நிமிர்ந்து செல்லும் மண் ஒழுங்கைகளை அங்கே காணலாம். ஒழுங்கையின் இரு மருங்கும் பார வண்டிகள் செல்வ தனால் உண்டாகும் இரு ஆழமான கோடுகளைக் காணலாம். பனை ஓலை வேலிகளும், அலம்பல் வேலிகளுமே அந்தப் பகுதியில் உண்டு.

இந்தக் கிழக்குப் பகுதியிலேதான் சதாசிவத்தின் வீடு. அவனுக்கு ஒரு தமக்கையும் ஒரு தங்கையும் உண்டு. சதாசிவத்தை உத்தியோகத் தனாக்கி விட வேண்டுமென்ற எண்ணத்தினால் அவன் தகப்பனார் அவனை அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியிலே சேர்த்தார். இன்னும்

அவன் கெட்டிக்காரன் என்று பெயர் வரவே அவனுக்குத் தேவையான சௌகரியங்களைக் கொடுத்து ஊக்குவித்தார். சதாசிவத்தின் தகப்பனாருக்கு புராணங்களுக்குப் பயன் சொல்லத் தெரியுமே அன்றி வேறுவிதமான படிப்பு அவர் படிக்கவில்லை. 'உத்தியோகம் புருஷ இலட்சணம்' என்று, காலப்போக்கில் அவனையும் படிக்க வைத்தார்.

சந்திரா மேற்குப் பகுதியில் வசிக்கும் ஸ்ரேசன் மாஸ்டர் நாகலிங்கம்பிள்ளையின் மூத்தமகள். சந்திராவுக்குச் சதாசிவத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவன் யாருடைய மகன் என்றாவது, கிழக்குப் பகுதியில் எவ்விடத்தில் அவனுடைய வீடு என்றாவது அவளுக்குத் தெரியாது. அதுபோலவே, சதாசிவத்திற்குச் சந்திரா யாருடைய மகள் என்றாவது, எவ்விடத்தில் அவளுடைய வீடு என்றாவது தெரியாது. கல்லூரியிலேயே அவர்களுடைய காதல் வளர்ந்து வந்தது. ஆனால், கல்லூரியில் எவர்களுக்காவது இவர்களுடைய காதலைப் பற்றி ஒன்றுமே தெரியாது.

ஆனால், எல்லோருக்கும் தெரிந்த இன்னொரு காதல் அங்கே நடந்து வந்தது. சந்திராவினுடைய தங்கை சாரதாவும் அதே வகுப்பிற் படித்து வந்தாள். சாரதா கல்லூரி முழுவதிலும் அழகு வாய்ந்தவள் என்றும் சொல்லலாம். இனிமையாகப் பாடுவாள். எவர்களோடும் சகசமாகப் பழகுவாள். தனது சினேகிதிகளுக்குத் தனது மனதை விட்டுரைப்பாள். அவளுடைய காதலனை எடுத்துப் பேசினாலும் கோபிக்க மாட்டாள். சிரித்துக்கொண்டு போய்விடுவாள். அவர்களுடைய காதலைப் பற்றி அவர்கள் பெற்றோர்கள் வரையில் கூடத் தெரிந்திருந்தது என்று சொல்லலாம்.

சாரதாவின் காதலன் மகாதேவன். அவன் 'ஓவசியர்' கணபதிப் பிள்ளையின் மகன். உயர்ந்த தோற்றமும் மிடுக்கான போக்கும் உடையவன். சளா புளா என்று பேசமாட்டான். நிதானமாக நடந்து கொள்வான். அவனுடைய போக்கைக் கண்டு சிலர் அவனுக்குச் சாரதா மீது காதல் இருக்கிறதா என்று கூடச் சந்தேகப்படுவார்கள். அவனுடைய வீடு சாரதாவின் வீட்டுக்கு அருகே உள்ளது. அவர்கள் சிறுபராயம் தொடக்கம் கூடியே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அவர்கள் கல்லூரி விட்டதும் கூடியிருந்துதான் படிப்பார்கள். ஒருவர் புத்தகம் ஒருவரிடத்தில் இருக்கும். ஆகவே இவர்களுடைய உறவு எல்லோருக்கும் பழகிப் போய் விட்டது. இவர்களுடைய காதலைக்

கண்டு எவர்களும் ஆச்சரியப்பட மாட்டார்கள். அறியாதார் சகோதரர் என்று நினைக்கக்கூடும்.

இவர்கள் இருவரும் வகுப்பின் மூன்றாம் இடத்துக்குப் போட்டி யிடுவார்கள். ஆனால், இவர்களுக்குள் பகைமையாவது, பொறாமை யாவது கிடையாது. மூன்றாமிடத்தைத் தங்களில் ஒருவர் அன்றிப் பிறர் அணுகாது உற்சாகமாகப் படிப்பார்கள். இவர்களின் அதிக முயற்சி யினால் மூன்றாம் நான்காம் பிள்ளைகளாக வந்து விடுவார்கள்.

இவர்களைப்போல் முயற்சியின்றி இன்னொரு இடத்தைக் கைப்பற்றுகிறவர்கள் இருவரும் அந்த வகுப்பில் உளர். வகுப்பின் கடைசி ஸ்தானத்திற்கு அவர்கள் போட்டியிடுவார்கள். முப்பது பேர் உள்ள அந்த வகுப்பில் முப்பதாம் பிள்ளையாக நிச்சயம் அவர்களில் ஒருவர் வந்தே தீருவார்கள்.

அவர்களில் ஒருவன் சண்முகம்; அவனும் கிழக்குப் பகுதியி லேயே வசித்து வந்தான். சுமாரான சொத்துடையவன். அவனின் தகப்பனார் சிறிதும் படியாதவர். சாதிப் பித்துக் கொண்டவர். மகன் என்ன வழியில் போகிறான் என்பதுகூட அவருக்குத் தெரியாது. தானும், 'ஏன் மகனைப் படிப்பிக்கக்கூடாது' என்று படிப்பிக்கிறார். 'தன் மகன் படிப்பானா? எல்லா வகுப்புகளும் பாஸ் பண்ணுவானா?' என்று அவருக்குத் தெரியாது.

சண்முகம் ஒரு முரடன்; மற்றவர்கள் மெச்சக்கூடிய காரியம் எதுவானாலும் செய்துவிடுவான். படிப்பிற்கும் அவனுக்கும் வெகுதூரம். அவனுக்குக் குடிப்பழக்கம் உண்டு என்று கூடச் சொல்லிக் கொள்ளு கிறார்கள். அவன் தன்னோடு முப்பதாம் இடத்துக்குப் போட்டிபோடும் இராஜேஸ்வரி என்பவளைக் காதலித்தான்.

இராஜேஸ்வரி அப்பக்காரப் பொன்னமாவின் மகள். அம்பிகாபுரம் சந்தைக்கருகிலேதான் அவளுடைய வீடு; சண்முகம் எவ்வளவு இராஜேஸ்வரியைக் காதலித்தானோ அவ்வளவு இராஜேஸ்வரி அவனை வெறுத்தாள். அவள் எவ்வளவுதான் வெறுத்தாலும் சண்முகத்தால் அவளை வெறுக்க முடியவில்லை.

இராஜேஸ்வரி பல நியாயங்களினால் அவனை வெறுத்தாள். அவள் தான் ஒரு உத்தியோகஸ்தனை மணக்க மனக்கோட்டை கட்டி வந்தாள். சண்முகம் படித்துப் பாஸ் செய்வதுமில்லை. உத்தியோகம் பார்ப்பதுமில்லை என்று அவளுக்கு நன்கு தெரியும். இனிச் சண்முகம்

சில தருணங்களில் முரட்டுத்தனமான காரியங்களும் செய்து விடுகின் றான். அதனால் அவள் மேலும் மேலும் அவனை வெறுத்து வந்தாள்.

ஒரு நாள் சண்முகத்திற்குக் கத்தரிக்கோல் தேவைப்பட்டது. இராஜேஸ்வரியிடம் சென்று கத்தரிக்கோல் கேட்டான். அவள் கொடுக்க வில்லை. அவன் தானே அவள் பெட்டியைத் திறந்து கத்தரிக்கோலை எடுத்தான். அவள் தடுத்தாள். அவள் கன்னத்தில் 'பளார்' என்று மின்னிவிட்டுக் கத்தரிக்கோலையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான். மாணவர்கள் எல்லோரும் சண்முகத்தை மெச்சினர். மாணவிகள் இராஜேஸ்வரியைப் பழித்தனர். அவள் அழுதுகொண்டு சென்று ஆசிரியருக்கு முறையிட்டாள். ஆசிரியர் சண்முகத்திற்குப் பிரம்பால் இரண்டு கொடுத்தார்.

இன்னொருநாள்; சண்முகம் மணிக்கூட்டுக் கம்பியை மூன்று மணியில் நின்றதை, நான்கு மணியாக முறுக்கி விட்டான். அதை இராஜேஸ்வரி ஆசிரியருக்குச் சொன்னாள். அதற்கும் பிரம்பு உபயோகிக்கப்பட்டது.

என்னதான் இராஜேஸ்வரி செய்தாலும் சண்முகம் அவளை வெறுக்கமாட்டான். இராஜேஸ்வரி சுமாரான அழகுடையவள். சண்முகத்தைக் கேட்டால் இராஜேஸ்வரியைப் போல இவ்வுலகிலேயே அழகுள்ளவள் கிடையாது என்பான்.

அவள் மேனி மாந்தளிர் போன்ற நிறமும் நல்ல தேகக்கட்டு எல்லாவற்றினும் மேலாக அவளின் கண்களின் இந்திரஜாலவித்தை எல்லோரையும் தன்னுணர்விழக்கச் செய்யும். அவள் கண்கள் சண்முகத்தை அப்பால் இப்பால் நகரவிடாது, அவனையே சுற்றிச் சுற்றித் திரியச்செய்யும். அதனால் சண்முகம் தான் படிக்கிறேன் என்பதையே மறந்து விட்டான். அவனுடைய இயற்கை விவேகத்தை அவளுடைய கண் மழுக்கிவிட்டது. அவளுடைய கண் இமை மயிர்கள் எந்நேரமும் சிலிர்த்துக்கொண்டு நிற்கும். அந்தச் சிலிர்த்த கண்ணிமை அசையச் சண்முகம் மண்டியிடுவான். அவள் வானத்தை வில்லாய் வளையென்றாலும், மண்ணைக் கயிறாய்த் திரி என்றாலும் அவன் செய்யத் தயாராக இருந்தான்.

# அத்தியாயம் - 3

'புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொற்
சொன்னாராயினும் அகத்துச் செறு தலிலாதார்
சொற் பிற்பயத்தல், குறையுற்றாராற் கடிதினறியப்படும்

- திருக்குறள், பரிமேலழகர் 1096.

சிறு வயதிலே, வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அறியாத வயதிலே, உண்டான காதல், அநேகமாக வளர்ந்த பராயத்திலே கனவு போலத் தோன்றும். காதலர்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் செய்து கொண்ட உறுதிப்பாடுகள் எல்லாம் காலத்திலே மெல்ல மெல்லத் தளரும். தாங்கள் உலகத்திற் காணுகின்ற ஒவ்வொரு புதிய அனுபவங் களும் அவர்கள் உறுதிப்பாட்டின் ஒவ்வொரு கட்டை அவிழ்த்துவிடும். இறுதியில் இருவரும் பூரண விருப்பத்துடனே வாழ்க்கையில் வெவ் வேறாக இறங்குவர்.

ஆயிரத்திலே ஒன்றாக வாலிபர்கள் தங்கள் காதலை விடாது சாதிப்பர். அதனால் அவர்கள் மிகுந்த துன்பத்துக்கும் ஆளாவர். அதிஷ்டவசமாகச் சிலர் காதல் இலகுவாக நிறைவேறி விடுதலுமுண்டு. எனினும், அவர்கள் வாழ்க்கையை முழுதும் இருந்து பார்க்க வேண்டும்.

சதாசிவத்தின் கல்லூரிப் படிப்பு மிக விரைவிலேயே நின்று விட்டது. அவன் மிகவும் பெரிய நிலைக்கு வரக்கூடியவன் என்று, சந்திராவேயன்றி ஆசிரியர்கள் கூடச் சொல்லி வந்தனர். இலங்கையின் அரசாட்சி பீடத்தின் பெரிய தூணாக ஒரு காலத்தில் விளங்குவான் என்று பலர் நம்பியிருந்தனர்.

'தந்தையின் பிரிவு' என்னும் ஒரு நிகழ்ச்சி அவனுடைய வாழ்க்கை முழுவதையும் திருப்பி விட்டது. அந்தக் காலத்தில் இலவசக் கல்வித்திட்டம் கூட இல்லை. வேறு வழியின்றி அவன் சுயபாஷா பாடசாலைக்குத் திரும்பி வந்தான்.

அங்கேயும் அவன் தடையின்றிச் செல்ல முடியவில்லை. தமிழ் எஸ். எஸ். சி. சித்தியடைந்ததும் ஆசிரிய கலாசாலையில் சேர வேண்டி யிருந்தது. ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய போட்டிக்கிடையில் ஆசிரிய கலாசாலைக்குள் பிரவேசிக்க முயற்சி செய்தல் வேண்டும். அவரை இவரைப் பிடித்துக் கொல்லைப்புறத்தால் உதவியளிக்கக்

கூடியவர்களுமில்லை. அவன் தனது தளரா ஊக்கத்தையே நம்பி யிருந்தான்.

போட்டிப் பரீட்சையில் முதலாவதாகச் சித்தியடைந்தமையினால் எவரின் உதவியின்றியும் அவன் ஆசிரிய கலாசாலையில் நுழைந்து விட்டான். அங்கே மூன்று வருஷங்களைக் கழிக்க வேண்டும். அந்த மூன்று வருஷங்களும் அவனுக்கு மூன்று யுகங்கள் போலத் தென்பட்டன. சதாசிவத்தையே நம்பியிருக்கும் அவனுடைய இளைய சகோதரி ருக்குமணி இருந்தாள். அவனுடைய மூத்த சகோதரி ஒரு ஆசிரியரை மணந்திருந்தாள். அவளுடனேயே இவள் வசித்து வந்தாள். தான் கலாசாலையால் வெளிப்பட்டு ருக்குமணியைக் கரையேற்ற வேண்டும். அதன்பின் சந்திராவை விவாகஞ் செய்ய வேண்டும். சந்திராவைத் தான் விவாகம் செய்யாவிட்டால் விவாகம் செய்வ தில்லையென்றும் சந்திராவுக்குச் சத்தியவாக்குக் கொடுத்தி ருந்தான்.

சதாசிவம் சத்தியவாக்கை இலகுவில் மீறுபவன் அல்லன். அவன் தனது வாழ்க்கையின் பிற்காலத்தைப் பற்றி எந்நேரமும் யோசித்துக் கொண்டிருப்பான். இவனைக் கவனித்து வந்த இவன் வகுப்பில் படித்துவந்த கந்தசாமி என்பவன், தீர்க்க யோசனையும் விவேகமுமுள்ளவன்.ஒவ்வொரு விஷயங்களையும் அலசி நோக்குபவன். சதாசிவத்தின் மேல் அவனுக்கு நல்ல எண்ணம் உதயமாயிற்று. இருவரும் விரைவில் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். ஒருவருக் கொருவர் மனம்விட்டுப் பேசினர். சதாசிவம் மெல்லமெல்லத் தனது சரித்திரம் எல்லாவற்றையும் சொன்னான்.

சதாசிவம் கந்தசாமிக்குத் தனது காதல் விஷயத்தையும் சொன்னான். சந்திரா தன்மேல் பூண்டிருக்கும் அன்பை விளக்கினான். கந்தசாமி 'விட்டுத்தள்ளு, இந்தக் காலத்தில் பெண்களின் கதையை' என்று எடுத்தெறிந்து பேசினான்.

சதாசிவம், ஆற்றாமல் சந்திரா கடைசியாக எழுதிய காகிதத்தைக் காட்டினான். 'என் ஆருயிர்க் காதல; ...... நாங்கள் வாழ்க்கையில் இனிமேல் எப்பொழுது சந்திக்கிறோமோ தெரியாது; ஒருவேளை ஒருபொழுதுமே சந்தியாமல் விடுகிறோமோவும் தெரியாது. ஆனால் ஒரு வார்த்தை மட்டும் நிச்சயம்..... உங்களையல்லாமல் நான் ஒருபோதும் ஒருவரையும் விவாகம் செய்ய மாட்டேன்....." இந்தப் பகுதியைச் சதாசிவம் சுட்டிக் காட்டினான்.

'இந்தக் கடிதம் கல்லூரிப் பெண்கள் சாதாரணமாக எழுதும் கடிதம். இன்று ஆசிரியராகப் பயிற்றப்படுகிற நீ இதன் ஆழத்தை அறியாமல் இருக்கிறாயே. இந்தக் கடிதம் ஒரு வருஷத்துக்கு முன் எழுதப்பட்டது. இன்றைக்கு அவள் உன்னைக் கண்டால் அடையாளம் தெரிந்துகொள்வாளோ என்றுகூடச் சொல்ல முடியாது. காதல் என்பது இந்தக் காலத்தில், உத்தியோகம், பணம், இவைகளின் அத்திபாரத்தி லிருந்துதான் அரும்புகின்றது. நீ எப்பொழுது ஆங்கிலப் படிப்பை நிறுத்தினாயோ, அப்பொழுதே இந்தக் காதலையும் கைகழுவி விட்டிருக்க வேண்டும்" என்று பெரிய பிரசங்கம் ஒன்று கந்தசாமி செய்துவிட்டான். அவன் செய்த பிரசங்கம் அவ்வளவும் உண்மை என்றே அந்நேரத்தில் சதாசிவத்திற்குத் தோன்றும். பின்னர், 'ஆகா! சந்திராவையும் அப்படிச் சொல்லலாமா என்று நினைப்பான். சந்திராவைப் பூரணமாக அவனால் மறக்க முடியவில்லை.

கந்தசாமிக்கும் சதாசிவத்திற்கும் வரவர அன்பு முற்றிக்கொண்டு வந்தது. சதாசிவத்தின் வீட்டுக்குக் கந்தசாமியும், கந்தசாமியின் வீட்டுக்குச் சதாசிவமும் போய் வந்தார்கள். சதாசிவத்தின் தங்கை ருக்குமணியில் கந்தசாமிக்கு விருப்பமேற்பட்டது. சதாசிவத்தின் மேல் கொண்ட அன்பினாலா அன்றேல் ருக்குமணியின் பழக்க வழக்கங் களினாலா, கந்தசாமிக்கு ருக்குமணிமேல் அன்பு ஏற்பட்டது என்று சொல்ல முடியாது.

சதாசிவமும் கந்தசாமியும் சதாசிவத்தின் வீட்டுக்குப் போகின்ற நாட்களில் ருக்குமணியே அவர்களை உபசரிப்பாள். கந்தசாமி வெகு உன்னிப்பாக ருக்குமணியின் நடவடிக்கைகளைக் கவனித்து வருவான். கந்தசாமி இயற்கையிற் சந்தேகப் பிராணி; எதிலும் பிழையையே முதல் கவனிப்பவன். ருக்குமணி மேல் அவனால் ஒரு குற்றமும் கண்டுபிடிக்க முடியவில்லை.

தனது விருப்பத்தை ஒரு நாள் சதாசிவத்திடம் கந்தசாமி சொன்னான். சதாசிவம், "எனக்குச் சீவியத்திலேயே இதைவிடப் பெரிய உதவி நீ செய்ய முடியாது" என்று சொன்னான்.

"எனது பூரண சம்மதத்தை உனக்குத் தெரிவிக்க முன், நான் ஒரு சோதனை நடாத்தப் போகிறேன்."

"நன்றாய் நடத்து; என்ன மாதிரி?"

"நான் ருக்குமணிக்கு ஒரு கடிதம் எழுதப் போகிறேன். அவளின் பதிலைப் பார்த்து, நான் எனது பதிலை உனக்குச் சொல்லுகிறேன்; எனது பதில் பெரும்பாலும் சாதகமாகத்தான் இருக்கும்."

"சரி நடத்து" என்று சதாசிவம் புன்சிரிப்போடு சொன்னான்.

மறுகிழமை சதாசிவத்திற்கு ருக்குமணியிடமிருந்து ஒரு பெரிய கடிதம் வந்தது. அக்கடிதத்திற்குள் கந்தசாமியின் கடிதமும் இருந்தது. கந்தசாமியின் கடிதம் எந்தப் பெண்ணின் நெஞ்சையும் நெகிழச் செய்யும் தன்மை வாய்ந்தது. அவன் தனது காரியத்தைப் பக்கம் பக்கமாகப் புலப்படுத்தியிருந்தான். இரவிலும், பகலிலும், நினைவிலும், கனவிலும், எந்த நேரத்திலும், எல்லாம் உன் மயமாகவே இருக்கிறது; என்று, 'தூண்டில் புழுவினைப் போல் துடிக்கின்றேன்' என்ற பாணியில் எழுதியிருந்தான்.

அக்காகிதத்திற்கு அவள் சிறிதும் அருளாமல் அதை அப்படியே தமையனுக்கு அனுப்பி விட்டாள். சதாசிவம் அப்படியே கந்தசாமியிடம் கொடுத்தான். கந்தசாமி துள்ளிக் குதித்தான். 'இவள்தான் பெண்; உனது சந்திரா இவளின் கால் தூசுக்கு வருமா?' என்று பரவசப்பட்டான்.

சதாசிவம் அவன் பேச்சை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தான். தனது சகோதரியின் குணம் அவனுக்கு நன்கு தெரியும். ஆகையால், சதாசிவம் அவனுடைய பேச்சில் ஆச்சரியப்படவில்லை. ஆனால் தனது தங்கையும் கல்லூரியில் படிக்கிறவளாக இருந்தால் எப்படியிருப்பாள்? என்று ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான்.

இதன் பின்னர் கந்தசாமி சதாசிவத்தின் வீட்டுக்குப் போவதில்லை. சதாசிவம் வீட்டுக்குப் போகும்பொழுது இன்னொருவரை ருக்குமணி எதிர்பார்க்கிறாள் என்பதை அவன் நன்கு உணர்ந்தான். ஆனால் ருக்குமணி ஒரு நாளாவது கந்தசாமியைப் பற்றி விசாரித்தவளல்லள்.

இரண்டு மூன்று தடவை கந்தசாமி இல்லாமல் சதாசிவம் போகவே ருக்குமணி பெரிதும் மன விசாரப்பட்டாள். தன்மேல் கந்தசாமி கோபித்துக் கொண்டான் என்று அவள் திடமாக நம்பினாள். அவளுடைய மன வருத்தத்தைச் சதாசிவம் குறிப்பால் உணர்ந்து கொண்டான்.

'கந்தசாமி எழுதிய கடிதத்தைத் திருப்பித் தமயனுக்கு அனுப்பி னதினால் கந்தசாமிக்கும் தமையனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக் குமோ? அன்றேல், தான் மறுமொழி எழுதவில்லையென்று கோபித்துக் கொண்டு வராமல் இருக்கின்றானோ?' என்று பலவாறு சிந்தித்தாள். மகிழ்ச்சியும் உற்சாகமும் ததும்ப என்னேரமும் துள்ளித் திரிகின்ற ருக்குமணி இப்பொழுது சிந்தனை வசப்பட்டுச் சோம்பலாய் இருந்தாள்.

'ருக்குமணிக்கும் அவன் பேரில் காதல் இருந்தும் தனது நெறியி லிருந்து தப்பாமல், இனியாவது ஒரு காகிதம் போடத் துணியாமல் இருக்கிறாளே; சந்திரா இப்படி இருப்பாளா?' என்று சதாசிவம் யோசித்தான்.

கந்தசாமி விடவில்லை; இரண்டாம் முறையும் ஒரு காகிதம் எழுதினான். 'நீ உன் தமையனுக்கு எனது காகிதத்தை அனுப்பியது பெரும் பிழை. விருப்பமில்லாவிட்டால் எனக்கே அனுப்பியிருக்கலாம். எனக்கு உன்மேல் பெரிய கோபமாயிருக்கிறது; என்றாலும் உன்னை என்னால் மறக்க முடியவில்லை' என்ற ரீதியில் எழுதினான்.

ருக்குமணி அந்தக் காகிதத்தைத் தமையனுக்கு அனுப்பவு மில்லை, அவள் அதற்குப் பதில் போடவுமில்லை.

அது மிகவும் சரியானதென்று கந்தசாமி மேலும் புகழ்ந்தான். அவளுக்குத் தன்மேல் காதல் இருக்கின்றதென்பதை இரண்டாம் கடிதத்தைத் தமையனுக்கு அனுப்பாததிலிருந்து உணர்ந்து கொண்டான். அடக்கமும், அமைதியும் சீலமும் பொருந்திய பெண் என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆசிரிய கலாசாலையால் வெளிப்பட்டதும் கந்தசாமி ருக்குமணி யையே விவாகம் செய்து கொண்டான். ருக்குமணியும் கந்தசாமியும் மிகவும் குதூகலமாக வாழ்க்கையைக் கழித்தார்கள்.

கந்தசாமி, "நீ ஏன் எனது கடிதத்தைச் சதாசிவத்திற்கு அனுப்பினாய்?" என்று கேட்டான்.

"எனக்குக் கடிதம் எழுதவும் தெரியாது; பதில் போடவும் தெரியாது;" என்று பளீரென்று விடை சொன்னாள். தனது கருத்தை எப்பொழுது வெளிப்படுத்துவது என்று காத்திருந்திருக்கிறாள்.

"அப்படியானால் நீ படிக்கவில்லையா?"

"நான் படித்தவள்தான். ஆனால், கடிதம் எழுதுவதற்குத்தான் படிக்கிறதோ?"

"என்மீது உனக்குப் பிடிக்கவில்லைப் போலும்."

"பிடிக்கவில்லையென்று யார் சொன்னது?" என்று கூறிப் புன்முறுவலுடன் தலை குனிந்தாள்.

வெளியிலே, சதாசிவம், தனது தமக்கைக்கும், புருஷனுக்கும் கந்தசாமியின் குணவிசேடங்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். ருக்குமணியோ கந்தசாமியோ யார் சிறந்தவர்கள் என்று சொல்லமுடியாது.

# அத்தியாயம் - 4

.............................................. நைந்துள்ளி
யுகுவது போலுமென் னெஞ்சு; எள்ளித்
தொகுபுடனாடுவ போலு மயில்; கையி
லுகுவன போலும் வளை; என்கண்போ
லிருபறல்ளாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோ ஓ; ................

- கலித்தொகை 33.

**வா**ழ்க்கையிலே பெரிய ஒரு காரியத்தைத் தான் சாதித்து விட்டது போன்ற மன அமைதியோடும் பெருமையோடும் சதாசிவம் காணப்பட்டான். வாழ்க்கையில் தனக்குரிய பங்கெல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டேன் என்று நினைத்தான். உலகத்தில் தான் இனிக் கவலைப்பட வேண்டியதொன்றுமில்லை என்று நினைத்தான்.

ஆனால் சந்திராவின் மேலுள்ள அன்பு அவன் மனதில் அவனுக்கும் தெரியாமல் மறைந்து கிடந்தது. அது அவனுடைய மனதில் ஏதோ ஒரு இனந்தெரியாத வேதனை ஓசையைக் கிளப்பிக் கொண்டிருந்தது. அது என்ன வேதனை என்றே அவனுக்குப் புலப்படவில்லை. அவனுடைய மனம் அமைதியற்றே காணப்பட்டது.

தூர இடங்களுக்குப் போகவேண்டும் போலிருக்கும்; முடிவில்லாமல், குறிக்கோள் இல்லாமல் பஸ்களிலும், புகைவண்டிகளிலும் பிரயாணஞ் செய்ய வேண்டும் போலிருக்கும். அறியாத தேசத்தில் சமுத்திரக்கரையில், மரநிழலில் கவலையற்றுப் படுத்துத் தூங்கவேண்டும் போலிருக்கும். இப்படி அவன் மனம் அமைதியற்றுச் சஞ்சலமடைந்தே இருந்தது.

இத்துடன் தனக்கு உத்தியோகம் கிடைக்கவில்லையே; தன் மைத்துனர்களின் போஷணையில் எத்தனை நாளைக்கு இருப்பது? என்பதைப் பற்றியும் ஆலோசித்துக் கவலைப்பட்டான்.

தூர தேசத்துக்குச் சென்று தான் கூலி வேலையாவது செய்து, தன்னை ஒருவரும் அறியமாட்டாத இடத்தில் சீவிக்க அவன் விரும்பினான். தனக்குத் தெரிந்தவர்கள் இருந்தால் தனது சீவியத்தைக்

கண்டு ஆட்சேபிப்பார்கள். அறியாதவர்களின் மத்தியில் எப்படியும் சீவிக்கலாம். அமைதியோடு இருக்கலாம். தான் ஆசிரியனாக இருந்து கொண்டு கூலிவேலை செய்வதைப் பிறர் கண்டால் ஆட்சேபிப்பார்கள். ஆகையால், அறியாத தேசத்தில் இருந்து, தான் படியாதவன் மாதிரிக் கூலியாளோடு கூலியாளாக, உலகத்தை நன்கு இரசித்துச் சீவிக்கலாம் என்று அவன் உணர்ந்தான். புறப்பட்டும் விட்டான்.

தனது சகோதரிகளுக்கும், மைத்துனர்களுக்கும் தனது நோக்கத்தை விபரமாகக் கடிதமூலம் எழுதியிருந்தான். தான் உத்தியோகம் தேடிப் புறப்படுவதாகவும், சிலசமயம் தான் வரச் சில வருடங்கள் செல்லலாம் என்றும், நிலையான இடத்தில் நின்று கொண்டு அறிவிப்பேன் என்றும் எழுதியிருந்தான்.

அவன் புறப்பட்டது அவன் மைத்துனர்களுக்குப் பெரிய கோபமாகி விட்டது. சொல்லாமற் கொள்ளாமற் சென்றதைக் கண்டு, உலகம் தாங்கள் அவனைப் போஷிக்க முடியாமல் கலைத்ததாக நினைக்குமே என்று ஆத்திரப்பட்டார்கள். அவனை எங்கும் தேடியும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

ஒரு வருஷமாகியும் சதாசிவத்திடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. ருக்குமணி கந்தசாமியிடம் சொல்லித் துக்கப்பட்டாள். 'சதாசிவம் வெகு புத்திசாலி, படித்தவன், யோசித்து நடப்பவன்; அவனைப் பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை' என்று கந்தசாமி சொல்லி ஆற்றினான்.

"அவர் புத்திசாலிதான்; ஆனால், அவருக்கு எவர்களினதும் சாப்பாடும் பிடியாதே. பெரிய நூதனக்காரன், நாங்கள் எப்படி நல்லாய்ச் சமைத்தாலும் ஒரு குறை சொல்லாமல் விடமாட்டார்" என்று ருக்குமணி சொன்னாள்.

கந்தசாமி சதாசிவத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயற்சி செய்தான். அம்பிகாபுரத்து ஓவசியர் கணபதிப்பிள்ளை தனது மகனைத் தேடி அலைந்தார். அவரிடமும் சென்று, சதாசிவத்தையும் சேர்த்துத் தேடுமாறு வேண்டிக்கொண்டான்.

கணபதிப்பிள்ளை ஓவசியரின் மகன் மகாதேவன் சதாசிவத்துடன் கூடப் படித்தவன். மகாதேவன் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்த போதிலும் அடுத்தடுத்து இரண்டு முறை எஸ்.எஸ்.ஸி. பரீட்சையிலே

தவறிவிட்டான். மூன்றாம் முறையும் தவறவே அவன் வீட்டை விட்டுக் காணாமல் போய்விட்டான். அவனுடைய தம்பி ஒருவன் கொழும்பில் உத்தியோகமாகியும் விட்டான். அதுவும் அவனுக்கு வெட்கமாகப் போய் விட்டது. மகாதேவனைத் தேடி கணபதிப்பிள்ளை ஓவசியர் எங்கும் திரிந்தார். ஓவசியரால் மகாதேவனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. சதாசிவத்தையும் காண இயலவில்லை. கடவுள் மேற் பழியைப் போட்டு விட்டு இருந்தார்.

மகாதேவனும் சாரதாவும் இளமை தொடக்கம் அந்நியோந்நியமாக இருந்தார்கள். மகாதேவன் தான் சாரதாவை விவாகஞ் செய்ய எவ்வித தடையுமில்லை என்று எண்ணியிருந்தான். ஆனால், சாரதாவோ பெரிய கோட்டைகள் கட்டியிருந்தாள். மகாதேவனை உயர்தர உத்தியோகத்திற்குப் படிக்கச் செய்யவேண்டும். அவன் ஒரு இன்ஜினியராகவோ, டாக்குத்தராகவோ வரவேண்டும் என்று மனக்கோட்டை கட்டியிருந்தாள். அடுத்தடுத்து அவன் இரண்டு முறை பரீட்சையில் தவறவே சாரதா மனந் தளர்ந்து விட்டாள். அவளின் இளம் உள்ளம் தான் கட்டின கோட்டையிலிருந்து இறங்கிவர மறுத்தது. அதனால் மகாதேவனைக் கண்டால் அவளுக்கு ஒரு வெறுப்பும் உண்டாயிற்று. அவன் அவள் வீட்டுக்கு வருகின்ற காலங்களில் சாரதா அவனோடு முன்போற் கலகலப்பாகப் பேசுவதில்லை. முகம் கொடுத்துப் பேசாமல் ஏனோதானோ என்று நடப்பாள். இதை உணர்ந்த மகாதேவன் தானாகவே அங்கே போவதை நிறுத்திக் கொண்டான்.

மகாதேவன் மூன்றாம் முறை பரீட்சைக்குப் போய் வந்தான். சாரதா அம்முறை அவன் சித்தியடைவான் என்று பூரணமாக நம்பியிருந்தாள். மகாதேவனைப் பல மாதங்களாக அவள் காணவில்லை. அவனைக் காண மிகவும் ஆசைப்பட்டாள். இவ்வளவு காலமும் அவர் பரீட்சைக்குத் தடைசெய்யக்கூடாதென்று அவள் மகாதேவனைக் காண விரும்பவில்லை. பரீட்சை முடிந்ததும் தன்னிடம் வருவார் என்று எண்ணியிருந்தாள். வராமற்போகவே, அவள் பெரிதும் பதைபதைத்தாள். இன்று வருவார், நாளை வருவார் என்று காத்துக் காத்து ஏமாற்றம் அடைந்தாள். முதலில் அவனுக்கு ஒரு காகிதத்தை எழுதித் தனது தம்பியிடம் கொடுத்தனுப்பினாள்.

'நீங்கள் உற்சாகமாகப் படிப்பீர்கள் என்ற கருத்தினாற்றான் நான் அலட்சியமாக நடந்தேன். அன்றி என் காதலில் எவ்வித குறைவும் ஏற்படவில்லை' என்ற கருத்தில் எழுதினாள். மகாதேவன் அதற்கு

உடனே ஒரு பதிலை எழுதி அவனிடம் கொடுத்தனுப்பினான். உண்மைக் காதல் பரீட்சைப் பெறுபேற்றை அஸ்திவாரமாகக் கொள்ளாதென்றும் தனக்கு இக்காலத்துப் பெண்களின் தன்மை நன்கு விளங்குமென்றும் எழுதியிருந்தான். உனது ஒழுக்கத்தையும் காதலையும் அறிவையும் இருந்து பார்க்க விளங்கும் என்ற மாதிரி எழுதியிருந்தான். ஆனால், அந்தக் கடிதம் சாரதாவிடம் வந்து சேரவில்லை. சாரதாவின் தம்பி அதை வழியிலே போட்டு விட்டான். அவன் சாரதாவுக்குப் பயந்து, அவர் ஒரு காகிதமும் தரவில்லை என்று சொன்னான்.

மகாதேவன் மூன்றாம் முறையும் பரீட்சையில் தவறி விடவே அவனால் அவமானத்தைப் பொறுக்க முடியவில்லை. தந்தையின் கோபம் ஒரு பக்கம்; சாரதாவின் காதல் ஒரு பக்கம்; அவன் முன்னரே இம்முறையும் தவறினால் பாழும் பரீட்சை இனி எடுப்பதில்லை என்று எண்ணியிருந்தான். பரீட்சையில் தவறி விட்டான் என்பதை அறிந்ததும் அவன் உடனேயே அஞ்ஞாதவாசத்திற்குக் கிளம்பிவிட்டான். தன்னைத் 'தற்கொலை செய்துவிட்டான் என்று நினைப்பார்கள்' என்று நினைத்துத் தனது நோக்கத்தை ஒரு காகிதத்தில் எழுதி வைத்துவிட்டுப் போனான்.

மகாதேவனைக் காணவில்லை என்று கேள்விப்பட்டதும் சாரதா புழுவாய்த் துடித்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு மகாதேவன் மேல் தனக்குள்ள காதலைப் பற்றித் தெரிந்தது. அவளுக்கு உணவருந்த மனமும் வரவில்லை. நித்திரையுமில்லை. பேயறைந்தவள் மாதிரித் திரிந்தாள். தான் அலட்சியமாகத் திரிந்ததை எண்ணி எண்ணி உருகினாள்.

சாரதாவின் பள்ளிக்கூடச் சினேகிதிகளுள் இராஜேஸ்வரியே முக்கியமானவள். சாரதாவுக்கும் இராஜேஸ்வரிக்கும் நட்பு வளர்ந்து வந்தது. சாரதா தனது சுக துக்கங்களை இராஜேஸ்வரியிடம் சொல்லி ஆறுவாள். மகாதேவன் சென்ற சம்பவத்தை இராஜேஸ்வரியிடம் சொல்லி அழுவாள்.

இராஜேஸ்வரியின் வீட்டுக்கு அருகில் சாரதாவின் பெரிய தகப்பனார் இருந்தார். அவர் அங்கே பெரிய கடை வைத்திருந்தார். சாரதா பெரிய தகப்பனார் வீட்டுக்குப் போகும்பொழுது இராஜேஸ்வரி யிடமும் போவாள்.

இராஜேஸ்வரி கல்லூரிப் படிப்பை நிறுத்தி விட்டாள். அவள் வீட்டில் இருந்தபோதிலும் சண்முகம் அவள் வீட்டையே சுற்றிச் சுற்றி

அலைந்தான். இராஜேஸ்வரியின் தாயார் சந்தை வியாபாரம். அவள் தொகையான பணம் தனது மகளுக்கென்று சேகரித்து வைத்திருந்தாள். அவளுடன் சண்முகம் பழகிக்கொண்டான். அவன் தன்னோடு உயிராக இருப்பது என்ன காரணம் என்று இராஜேஸ்வரியின் தாயாருக்குத் தெரியும். தனது மகளுக்கு வேறு நல்ல மாப்பிள்ளைகள் கிடையாத பட்சத்தில் அவனுக்கே கொடுத்து விடலாம் என்று அவள் தனக்குள் நிச்சயித்திருந்தாள்.

இராஜேஸ்வரியோ அவனை அதிகம் விரும்பவில்லை. தான் ஒரு உத்தியோகத்தனை மணக்க வேண்டுமென்று நினைத்திருந்தாள். சண்முகம் தன்னை வட்டமிடுவதை அவள் நகைப்போடும், பெருமை யோடும் கவனித்து வந்தாள்.

இராஜேஸ்வரியிடம் சாரதா தனது காதலன் பிரிவைச் சொல்லி வருத்தப்பட, அவளுக்கும் அது பெரிய வருத்தமாயிருந்தது. மகாதேவன் சாரதா காதலைப் பற்றி அவளுக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் பிற்காலத்தில் நன்றாய் இருப்பார்கள் என்று எண்ணியிருந்தாள். இதைக் கேள்விப்பட்டதும் இயற்கையில் இளகின உள்ளத்தவளாகிய இராஜேஸ்வரிக்கும் அழுகை வந்துவிட்டது. இந்த நேரத்தில் சாரதாவுக்குத் தான் என்ன உதவி செய்யமுடியும் என்று சிந்தித்தாள்.

"மகாதேவனை எப்படிக் கண்டுபிடிக்கலாம்" என்று சாரதா கேட்டாள். "அவனைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒருவன் உண்டு; ஆனால், அவனை யார் கேட்பது? பூனைக்கு மணி கட்டுவது யார்?" நான் அவனைக் கேட்டால் ஆபத்தாய்ப் போய்விடும்" என்று இராஜேஸ்வரி சண்முகத்தைச் சுட்டிச் சொன்னாள்.

'சண்முகம் தேடிப்பிடிக்கக் கூடியவன்' என்பதைச் சாரதாவும் ஒத்துக்கொண்டாள். நீ காலால் சொன்னால், அவன் தலையாற் செய்வான்; நீ ஒருமுறை அவனைத் திரும்பிப் பார்த்தாலே, அவன் விழுந்து கும்பிடுவான். எனக்காக அவனிடம் ஒரு வார்த்தை சொல்; அதனால் என்ன, இப்பொழுது என்ன வரப்போகிறது?" என்று கேட்டாள்.

"ஐயையோ! அவனிடம் ஒரு வார்த்தை சொல்வதா? நெருப்போடு விளையாடுவது போலல்லவா இருக்கும்; அவன் பின் இங்கே வந்து குந்திவிடுவான். என் மானம் சந்தி சிரிக்கும்" என்று பதைபதைத்தாள்.

"அப்படி அவன் தான் நினைத்தபடி நடக்க முடியுமா? நீ கண்டிப்பாக நடந்துகொண்டால் அவன் என்ன செய்ய முடியும்? நான் அப்படிப்பட்டவள் அல்ல என்று காரசாரமாகச் சொல்லிவிட்டாற் போய் விடுகிறான்; எனக்கு எப்படியும் இந்த உதவியைச் செய்து தரவேண்டும்" என்று சாரதா மன்றாடினாள்.

இராஜேஸ்வரியால் அவள் வேண்டுகோளை மறுக்க முடிவில்லை. சாரதாவின் துன்பத்தை அவளால் பொறுக்கவும் முடியவில்லை. எப்படியும் சாரதாவுக்கு இவ்வுதவியைச் செய்தே கொடுக்க வேண்டு மென்று தீர்மானித்தாள். சண்முகத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வ தினால் மேலே என்ன விளையும் என்றும் அவளால் ஊகிக்க முடிய வில்லை.

தன்னையே கல்லூரி நாட்டொடக்கம், தான் என்ன செய்த போதிலும் அதைப் பரவாய்ப் பண்ணாமல் சுற்றித் திரியும் சண்முகத்திடம் பேச வேண்டுமென்று அவளுக்கு ஒரு விருப்பமும் இருந்தது. 'சாரதா வின் காதலனும் ஒன்றும் 'பாஸ்' செய்யவில்லைத்தானே! சண்முகத்தைத் தான் நான் விவாகஞ் செய்துவிட்டால் என்ன கெட்டுப்போகும். வாழ்நாள் முழுவதும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு திரிவானே' என்றுஞ் சிந்தித்தாள்.

அம்பிகாபுரம் உத்தியோகஸ்தர்களின் வாழ்க்கையை நேரே பார்த்த அவளுக்கு ஒரு உத்தியோகம் இல்லாதவனை இலகுவில் மணம்புரிய மனம் வருமா? அவர்களின் கவலையற்ற உல்லாச வாழ்க்கையிலிருந்து அவள் மனம் இறங்கி வருமா?

# அத்தியாயம் - 5

'வந்தன ளென்னுடை மாதவப் பயன்
வந்தன ளென்னுடை வழிபடுந் தெய்வம்
வந்தன ளென்னுடை யாவி வாழ்வுற
வந்தன ளென்னுடை வண்ண மங்கையே'

- வில்லி பாரதம்; விராட பருவம்.

இராஜேஸ்வரியின் தாய் சனிக்கிழமை தவிர மற்ற நாட்களிற் சந்தைக்குப் போய்விடுவாள். சனிக்கிழமையில் அம்பிகாபுரத்தின் சந்தை கூடுவதில்லை. தகப்பன் தான் இராஜேஸ்வரிக்குத் துணையாய் இருப்பார். அவருக்கும் கண் தெரியாது. வீட்டிலே உள்ள ஒரு சார்மனைக் கதிரை யில் படுத்துக்கொள்வார்.

ஒவ்வொரு நாளும் சண்முகம் இராஜேஸ்வரியின் வீட்டு ஒழுங்கையால் ஒரு சுற்றுச் சுற்றாமல் விடமாட்டான். அவளுடைய தலைக்கறுப்புக் கண்டாலே அவனுக்குப் போதும். அன்றைக்குப் பெரிய மகிழ்ச்சியோடு போவான். அவ்வளவோடேயே மகிழ்ந்து செல்கின்ற அவன் முன்னிலையில் அன்று ஒரு நெருப்புப்பெட்டி வீழ்ந்தது. அதற்குள் ஒரு காகிதத் துண்டும் இருந்தது.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல இருந்தது அவனுக்கு. அவன் பிரார்த்தித்து வந்த அம்பிகாபுரம் அம்பாளை அதில் நின்றபடியே நோக்கிக் கும்பிட்டான். அவன் மனம் சொல்லவொண்ணாப் பரவசநிலை அடைந்தது.

இவன் செயல் எல்லாவற்றையும் கிணற்றடியில் நின்று இராஜேஸ்வரி பார்த்துக்கொண்டு நின்றாள். அவளுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது. தெய்வத்துக்கு நேர்த்திக் கடனும் வைத்திருக்கிறார். அவன் மேல் அவளுக்கு ஒரு அன்பும் இரக்கமும் வந்தது. அவன் தன்மேல் வைத்த பாசத்தை அன்றுதான் உணர்ந்தாள்.

தகப்பனுக்குக் கண் தெரியாது. ஆனால், காது கேட்குமென்றும், சத்தமின்றித் தன்னை வந்து சந்தித்துப் போகுமாறும், சண்முகம் எடுத்த கடிதத்தில் கண்டிருந்தது. அவனுடைய மகிழ்ச்சியை கேட்கவா வேண்டும். 'மலடி வயிற்று மகன் போலே ஒரு புதையல் எடுத்த தனம் போலே' என்று அருணகிரிநாதர் வருணித்த மாதிரி அவன் மன மகிழ்ச்சி இருந்தது.

சண்முகம் தாமதிக்கவில்லை. சந்தடியின்றிக் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். இராஜேஸ்வரி கிணற்றடியில் நின்று கொண்டு அங்கே வருமாறு சைகை செய்தாள். மந்திரக்கோலால் கட்டுண்ட மதயானை போன்று அவள் சைகை வழியே சென்றான்.

கொல்லைப்புறத்திலே, மாமரத்தின் நிழலிலே போடப்பட்ட வாங்கிலே உட்காருமாறு பணித்தாள். சண்முகத்திற்கு அந்த நேரம் தன்னுணர்வு என்று ஒன்று இல்லை. பேய் மாதிரி அவளை உற்று நோக்கிக் கொண்டு வாளாவிருந்தான். இராஜேஸ்வரி புன்முறுவல் செய்துகொண்டு (புன்முறுவலை வரவழைக்கவில்லை; அவன் நிலையைக் கண்டு அவளுக்கு இயல்பாகவே வந்தது) "எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்து தரவேண்டும்" என்று மெதுவாகச் சொன்னாள். அவ்வளவும் சொல்வதற்கே அவள் பெரிதும் கஷ்டப்பட்டாள். அவனோடு பேசவே அவளுக்குப் பயமாயிருந்தது. அவன் முரட்டுத் தனமாக என்ன செய்து விடுகிறானோ என்று பயம். எனினும், தைரியத்தை இழக்காமற் சொன்னாள்.

அவள் சொன்ன ஓசையானது யாழ் நரம்பிலிருந்து பிறந்து செல்லும் மென்மையான கீதம் போல் அவன் நரம்புகளை உலுப்பியது. அவனுக்கு அப்பொழுதுதான் தன்னுணர்வு வந்தது.

தன்னுடைய உள்ளத்தை அவளுக்குத் திறந்து காட்டுவதற்கு, கல்லூரியிற் படித்த நாட்களிலிருந்து இன்றுவரை ஒரு சந்தர்ப்பத்தை அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அல்லும் பகலும் அவள் சிந்தனையோடு இருந்து வந்த பித்தன். அவள்மேல் உள்ள காதலைத் தான் எப்படி வெளிப்படுத்த வேண்டுமென்று தனக்குள் பலமுறை சொல்லியும் பார்த்திருக்கிறான். இப்பொழுது உண்மையான சந்தர்ப்பம் கிடைத்ததும் கடல் மடை திறந்தாற்போற் சொல்லத் தொடங்கினான்.

"ஒரு உதவியென்ன? ஓராயிரம் உதவியென்றாலும், இதோ, இந்த நிமிஷத்தில் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். மலையில் தேன் வேண்டுமா? ஏழ்கடலுக்கப்பாலுள்ள பாரிஜாத புஷ்பம் வேண்டுமா? என்ன வேண்டும்? என் உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரையில் முயற்சிப்பேன். என்னைப்பற்றி நீ இவ்வளவு காலமும் அறிந்து கொள்ள வில்லை. என் உடல், பொருள், ஆவி மூன்றும் உனக்கே" என்று அவனுக்குத் தெரிந்த இலக்கிய நடையில் தனது காதல் புராணத்தைப்

பேசித் தள்ளினான். ஆனால், உண்மையான உணர்ச்சியுடனேயே பேசினான். அவனுடைய வார்த்தைகள் எல்லாம் உறுதியானவைகளா யும், உள்ளத்தைத் தொடுபவைகளாயுமிருந்தன.

இராஜேஸ்வரி அருண்டுவிட்டாள். முதலில் அவன் பேச்சைக் கேட்டதும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'எனக்கு மலையிற் றேனும் வேண்டாம். பாரிஜாத புஷ்பமும் வேண்டாம்' என்று சொல்ல யோசித்தவள், அவன், "எனது நெஞ்சைக் கிழித்துப் பார், அதனுள் உன் உருவம் இருக்கிறதை" என்று நெஞ்சைப் பிழப்பவன் போல ஆவேசத்தோடு சொன்னதும், 'என்மேல் இவருக்கு இவ்வளவு பக்தியா?' என்று யோசித்தாள். அவனுடைய ஒவ்வொரு வார்த்தைகளின் உறுதி யையும், அவன் முகபாவனையையும் பார்த்த அவள் மருண்டு விட்டாள். அந்த மருட்சியில் தான் அவனை அழைத்த காரணத்தை விரைவாகச் சொல்லி அனுப்ப வேண்டுமென்று நினைத்தவள் மறந்து விட்டாள். இதற்கு முன் அவள் ஒரு வாலிபனோடும் இப்படித் தனியே நின்று கதைத்தறியாள். சண்முகம் இவ்வளவு தூரம் அவளைக் கடவுள்போலத் தூக்கிவைத்துப் பேச, இயற்கையிலேயே முகஸ்துதி விரும்பும் பெண்மை உள்ளம் செய்வதறியாது செயலற்றுப் போயிற்று. அந்த நேரம் சண்முகம் என்ன செய்தாலும் அவளுக்குத் தெரிந்திராது. அவள் தன்னுணர்வற்று, உடம்பெல்லாம் வெயர்த்துச் சித்திரப்பாவை போல் நின்றாள்.

இச்சந்தர்ப்பத்தில் முன்வாசலில் இராஜேஸ்வரியின் தாயின் குரல் கேட்டது. மெய்மறந்து நின்ற புதிய காதலர்கள் செய்வதறியாது பதைபதைத்தனர்.

சண்முகத்தின் மூளை வேலை செய்ய மறுத்துவிட்டது. இராஜேஸ்வரி கொல்லைப்புறத்தின் வேலியால் நாய் போய்வரும் துவாரத்தால் போகும்படி சண்முகத்திற்குச் சைகை காட்டினாள். சண்முகம் தனது காதலி காட்டினால், நாய் போகும் துவாரமல்ல, ஊசி யிலுள்ள துவாரத்துக்குள்ளாலும் போகக்கூடியவன். மூடி விழிக்குமுன் சண்முகம் மறைந்துவிட்டான்.

அன்று இரவு இராஜேஸ்வரிக்கு நித்திரை இல்லை. என்னதான் சண்முகம் முரடன் ஆனாலும், தன்மேல் எவ்வளவு காதல் வைத்திருக் கிறான்; என்று சிந்தித்தாள். தன்மீது அவன் வைத்திருக்கும் காதல் யார் யாருக்கு மேல் வைத்திருக்கும் காதல் போன்றதென அவள்

அவன் காதலை அளக்கத் தெண்டித்தாள். அவனுடைய காதலை அவளால் அளக்க முடியவில்லை. அது ஒன்றுக்கும் அடங்காத மகா விசாலமாக அவளுக்குத் தோன்றியது. அவன் உயர்ந்த எடுப்பான தோற்றமும், அகன்ற மார்பும், தன் முன்னிலையில் அவன் ஒரு பணியாள் போன்று பணிந்து நின்ற தன்மையும் அவளால் அன்று இரவு முழுதும் மறக்கவே முடியவில்லை. மறுநாள் தனது தாய்க்கு வெளித்துவிட்டது என்ற கருத்தில் ஒருவேளை அவன் வராமல் விட்டு விடுவானோ? என்ற சிறு வேதனையும் அவளை நித்திரை கொள்ள விடவில்லை.

சண்முகம் தினமும் பகலில் இராஜேஸ்வரியிடம் வந்து போய்க் கொண்டிருந்தான். ஒவ்வொரு நாளும் அவன் வருவது அபாயம் என்று இராஜேஸ்வரி உணராமல் இல்லை. இனிமேல் வரவேண்டாம் என்று சொல்லவேண்டும் என்று அவள் ஒவ்வொரு நாளும் நினைப்பாள். சாரதாவின் காதலன் மகாதேவனைத் தேடி வருமாறு சொல்ல வேண்டு மென்று நினைப்பாள். ஆனால், அவன் வந்ததும் எல்லாவற்றையும் மறந்துவிடுவாள்.

சண்முகத்தினுடைய அமிர்த வார்த்தைகள் அவளை ஆகாயத் திலே தூக்கி வைத்தன. அவளுக்குத் தான் இந்திரலோகத்தில் சஞ்சரிப்பது போன்றிருந்தது. வாழ்க்கையில் சிறிதும் அனுபவமில்லா தவள், அவள் பெற்ற புதிய அனுபவத்தினால் அவளுடைய சிந்தனா சக்தி அப்படியே நின்றுவிட்டது. தங்கள் தொடர்பின் முடிவை அவளால் சிந்திக்கவும் முடியவில்லை. அவனின் ஸ்பரிசமும், அண்மையும், மகிழ்ச்சியையும், அவனின் பிரிவு ஏக்கத்தையும் அவளுக்குக் கொடுத்தன. இவ்வளவுதான் அவளுக்குத் தெரிந்தது. இதைவிட வேறு ஒன்றும் அவளுக்குத் தோன்றவில்லை.

இதேநிலையில் தான் எதற்காகச் சண்முகத்தை முதலில் அழைத்தேன் என்பதைக்கூட அவள் மறந்துவிட்டாள். மறுபடியும் சாரதா வந்து நினைப்பூட்டத்தான் அவளுக்கு ஞாபகம் வந்தது. சாரதாவுக்கு அவளின் உடல்நிலையைக் கண்ட உடனேயே விஷயம் விளங்கிவிட்டது. முதலில் அப்படி இப்படி என்று ஏமாற்றி இராஜேஸ்வரி முடிவில் நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் சொன்னாள். தான் ஒரு பிழை செய்யப்போய் எத்தனை பிழை அதிலிருந்து முளைத்து விட்டன என்று மனம் வருந்தினாள்.

இவ்வளவு சஞ்சல சுபாவமுள்ளவள் என்று இராஜேஸ்வரியை சாரதா நினைக்கவில்லை. தன்னிலும் பார்க்க மிகவும் மன உறுதி யானவள் என்று சாரதா நினைத்தாள். அதுவும் சண்முகத்தின் மேல் இயற்கையாகவே பகையும் வெறுப்பும் உள்ளவளாயிருந்தபடியாற்றான், சாரதா அவளைத் தூண்டினாள். வெகு கெட்டித்தனமாகத் தனது காரியத்தை முடித்துத் தருவாள் என்று நினைத்தாள். ஆனால், ஆப்பு இழுக்கப்போன குரங்கு போல் ஆயிற்று.

'ஈஸ்வர சங்கற்பம்' என்ற அந்த அரும்பெரும் வார்த்தையொன் றினாற்றான் அவள் ஆறுதல் அடையமுடிந்தது. மிகவும் கவலையோடு சாரதா வீட்டுக்குத் திரும்பினாள்.

சண்முகம் மகாதேவனைத் தேடிப் புறப்பட்டதும் இராஜேஸ்வரி யின் நிலைமை பெரிதும் பரிதாபமாய் இருந்தது. அவனுடைய பிரிவை அவளால் தாங்கமுடியவில்லை. பேயறைந்தவள் மாதிரித் திரிந்தாள். இனிமேல் தான் உயிருடன் இருந்து அவரை விவாகஞ் செய்தால் எப்போதாவது அவரை விட்டுப் பிரிவதில்லை என்று தனக்குள் உறுதி செய்துகொண்டாள்.

இராஜேஸ்வரியின் தாய் தினமும் சந்தையால் வந்து தனது மகளின் தேகம் தும்புபோல இளைத்து வருவதைக்கண்டு பிரலாபித்தாள். அவளுக்கு ஏதோ ஒரு பேய்க்குறை என்று திட்டமாக நம்பினாள். மறுநாள் வெள்ளிக்கிழமை. விறுமர் கோயில் பூசாரியை அழைத்துப் பார்ப்பித்தாள். பூசாரி திருநீறு போட்டு, நூலும் முடிந்து கட்டி, மடை ஒன்று போட வேண்டும் என்று சொல்லிப் போய்விட்டான்.

இராஜேஸ்வரியின் தாய் மடைக்கு வேண்டிய ஆயத்தம் செய்யத் தொடங்கினாள். இராஜேஸ்வரிக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

## அத்தியாயம் - 6

'நட்பளவு பாராது அதனால் வரும்
பயனளவு பார்க்கும் நட்டாரும், தொடுப்பாரைக்
கொள்ளாது விலையைக் கொள்ளும் பொது
மகளிரும் பிறர் கேடுநோக்காது அவர் சோர்வு நோக்குங்
கள்வரும், தம்முளொப்பர்

- திருக்குறள், பரிமேலழகருரை; 813.

நல்ல அழகும், திடகாத்திரமும் வசீகரத் தோற்றமும் உடைய மகாதேவன், கடையில் இருந்தாலே வியாபாரம் தன்பாட்டில் நடக்கும் என்று சுப்பிரமணியம் நினைத்தார். மேலே அவனுடைய குணநடை ஒழுக்கங்களைக் கண்டு, குலங்கோத்திரங்களையறிந்து, வசதியானால் தனது மகளுக்கே விவாகமுஞ் செய்துவிடலாம், என்று அவருடைய உள்ளம் சொல்லிற்று. ஆனால் அவன் தன்னோடு நிற்கச் சம்மதிக்கிறானோ? என்று அவர் அங்கலாய்த்தார்.

மாதம் எல்லாச் செலவும் தள்ளி முப்பது ரூபாய் தருவதாகவும், கடையில் இருந்து கணக்கு வழக்குகளை எழுதுமாறும், நயமாக அவனைக் கேட்டார். எங்கும் வேலை தேடி அலைந்த அவன் இதை ஒரு அதிட்டமாகவே நினைத்தான்.

புதிய 'கிளாக்'கரின் பின்னர் சுப்பிரமணியம்பிள்ளைக்கு வியாபாரம் விருத்தியடையத் தொடங்கியது. வியாபாரம் பெருகப் பெருக மகாதேவன் மேல் அவருக்கு அதிக அன்பு பெருகலாயிற்று. அவனைத் தனது குடும்பத்தில் ஒருவனாகவே அவர் மதித்தார். மகாதேவனும் அவருடைய குடும்பத்தோடு அன்னியோன்னியமாகப் பழகினான்.

சுப்பிரமணியத்தின் வளவின் ஒரு எல்லை சம்பந்தமாக அடுத்த வளவு பண்டா குடும்பத்திற்கும், சுப்பிரமணியம் குடும்பத்திற்கும் அடிக்கடி சண்டை நிகழும். ஒருநாள் இந்தச் சண்டை பெருங் கலகமாகி விட்டது. அடுத்த வளவில் பதினைந்து இருபது சிங்களர் நின்றுகொண்டு கல்லாற் சுப்பிரமணியத்தின் வீட்டுக்கு எறிந்தனர். சுப்பிரமணியத்தால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தனியே, ஒரு சுப்பிரமணியம் என்ன செய்ய முடியும்? தனது உயிருக்குக்கூட ஆபத்து வந்துவிடுமோ என்று யோசித்தார். இருந்தும் தான் பின்வாங்குவதாகக் காட்டிக்கொள்ளாமல் மேலும் மேலும் பேசிக்கொண்டே நின்றார்.

நிலைமையை உள்ளே நின்ற மகாதேவன் அவதானித்தான். அன்று சிங்களரை அடக்கமுடியாது; கடையைக் கொள்ளையடித் தாலும் அடிப்பார்கள். என்று யோசித்தான். புத்திசாலியான மகாதேவன், உள்ளேயிருந்த சுப்பிரமணியத்தின் துப்பாக்கியை எடுத்து வந்து மேல் நோக்கிச் சுட்டான். ஒருவரும் கலையவில்லை. இரண்டாம் முறையும் சிறிது பதித்துச் சுட்டான். ஒரு சன்னம் ஒருவனின் தலையை உராய்ந்து கொண்டு சென்றது. அதனால் இரத்தம் ஒழுகியது. சிங்களர் எல்லோரும் அவ்வளவோடு கலைந்து விட்டனர்.

சுப்பிரமணியமும், மகாதேவனும் கொலைசெய்ய எத்தனித்தார்கள் என்ற குற்றச்சாட்டோடு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சுப்பிரமணி யத்தின் மீது கொலை எத்தனக் குற்றச்சாட்டு இல்லாமற் போகவே சுப்பிரமணியத்தை விடுதலையாக்கினர்.

சுப்பிரமணியம் தான் விடுதலையாவதற்காக மகாதேவன் தனது துப்பாக்கியாற் சுட்டான் என்பதை ஒத்துக் கொண்டார். ஆகவே, மகாதேவனிற் கொலை எத்தனக் குற்றச்சாட்டு ருசிவாகியிருந்தது. வழக்கைப் பெரிய கோட்டுக்குப் பாரப்படுத்தியிருந்தார்கள். மகாதேவனுக் குச் சிறைத்தண்டனை கிடைப்பது நிச்சயமாக இருந்தது. அவனுக்குச் சிறைத்தண்டனை கிடையாமற் செய்ய வேண்டுமானால், பெருந் தொகைப் பணம் செலவழிக்க வேண்டும். பெரிய அப்புக்காத்துமார்களை ஏற்படுத்த வேண்டும். அவ்வளவு பெருந்தொகையாக அவனுக்குப் பணம் செலவழிக்கச் சுப்பிரமணியம் விரும்பவில்லை. மகாதேவனுடைய வீட்டுக்கு அறிவிப்பதற்கு என்ன விலாசம் என்று சுப்பிரமணியம் கேட்டார். மகாதேவன் வீட்டிற்கு அறிவிக்க வேண்டாமென்று விலாசமும் கொடுக்கவில்லை.

இந்நிலைமையில் சண்முகம் எல்லா இடங்களிலும் மகாதேவனைத் தேடியலைந்து அனுராதபுரம் வந்தான். அவனும் வந்து சுப்பிரமணியத்தின் கடையிலேயே தங்கினான். மகாதேவனின் கதையைப் பலரும் பேசுவதைக் கடையிலிருந்துகொண்டே அவதானித்தான். ஆனால், அவன் பெயர் மகாலிங்கம் என்று அங்கு அடிபட்டது. அவனுடைய உற்றார் உறவினரைப் பற்றி ஒன்றும் தெரியாதென்ற பேச்சும் அங்கு நிலவியது. மகாதேவனாகத் தான் இருக்க வேண்டுமென்று சண்முகம் ஊகித்துக் கொண்டான்.

சிறைச்சாலையிலே மகாதேவனைச் சண்முகம் சென்று சந்தித்தான். நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் மகாதேவன் விபரமாகச்

சொன்னான். மகாதேவனை விடுவிக்கச் சண்முகம் பெரிதும் முயன்றான். சண்முகம் வழக்காளிகளான பண்டாவையும், அவனின் கூட்டாளிகளை யும் போய்க் கண்டான். 'மகாதேவனைச் சிறைக்கு அனுப்புவதினால் உங்களுக்கு எவ்வித பயனுமில்லை' என்பதை விளக்கினான். "உங்கள் பகைவனான சுப்பிரமணியம் தப்பிவிட்டான். மகாதேவன் இனிமேல் சுப்பிரமணியத்தின் கடையில் நிற்கப் போவதில்லை. மகாதேவன் சுப்பிரமணியத்தின் கடையில் நில்லாவிட்டால் அவரின் வியாபாரமும் முன்போல் படுத்துவிடும். நீங்கள் இப்பொழுது மகாதேவனைத் தப்ப வைத்தீர்களானால், நான் அவனைக் கூட்டிக் கொண்டு போய் விடுவேன்" என்று நயமாகவும், தயவாகவும் பேசினான்.

அவர்களும் இளகிவிட்டார்கள். யாருமற்ற ஒரு வாலிபனை மறியலுக்கு அனுப்புவதனால் எங்களுக்கு என்ன பிரயோசனம் என்று உணர்ந்தார்கள். அவன் சுப்பிரமணியத்தின் கடையில் நில்லாமற் போவதே தங்களுக்கு நன்று என்று உணர்ந்தனர். சண்முகம் வழக்கு முடியுமட்டும் பண்டாவின் வீட்டிலேயே நின்றான். பண்டா வீட்டோடு சரளமாகப் பழகினதில் அவர்களுக்கெல்லாம் சண்முகத்தின் மேல் பிடித்துவிட்டது.

மேற்கோட்டிலே சாட்சிகள் தளர்த்தப்பட்டது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை. மகாதேவன் விடுதலையானான். மகாதேவனும் சண்முகமும் பண்டா வீட்டிலேயே தங்கினார்கள். பண்டா ஆகியோர் தாங்கள் ஒரு கடை போட்டுத் தரலாம் என்றும், அதில் இருக்குமாறும், மகாதேவனைக் கேட்டார்கள். மகாதேவன் சம்மதிக்கவில்லை.

மகாதேவன், "என்னை நீ இன்று மீட்ட நன்றிக்கு வையகமும் வானகமும் ஈடாகாது" என்று உணர்ச்சியுடன் சொன்னான்.

"நான் உன்னை மீட்க என்று வரவில்லை; சாரதாவின் தூதுவ னாக வந்தேன். சாரதாவுக்குத்தான் இந்நன்றியைச் சொல்ல வேண்டும்" என்று சண்முகம் சொன்னான்.

'சாரதா' என்றதும் மகாதேவனின் முகம் வித்தியாசப்பட்டது. சாரதாவினாற்றான் தனக்கு இவ்வளவும் சம்பவித்தது என்பது மகாதேவனின் திட்டமற்ற எண்ணம். 'சாரதாவின் பேச்சை விட்டுத் தள்ளு' என்று மொட்டையாகச் சொன்னான்.

'இராஜேஸ்வரியைப் பிரிந்து நான் வருதல் இலகுவான காரியமா? பிரிவு என்றாலே நடுங்கும். எங்களைப் பிரித்தது சாரதாவல்லவா? சாரதா நித்தமும் அழுதபடியே இருக்கிறாள்' என்று இராஜேஸ்வரி சொன்னாள். இவ்வாறு தனது கதையைச் சொல்லவும் சண்முகம் வாய் திறந்தான்.

கல்லூரியிற் படிக்கும் நாள் தொடக்கம் இராஜேஸ்வரியைச் சண்முகம் காதலித்து வந்ததும், இராஜேஸ்வரி எரிந்து புகைந்துகொண்டு திரிந்ததும், மகாதேவனுக்குத் தெரியும். ஆதலால், இப்பொழுது தான் காதலில் வெற்றி பெற்றதை மகாதேவனுக்குத் தெரிவிக்கச் சண்முகம் துடிதுடித்தான்.

"நான் காதலில் வெற்றி பெற்றதற்கு நீயே காரணம்; அந்தப் பெரிய நன்மைக்கு நான் இப்பொழுது செய்தது ஈடாகாது. எல்லாம் ஈஸ்வர சங்கற்பம்" என்று நடந்த முழுவதையும் சண்முகம் சொன்னான்.

தனது கதையைச் சொல்லிமுடித்துச் சாரதாவின் பிரிவுத் துன்பத்தைக் காவியநடையில் சொல்லத் தொடங்கினான். தான் இப்பொழுது பிரிவுத் துன்பத்தை அனுபவிக்கிறவன் ஆகையினால் அவனால் நன்கு சொல்ல முடிந்தது.

மகாதேவனின் அடிப்படையிற் உறைந்து மறைந்து கிடந்த காதல் துளிர்த்தது. அவனுடைய கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. அவன் சாரதாவை வெறுக்கவில்லை. அவனுடைய கஷ்டங்கள்தான் வெறுக்கச் செய்தன.

'சாரதா, என்ற இன்ப ஊற்று தனக்கு எப்பொழுதாவது கிட்டுமா' என்ற ஏக்கம் அவன் மனத்தில் அவனுக்குத் தெரியாமலே இருந்து வந்தது. சண்முகத்தின் வார்த்தைகள் அவன் மனத்தில் ஒரு துளிரைக் கிளப்பியது.

எனினும், தான் ஓர் நிரந்தர தொழில் இல்லாமல் தனது பெற்றோர் முகத்திலாவது, சாரதாவின் முகத்திலாவது விழிக்க, அவனுடைய சுயமரியாதை உள்ளம் ஒப்பவில்லை. சண்முகமோ அவனைக் கையோடு கொண்டுபோக நின்றான்.

மகாதேவன் தனது நியாயங்களை ஒவ்வொன்றாக எடுத்து விளக்கினான். தான் ஓர் தொழில் தேடிக்கொண்டு வருவதாகவும், சாரதா தன்னை நம்பியிருந்தால் தான் அவளைக் கைவிடமாட்டேன் என்றும் சத்தியம் செய்து கொடுத்தான்.

அனுராதபுரம் புகையிரத நிலையத்தில் இரவு 12 மணிக்கு நண்பர்கள் இருவரும் பிரிந்தனர். மகாதேவன் கொழும்புக்குப் போகும் மெயில் வண்டியிலும், சண்முகம் யாழ்ப்பாணம் போகும் மெயில் வண்டியிலும் ஏறிக்கொண்டனர். "சாரதாவை நான் ஒருபோதும் மறவேன்; அவள் என் இருதயத்தில் நிரந்தரமாக இருக்கிறாள் என்று அவளிடம் சொல்லு" என்று மகாதேவன் சொல்லிப் பிரிந்தான். ஆனால், சாரதாவும் அதே வண்டியிற்றான் பிரயாணம் செய்கிறாள் என்று மகாதேவனுக்கு எப்படித் தெரியும்!

சண்முகம் யுத்த களத்தினின்றும் வெற்றியோடு திரும்பும் போர் வீரனைப் போன்று தான் மகாதேவனைக் கண்டுபிடித்ததுமல்லாமல், அவனை ஆபத்திலிருந்து தப்ப வைத்த சம்பவத்தையும் தனது இராஜேஸ்வரிக்குச் சொல்லுவேன் என்ற மகிழ்ச்சியில் யாழ்ப்பாணம் வண்டியில் சென்றான். இரண்டு மாதங்களின் பின் தன் காதலியைச் சந்திக்கப் போகிறேன் என்ற எல்லையற்ற மகிழ்ச்சி அவனுக்கு. ஆனால், அங்கே அவனை நோக்கி எத்தனையோ துக்க சம்பவங்கள் காத்துக் கிடக்கின்றன என்று பாவம்! அவனுக்கு எப்படித் தெரியும்!

# அத்தியாயம் - 7

'சிலரும் பலரும் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல்தூற்றச்
..................

- நற்றிணை 149.

சண்முகம் அம்பிகாபுரத்துக்குச் சென்றதும், அங்கே அவன் அறிந்த புதினங்கள் அவனைக் கலங்க வைத்தன. சாரதா, சந்திரா ஆகியோரின் தாயார் இறந்துவிட்டாள். ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம் பிள்ளை தனது வீட்டை வாடகைக்குக் கொடுத்துவிட்டு, பிள்ளை களுடன் தான் கடமை பார்க்கும் ஸ்ரேசனுக்கு அன்று இரவுதான் சென்றார். மகாதேவன் சொல்லிவிட்ட சம்பவத்தை சாரதாவுக்குச் சொல்ல முடியவில்லையே என்று சண்முகம் வருத்தப்பட்டான். ஆனால் இது அவனுக்குப் பெரிய ஒரு வருத்தமல்ல.

இராஜேஸ்வரியின் தகப்பனார் இறந்துவிட்டார். அவருடைய செத்த வீட்டுக்கு வந்த பெண்கள் எல்லாரும் தன்னைச் சுட்டிக் குசுகுசுத்ததை இராஜேஸ்வரி சண்முகத்துக்குச் சொல்லி அழுதாள். அதை அவனால் தாங்கமுடியவில்லை.

சண்முகம் முதலில் அம்பிகாபுரத்திலே அதிகாலையிலே இறங்கின வுடனேயே இராஜேஸ்வரியின் தகப்பனார் இறந்த சம்பவத்தைக் கேள்விப்பட்டான். ஆகவே துக்கம் விசாரிக்கும் முறையில் முதலில் இராஜேஸ்வரியின் வீட்டுக்குச் சென்றான். சண்முகம் சென்றதும் இராஜேஸ்வரியின் தாய் அவன் காலைப் பிடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுதாள். ஒப்பாரியில் 'நீதான் இனி எங்களுக்குத் துணை தம்பி' என்ற மாதிரியும் சொல்லி அழுதாள்.

இராஜேஸ்வரி சிறிது தூரத்துக்கப்பால் நின்று விக்கி விக்கி அழுதாள். சண்முகம் அழுதது இராஜேஸ்வரியின் தகப்பனார் இறந்து விட்டார் என்ற துக்கத்தில் அல்ல. இராஜேஸ்வரி துரும்பாய் இளைத்து நடக்கவே சக்தியற்றவள் போற் காணப்பட்டாள். சண்முகம் இன்னுஞ் சிலகாலம் தாழ்த்தி வந்தால் அவள் இறந்து விடுவாளோ என்று எண்ணக் கூடியதாயிருந்தது அவளின் தேகநிலையையும், அவள்

அழுதுகொண்டு நிற்பதையும், கண்ட சண்முகம் பெலத்து அழுது விட்டான்.

சண்முகம் மனமுருகி அழுவதைக் கண்டு இராஜேஸ்வரியின் தாய் சொக்கிப் போனாள். அவளுக்காக மனமுருகி அழுதார் ஒருவரும் அந்த ஊரில் இல்லை. சண்முகம் வாய்விட்டு அழுததைக் கண்டு அவனை மருமகனாகப் பெறக் கொடுத்துவைக்க வேண்டுமென்று எண்ணினாள்.

அம்பிகாபுரம் முழுவதும் இராஜேஸ்வரி மூன்று மாதம் கருப்பிணியென்று குசுகுசு கதையாய் இருந்தது. 'சண்முகம் அவளை விட்டு ஓடிவிட்டான்' என்று அம்பிகாபுரத்துப் பெண்கள் வாயிலே கைவைத்துப் பேசினர். 'ஒருவேளை உலகக் கதையின்படி அவரும் வராமல் இருந்துவிடுவாரோ' என்றுகூட இராஜேஸ்வரியின் பேதை யுள்ளம் நினைத்தது. சண்முகத்தின் பிரிவும், உலகத்தின் தூற்றலும், தாயின் ஆக்கினையும் எல்லாம் சேர்ந்து அவளைத் துரும்பாய் இளைக்கச் செய்தன.

சண்முகம் அனுராதபுரத்திலிருந்து புகைவண்டியில் வரும் பொழுது பலவித திட்டங்கள் போட்டிருந்தான். தான் அம்பிகாபுரம் சென்றதும் தனது தந்தையாரின் உத்தரவு பெற்றுத் தனது விவாகத்தைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று திட்டம் போட்டுக்கொண்டு வந்தான்.

சண்முகம் இவ்வளவு காலமும் பொறுப்பற்றவனாக இருந்து வந்தான். அவனுக்குத் தாய் இல்லை. அவனுடைய வீட்டில் விதவை யாகிய மாமி ஒருத்தி - தகப்பனின் தமக்கை - இருந்தாள். அவளிடம் போய்ச் சாப்பிடுவதும், ஊர் சுற்றுவதுமாக இவ்வளவு காலமும் அவனுடைய காலம் கழிந்தது. அவன் மனத்தில் இவ்வளவு காலமும் இருந்த பிரச்சனை இராஜேஸ்வரியின் காதல் ஒன்றுதான். அது இவ்வளவு விரைவில் நிறைவேறும் என்று அவன் நினைக்கவில்லை.

இராஜேஸ்வரியை வலோற்காரமாகக் கிளப்பிக்கொண்டு போய் விவாகஞ் செய்ய வேண்டுமென்று சண்முகம் திட்டமிட்டிருந்தான். அதனால், பின் வருகின்ற தொந்தரவுகளைத் தனது தகப்பனார் விடவா போகிறார் என்று, அவன் எண்ணியிருந்தான்.

சண்முகத்தின் தகப்பனார் படிப்பு வாசனை சிறிதும் இல்லாதவர். சாதிப்பித்துக் கொண்டவர். அம்பிகாபுரத்திலே தான் சாதியிலே

உயர்ந்தவர் என்று எண்ணியிருந்தார். மற்றவர்களின் சாதிகளில் ஒவ்வொரு இழுக்குக் கூறிவருவார். அப்படிப்பட்டவர் சண்முகத்தின் விவாகத்திற்குச் சிறிதும் ஒப்பவில்லை.

இராஜேஸ்வரியையன்றித் தான் வேறு ஒருவரையும் விவாகஞ் செய்வதில்லையென்று சண்முகம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். 'அவளை விவாகஞ் செய்வதாயிருந்தால், நீ இந்த வீட்டு வாசற்படியிலே மிதிக்கப்படாது' என்று சண்முகத்தின் தகப்பனாரும் கண்டிப்பாகச் சொல்லியும் விட்டார்.

சண்முகத்தின் தகப்பனாருக்கு இராஜேஸ்வரியையும், அவள் தாயையும் ஊரெல்லாம் தூற்றித் திரிவதுதான் வேலை. 'இராஜேஸ்வரியின் தாய் தனது மகனுக்கு மருந்து வைத்து விட்டாள்' என்றுகூடச் சொல்லித் திரிந்தார். 'அவள் அந்த ஊரில் இருக்கிற கெட்டித்தனத்தைப் பார்ப்போம்' என்று முழக்கியடித்தார்.

இவைகள் எல்லாவற்றையும் கேள்விப்பட்ட சண்முகத்திற்கு ஆத்திரம் தாங்கமுடியவில்லை. தகப்பனிடம் நேரே போய் இராஜேஸ்வரியைப் பற்றி ஒன்றும் பேசக்கூடாதென்று சொல்ல எண்ணினான். தகப்பன் மாறுபட்டுப் பேசினால் தகப்பனுக்கு அடித்தும் விடுவான்.

இராஜேஸ்வரியிடமும் தாயிடமும் சென்று தகப்பனிடம் நிலையைக் கூறித் தகப்பனிடம் இப்பொழுதே சென்று பழி வாங்கப் போகிறேன்; என்று இரைந்தான். புத்திசாலியான இராஜேஸ்வரியின் தாய் அவனுக்கு இதம் சொல்லித் தடுத்துவிட்டாள். "அவர் சொல்லுவது போல் சொல்லித் திரியட்டும்; அவர் மாத்திரமா சொல்லுகிறார்; ஊர் எல்லாம்தானே சொல்லுகிறது. நன்றாய்ச் சொல்லட்டும். ஒருவர் நல்லாய் இருந்தால் ஒருவருக்குப் பொறாது. அயல்வாழ ஐந்து நாளைக்குப் பட்டினி கிடக்கும் ஊர் இந்த ஊர்" என்று இராஜேஸ்வரியின் தாய் சண்முகத்தின் கோபத்தை ஆற்றினாள்.

மேலும், சண்முகம் ஏதும் சொல்வானோ என்று, இராஜேஸ்வரி அவனைக் கண்ஜாடை செய்து அழைத்துக்கொண்டு வீட்டின் மறு பக்கத்திற்குப் போனாள். கோடை காலத்தில் பயிர்கள் தீய்ந்து போகும் சமயத்திற் பெய்த மழை போன்று, சண்முகத்தின் வரவு இராஜேஸ்வரிக்கு இருந்தது. அவன் வந்ததன்பின் இராஜேஸ்வரி நாளொரு வண்ணமாகத் தேறி வந்தாள்.

இராஜேஸ்வரி அவனை வீட்டைவிட்டுப் போக வேண்டாம் என்றும், அங்கே இருக்குமாறும் பணிவாக வேண்டிக்கொண்டாள். இராஜேஸ்வரியும் சண்முகமும் சாப்பிடுவதும், நாள் முழுவதும் பேசுவதும் தான் வேலை. அவர்கள் நாள்தோறும், இரவுபகலாகப் பேசியும், இன்னும் பேசுவதற்கு அதிகம் இருப்பது போலவே அவர்கள் இருவருக்கும் தோன்றும்.

"கல்லூரியிலே கன்னத்தில் அடித்தீர்களே! அவ்வளவு பிள்ளை களுக்கும் மத்தியில் அடிக்க உங்களுக்கு மனம் வந்ததா?" என்று இராஜேஸ்வரி கேட்டாள்.

"நீ ஏன் கத்தரிக்கோலைத் தர மறுத்தாய்?"

"நான் கத்தரிக்கோலைத் தந்தால் மற்ற மாணவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?"

"கத்தரிக்கோல் தந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பது?"

"அவ்வளவு மாணவிகளும் இருக்க என்னிடம் ஏன் நீங்கள் வந்து கேட்டீர்கள்?"

"பார்த்தீர்களா? நானும் உடனே எடுத்துத் தந்தால் என்னையும் உங்களையும் என்றுதானே பலதும் பத்தும் பேசுவார்கள்."

"பேசித் தள்ளட்டுமேன் இப்பொழுது என்ன பேசுகிறார்கள்?"

"இப்பொழுதும் பேசுகிறார்கள்; ஆனால், படிக்கிற காலத்திற் பேசுவது நல்லதா? யார் யாருக்கு விதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அப்பொழுது தெரியுமா?"

"யார் யாருக்கு விதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்து தானோ எல்லோரும் காதலிப்பது. சந்திராவும் சதாசிவமும் அப்படி அறிந்துதான் காதலித்தார்களா? சாரதாவும் மகாதேவனும் அறிந்துதான் காதலித்தார்களா?"

"இப்பொழுது என்ன அவர்கள் காதல் நிறைவேறிவிட்டதா? அவர்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்று தெரியுமா?"

"உனது காதல் நிறைவேறிவிட்டது போலும்."

"நான்தான் ஒருவரையும் காதலிக்கவில்லையே."

"என்மேல் உனக்குக் காதல் இல்லையா?"

"காதல் இல்லையென்று யார் சொன்னது?"

"நீ ஒருவரையும் காதலிக்கவில்லையே என்று சொன்னாயே!"

"நான் படிக்கிற காலத்திலே ஒருவரையும் காதலிக்கவில்லை என்று அல்லவா சொன்னேன்."

"உன்னை ஒருவரும் கதையில் வெல்ல இயலாது போலிருக் கிறது. நீ படிக்கிற காலத்தில் எனக்கு வாங்கித் தந்த ஒவ்வொரு அடிக்கும் எனக்கு இப்பொழுது ஒவ்வொரு முத்தம் தரவேண்டும்."

"தராவிட்டால்....."

"தராவிட்டால் அந்த அடியெல்லாம் இப்பொழுது திருப்பி யடிக்கப் போகிறேன்."

"அடியுங்கள் பார்ப்போம்."

சண்முகம் அவளை எட்டிப்பிடிக்க, அவள் மான்போல் துள்ளிக் கொண்டு ஓடிவிட்டாள். இராஜேஸ்வரி ஒவ்வொரு நாளும் புதுப்புது அழகாகக் காணப்பட்டாள். அவளைப் பார்த்துப் பார்த்து சண்முகம் பூரித்துப் போவான்.

இராஜேஸ்வரியின் தாய் தனது மகளினதும், புருஷனினதும் இன்ப வாழ்க்கையைக் கண்டு, மனமகிழ்ச்சி அடைந்தாள். ஆனால், தனது மகிழ்ச்சியைத் தான் அயலாரோடும் பகிர்ந்து அனுபவிக்க வில்லையே என்று வருந்தினாள். அந்த ஊரில் தனது மகளுக்கு ஏற்பட்ட வடு என்றும் நீங்காதென்றும் உணர்ந்தாள். தான் இல்லாத காலத்தில் தனது மகளும் மருமகனும் நிராதரவாகி விடுவார்கள் என்று மனம் வெதும்பினாள்.

இராஜேஸ்வரியின் தாய் சந்தை வியாபாரம் செய்து மிச்சம் பிடித்து ஒருவருக்கும் தெரியாமல் ஐயாயிரம் ரூபாய் அளவில் வைத்திருந்தாள். அந்த ஐயாயிரம் ரூபாயையும் செலவழியாமல் தனது மகளுக்கு ஒரு காணியையாவது, வீட்டையாவது வாங்கிவிடலாம் என்று எண்ணியிருந்தாள்.

அப்பொழுது யுத்தகாலமாதலால் காணிகள் எல்லாம் விலை யேறிக்கொண்டு வந்தன. அம்பிகாபுரத்தில் அவ்வளவு பணத்திற்கும் ஐந்து பரப்புத்தானும் வாங்கலாமோ என்பது சந்தேகம். அத்தோடு சீவனத்திற்கான பொருட்களும் விரைவாக விலையேறிக்கொண்டு வந்தன. தான் சேர்த்து வைத்திருக்கும் பணம் விரைவில் கரைந்துவிடும் என்பதை அவள் உணர்ந்தாள். இனி அந்த ஊரில் தாங்கள் மதிப்போடு இருக்கமுடியாதென்பதையும் நன்கு அறிந்துகொண்டாள்.

இராஜேஸ்வரியும், தாயும், சண்முகமும் தாங்கள் இருந்த வீட்டை யும் செட்டிக் கடைக்கு விற்றுவிட்டு எங்கோ மறைந்து விட்டார்கள்; என்று அம்பிகாபுரம் முழுவதும் பேச்சாக இருந்தது. ஆனால், அவர் களைத் தேடுவார் அம்பிகாபுரத்தில் யாருமில்லை. சிறிது நாட்களால் அவர்களையே அம்பிகாபுரம் மறந்துவிட்டது என்று சொல்லலாம்.

# அத்தியாயம் - 8

**'கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்**
**எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்**
**செல்லா தவன்வாயிற் சொல்"**

- நல்வழி என்னும் நீதிநூல்.

**ச**ம்பத்தூர், யாழ்ப்பாணத்திலிருந்து எழுபத்தைந்து மைல் தூரத்தில், யாழ்ப்பாணம் கண்டி றோட்டில் புதிதாக முளைத்த ஓர் ஊர், **சம்பத்தூர் சாகரம்** என்று மிகவும் பெரிய ஒரு பாண் குளத்தை அரசினர் பல இலட்ச ரூபாய் செலவழித்துக் கட்டினர். அக்குளத்தின் பயனாக ஒரு இலட்சம் ஏக்கர், வனவிலங்குகள் உறையும் காடு, விளைவு மிகுந்த நெல் வயலானது.

யாழ்ப்பாணத்தின் பிரபல செல்வந்தர்கள், சிங்கப்பூர் பென்ஸனியர்கள் எல்லோரும் சம்பத்தூர் காட்டில் பணத்தைப் போட்டனர். சம்பத்தூர் சாகரம் ஐந்து வருஷங்களாகப் பல இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டது. அதைக் கட்டி நிறைவேற்றுவதற்கு ஆயிரக்கணக்கான தென் இந்தியத் தொழிலாளர்கள் அழைக்கப்பட்டனர். குளம் கட்டி முடிந்ததும், காலத்துக்காலம் செய்யும் குள வாய்க்கால்கள் வேலைகளும், புதிதாகத் தோன்றிய கமங்களில் வேலைக்குமாக இந்தியத் தொழிலாளர்கள் அங்கே நிரந்தரமாகக் குடியேறினர்.

சம்பத்தூர் செல்வம் கொழுக்கும் ஊராகவே கருதப்பட்டது. பல சாகியத்தாரும் அங்கே வந்து தொழில் செய்தார்கள். சிங்களவர், சோனகர், தமிழர், இந்தியத் தமிழர் எல்லோரும் அங்கே காணப்பட்டார்கள். இவர்களுள் இந்தியத் தமிழரே அங்கே நிரந்தரக் குடிகளாகக் கருதப்பட்டார்கள். மற்றவர்கள் எல்லோரும் காட்டுக் காய்ச்சலுக்குப் பயந்து வந்து வந்து போகின்றவர்களாகவே இருந்தனர்.

யாழ்ப்பாணத்துப் பென்சனியர்களும், செல்வந்தர்களும் அங்கே தற்காலிகமாக தங்கினார்கள். சுமார் ஒருவருக்கு நூறு ஏக்கரில் ஒவ்வொரு கமம் இருந்தது. அவர்கள் கிழமைகளில் இரண்டொரு நாளோ, மாதத்தில் இரண்டொரு கிழமையோ அங்கே தங்குவதற்காகத் தங்கள் கமத்தில் ஒவ்வொரு கல்வீடும் கட்டியிருந்தார்கள். தங்கள்

கமங்களில் கம வேலைகளுக்காக இரண்டொரு இந்தியக் குடும்பங் களையும் வைத்திருந்தார்கள்.

இதிலிருந்து சம்பத்தூரில் ஒரு புதிய நாகரீகம் கிளம்பிற்று. சம்பத்தூரில், செல்வந்தர், நடப்புக்காரர், நாட்டாண்மைக்காரர் என்றால், இந்தியப்பெண் ஒருத்தியை வைப்பாக வைத்திருப்பார்கள். யாழ்ப்பாணத் துக் கமக்கார முதலாளிகள், தங்கள் கமங்களிலே ஒவ்வொரு பெண்ணை வைத்திருக்கத் தலைப்பட்டனர். சொந்த ஊரிலே சொந்த மனைவி இருந்தும் முதலாளிகளுக்குச் சம்பத்தூரில் நிற்கும் சில நாட்களுக்குப் பேருக்காகவாவது ஒரு பெண் தேவைப்பட்டது. இந்தியப் பெண்களின் மிதமிஞ்சிய உபசரணையும் அவர்களின் வறுமையும் இந்நாகரீகத்திற்கு நன்கு இடம்கொடுத்தது. சில செல்வந்தர்கள் தங்கள் வைப்பாடி களுக்குப் பிற்சீவனத்திற்காகக் கமத்தின் ஒரு பகுதியைக்கூட எழுதிக் கொடுத்தனர்.

சம்பத்தூரில் வைப்பு இல்லாத முதலாளியைத் தொழிலாளரும், கடைக்காரரும், மற்றையோரும் ஒரு படி குறைவாகவே மதித்தனர். 'அடட; விதானையாரா? அவருக்கு எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் தெரியுமா? பூ! அவரும் விதானை வேலை பார்க்கிறார் என்று மற்றவர் களாலும் பார்க்க முடியுமா?'

'ஆர் செல்லக்கண்டு முதலாளியா? அவருக்கு மூன்று கமங் காணும்; மூன்று கமத்தில் மூன்று வைப்புகள்; சனிக்கிழமை ஒரு கமம்; ஞாயிற்றுக்கிழமை ஒரு கமம்; திங்கட்கிழமை மற்றோர் கமம். நாலு நாளும் ஊரிலே நிற்பார். அவரும் முதலாளி, மற்றவர்களும் முதலாளிகள் தான்' என்று இப்படிச் சம்பத்தூரில் பேசிக் கொள்வார்கள்.

சம்பத்தூரில் தெருவாற் செல்லும் வாலிபனிலாவது, பெண்ணி லாவது பரிமளக் கந்தம் வீசாமல் விடாது. நல்ல அழகான பெண்களும், ஆண்களும் அங்கே அருமையேயானாலும், முலாம் பூசிய நகைக ளாலும், கண்ணாடி வளையல்களாலும், குறைந்த விலையுள்ள முகப் பவுடர்களினாலும் தங்களை அலங்கரித்திருப்பார்கள்.

ஒருவனை, ஒருத்தியைப் பார்த்து, இவன் சிங்களவனோ, தமிழனோ, சோனகனோ, இந்தியனோ என்று அங்கே சொல்ல முடியாது. எல்லா சாகியத்தாரும் எல்லாவிதமாகவும் உடுத்திருப்பார்கள்.

சம்பத்தூரின் செழிப்பான ஒரு பகுதியை அரசினர் குடியேற்றத் திட்டத்தின் கீழ்க்கொண்டு வந்தனர். நிரந்தரமாகக் குடியேறுபவர்களுக்கு இரண்டறையும், விறாந்தையும், குசினியும் உள்ள ஒரு கல் வீடும், கற்கூசும், கிணறும் அமைந்த இரண்டு ஏக்கர் வளவுக் காணியும், ஐந்து ஏக்கர் நெற்பயிர்க் காணியும், தொழில் ஆரம்பிப்பதற்கு முற்பணமும் கொடுத்தனர்.

அவர்களுக்கு 'ரேடியோ', வாசிகசாலை, விளையாட்டிடம் முதலிய பொழுதுபோக்கு நிலையங்களும், வளர்ந்தோருக்கு இராப் பாடசாலையும், ஆஸ்பத்திரி, தபாற்கந்தோர் ஆதியனவும் அரசினரால் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்பட்டன. அணிஅணியாக வகுத்த குடியேற்ற வளவுகளும், ஒரே மாதிரியாகக் கட்டப்பட்ட கட்டடங்களும் பார்ப்பதற்கு மிகவும் இரம்மியமாக இருந்தன.

பல பாகங்களிலிருந்தும் சமூகத்தாற் கழிக்கப்பட்டவர்கள் அங்கே வந்து குடியேறினார்கள். சிங்களப் பெண்ணை விவாகஞ் செய்த தமிழர், சோனகப் பெண்ணை சிங்களனும் என்று இப்படி இனம் மாறி விவாகஞ் செய்தோரும், உயர்ந்த சாதியும் தாழ்ந்த சாதியுமாகக் குலம் மாறி விவாகஞ் செய்தோரும், அளவுக்கு மிஞ்சிய செலவு செய்து கடன் பாரமேறி உள்ளதெல்லாம் விற்றுவிட்டு வந்த தரித்திரர்களும், கஷ்டப் பட்டு உழைக்கமுடியாத சோம்பேறிகளும், ஊரிலே கள்ளன், கபடி, கெட்டவன், விபச்சாரி என்று பழிக்கப்பட்டவர்களும், கால கஷ்டத்தால் தரித்திரமானவர்களும் இன்னும் பலரும் அங்கே வந்து குடியேறினர்.

சாதி மத பேத வித்தியாசமின்றி எல்லாரும் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். தாங்கள் புதிதாகக் குடியேறிய இடத்திலும் பிழை விடக் கூடாதென்று திருத்தமாக நடந்தார்கள். முதுகிலே புண் உள்ளவன் பற்றைக்கூடாக நுழையும்பொழுது மிகவும் அவதானமாக நுழைவான். முன் ஒருமுறை ஒரு சமூகத்தால் ஒதுக்கப்பட்டு வந்தவர்கள், இப்புதிய சமூகத்திலும் பிழைவிடக்கூடாதென்று மிகவும் அவதானமாக வாழ்ந்தார்கள்.

சண்முகமும், இராஜேஸ்வரியும், தாயும் இந்தக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் வந்து குடியேறினார்கள். இராஜேஸ்வரியின் தாய் தாங்கள் அம்பிகாபுரத்தில் இருந்த வளவை ஏழாயிரம் ரூபாய்க்கு விற்றுப் பணத்தைக்கொண்டு வந்தாள். அப்பணத்திற்கு அவள் தன்

பேரில் ஒரு இருபத்தைந்து ஏக்கர் கமத்தை விலைக்கு வாங்கினாள். சண்முகம் தனது கெட்டித்தனத்தாலே அக்கமத்தைச் செவ்வனே நடத்தி வந்தான். அதனால் நல்ல வருவாயும் வந்தது.

இராஜேஸ்வரி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதற்கு 'சண்முகராஜா' என்று பெயர் சூட்டினர். அக்குழந்தையைத் தாயைப் போல என்று சிலரும், தந்தையைப் போல என்று வேறு சிலரும் சொல்லி வந்தனர். அவர்களுடைய சீவியம் சம்பத்தூரில் மிகவும் இனிமையாகக் கழிந்தது.

சண்முகம் தனது சீவியம் இவ்வளவு விரைவில் சிறப்பாக அமையும் என்று எண்ணியிருக்கவில்லை. அவனுக்கு ஒன்றாலும் குறைவில்லை. அவனும் சம்பத்தூரில் ஒரு முதலாளியாகவே கருதப் பட்டான். ஒரு குறைவுமற்றவனாகிய அவன் அயலவர்களின் விஷயங் களிலும் தலையிட்டான். குடியேற்றப் பகுதியில் வரும் தொல்லை களைத் தானே தீர்த்து வைத்தான். மெல்ல மெல்லச் சண்முகத்தின் தலைமை ஓங்கிக்கொண்டு வந்தது.

அவனுடைய கண்களும் முகமும் குடி வெறியன் போற் காட்டும். இரகசியமாய் வீட்டில் குடிப்பவன் என்றும் சொல்லிக் கொண்டார்கள். கூலியாட்கள் தங்கள் குடும்பக் கலவரங்களை அவனிடம் முறை யிட்டால், அவன் உடனே குற்றம் உள்ளவர்களுக்கு அடிபோட்டுத் திருத்தி வைப்பான்.. தெருவிலே திண்ணையிலே சண்டை போடுகிறவர் களைக் கண்டாலும் உடனே இரு பகுதிக்கும் அடித்துத் திருத்தி வைப்பான்.

இளைஞனும் நல்ல திடகாத்திரமுமுள்ள அவனுக்குச் சில நாட்களால் சம்பத்தூர் முழுதும் பயப்பட்டது. நின்றாற் போல் நின்று எவனுக்கும் அடிக்கப் போகிறான் என்று தெரியாமல், 'பளார்' என்று மின்னிவிடுவான். அல்லது தள்ளி விழுத்திவிடுவான். எந்தப் பெரிய வீரனும் பயந்து போவான். சம்பத்தூரில் அவனுக்கு எதிர் நிற்க ஒருவரும் கிடையாது.

காலஞ் செல்லச் செல்ல சம்பத்தூர் சண்முகத்தின் புகழ் வட மாகாணம் முழுவதும் பரவத் தொடங்கியது. சம்பத்தூர் சண்முகனைப் பற்றிப் பல புரளிக் கதைகளும் சனங்கள் பேசினார்கள். அவன் எத்தனையோ பேரை அடித்துக் கொன்று புதைத்து விட்டான் என்றும்,

ஒரு முறை 'கவர்ன்மென்ட் ஏஜென்ட்' அவனைக் கூப்பிட்ட பொழுது அவன் போகவில்லையென்றும், பின்பு 'ஏஜென்ட்' அவன் வீட்டுக்குச் சென்று சந்தித்துப் போனார் என்றும் எத்தனையோ புரளிக் கதை களைச் சனங்கள் பேசினார்கள்.

சம்பத்தூர் சண்முகம் மிகவும் நல்லவன் என்றும், பொல்லாதவர் களுக்குப் பொல்லாதவனென்றும் சொல்லிக் கொண்டார்கள். சம்பத்தூர் சண்முகம் தெருவாற் போனால் எல்லோரும் 'வாருங்கள் ஐயா' என்று இரண்டு கையாலும் வழியனுப்புவார்கள். சம்பத்தூர் சண்முகத்தோடு சினேகஞ் செய்ய எத்தனையோ பெரிய மனுஷர்கள் ஆவல் கொண்டார்கள். சம்பத்தூருக்குப் போனால் முதல் சண்முகத்தைக் காணவேண்டும் என்று ஒரு மரபே இருந்து வந்தது.

சம்பத்தூர் சண்முகத்திற்கு ஓய்வுறக்கமில்லை. விடிந்தால் பொழுதுபடுமட்டும் அவனைப் பேட்டி காண வருபவர்கள் 'கியூ'வில் நின்று வரவேண்டியிருந்தன. 'ஐயா நித்திரை, ஐயா சாப்பிடுகிறார்' என்று வாயிலில் நின்று ஒருவர் சொல்லவேண்டியிருந்தது.

அந்தக் காலத்தில் சம்பத்தூர் வருபவர்கள் தொகையும் மிக அதிகம். யுத்தகாலம் யாழ்ப்பாணத்தவர்கள் உத்தரவு பெற்று நெல் ஏற்றிக்கொண்டு போவதற்குச் சம்பத்தூருக்கு வந்தவண்ணமாகவே இருந்தார்கள். சம்பத்தூர் சண்முகத்தைக் கண்டாற்றான் எல்லாம் இலகுவாக முடியும் என்று முதலில் அவனிடம் வருவார்கள். சண்முகத்தின் பெயர் அவனுடைய முயற்சி அதிகம் இல்லாமலே வானளாவப் பரவத் தொடங்கியது.

சம்பத்தூர் சண்முகம் தனது மனைவியுடன் ஐந்து நிமிஷம் பேசவேண்டியிருந்தாலும் வாசலிற் காவல் போட்டே பேசவேண்டி இருந்தது.

"என்ன உங்களிடம் இருக்கும் வித்தை. இவ்வளவு சனங்களும் உங்களைக் காணத் துடிக்கிறார்களே! ஒரு தேசத்து இராஜாவுக்குக்கூட இவ்வளவு நடப்பு இராதே!" என்று இராஜேஸ்வரி ஆச்சரியத்தோடு கேட்பாள்.

"எல்லாம் மகாராணி இராஜஇராஜேஸ்வரியினுடைய அதிஷ்டந்தான்"

"இல்லை, இல்லை; எல்லாம் இந்தச் சண்முகராஜனுடைய அதிஷ்டம்!" என்று சொல்லிக் குழந்தையைச் சண்முகத்திடம் கொடுத்தாள். இருவரும் ஒரு ஐந்து நிமிஷம் குழந்தையுடன் விளையா டுவார்கள். இதற்கிடையில் 'டீ.ஆர்.ஓ. ஐயா காரில் வந்து நிற்கிறார்' என்று ஒருவன் ஓடிவந்து சொல்லுவான். உடனே சண்முகம் அவரைப் பேட்டி காணச் செல்லுவான். இப்படிச் சண்முகத்திற்கு ஓய்வு உறக்கம் இல்லை.

சம்பத்தூர் புகையிரத நிலையத்திற்கு 'ஸ்ரேசன் மாஸ்ரராக' நாகலிங்கம்பிள்ளையும் மாறி வந்தார். சம்பத்தூர் சண்முகம் தனது மனைவியின் வேண்டுதலின் பேரில் ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம் பிள்ளையிடம் சென்று சாரதாவைப் பற்றி விசாரித்தான்.

சாரதா இந்தியாவிற் சங்கீதம் கற்கிறாள் என்றும், ஒரு மாத முடிவிலே லீவில் வருகிறாள் என்றும், சந்திரா கொழும்பில் படிக்கிறாள் என்றும், இரண்டொரு நாளால் அங்கே வருகிறாள் என்றும் சொன்னார். இவைகள் எல்லாவற்றையும் சண்முகம் இராஜேஸ்வரிக்குச் சென்று சொன்னான். சந்திராவோடு இராஜேஸ்வரி அதிகம் நட்புடையவள் அல்லள். சாரதாவின் வருகையை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்தாள். மகாதேவன் கடைசியாகச் சொன்ன தகவலையும் சாரதாவுக்கு இன்னும் சொல்லவில்லையல்லவா? அவள் வருகின்ற நாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள்.

# அத்தியாயம் - 9

'கைக்கரும் பென்ன கணை யென்ன - மன்மதா
செக்கரும் பாவி நிலாவுமே போதாதா - மன்மதா'

சந்திரா ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளையின் பிள்ளை களுள், விவேகமும் ஒழுக்கமும் அமைந்தவள். அமைதியான போக்கு டையவள்; ஆழ்ந்த சிந்தனையுடையவள். ஆனால், அவளால் தனது பால்ய சினேகிதனான சதாசிவத்தை மறக்கவே முடியவில்லை. அவளுடைய இருதயத்தில் சதாசிவத்தினுடைய உருவம் நிரந்தரமாக இடம் பெற்றுக் கொண்டது. அல்லும் பகலும் அவன் சிந்தனையாகவே இருந்தாள். தான் பூரணமாக விசுவாசிக்கின்ற தனது காதலனைக் கடவுள் தனக்குத் தந்தே தீருவார்; என்று பூரணமாக நம்பியிருந்தாள். அந்த நம்பிக்கையிலேயே சீவித்து வந்தாள்.

நாகலிங்கம்பிள்ளை பேசி வந்த எத்தனையோ சிறந்த வரன்கள் எல்லாவற்றையும் சந்திரா ஒவ்வொரு சாட்டுச் சொல்லி மறுத்து வந்தாள். ஆனால் எத்தனை நாளைக்குத்தான் மறுத்துக்கொண்டு வர முடியும். காதலனைக் காணவில்லையென்ற வேதனையும் தந்தையின் நெருக்க மும் அவளை மிகவும் துன்புறுத்தியது.

அவள் தினமும் அழுதுகொண்டே நித்திரைக்குப் போவாள். அவளுடைய கண்கள் பஞ்சடைந்து ஒளியிழந்து விளங்கின. அந்தக் கண்கள் காதலனையே எங்கும் தேடிப் பூத்துப்போயின. சதாசிவம் இன்ன இடம் எனத் தெரியாமல் இரண்டு வருஷங்களாகின்றன.

முதலில் அவர் உத்தியோகம் தேடிக்கொண்டு தன்னை வந்து சந்திப்பார் என்று சந்திரா நம்பியிருந்தாள். ஆனால், அந்நம்பிக்கை வரவர அவளுக்கு அலுத்துப் போய்விட்டது.

பின் சதாசிவத்தை ஆசிரியர் குழாத்தில் எங்காவது சந்திக்கலாம் என்று எண்ணினாள். அதை எண்ணியே, அவள் தானும் படிப்பிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, கொழும்பிலே கன்னிகாஸ்திரி மடம் ஒன்றில் ஓர் இடம் எடுத்துக்கொண்டு, படிப்பிக்க அமர்ந்தாள். சதாசிவத்தைச் சந்திக்கலாம் என்ற எண்ணத்தோடு அதிகமாக ஆசிரியர் சங்கங்க ளுக்குப் போவாள். அங்கே ஒவ்வொருவரையும் கவனிப்பாள்.

ஒருமுறை கொழும்பில் நடந்த அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் அவரை எப்படியும் சந்திக்கலாம் என்று நம்பியிருந்தாள். அந்த நாளை எவ்வளவோ ஆவலுடன் காத்திருந்தாள். அன்றைக்குத் தான் எப்படியும் அவரைச் சந்தித்து விடலாம் என்று எண்ணினாள். எதிலும் முற்போக்கும் விவேகமுள்ள சதாசிவம், அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் ஓர் பேச்சாளனாக இருப்பான் என்றுகூட எண்ணினாள்.

அகில இலங்கை ஆசிரியர் சங்கம் மூன்றுநாள் நடைபெற்றது. மூன்று நாளும் முழுவேளையும் தவறாது சமூகம் அளித்தவர்களுள் சந்திராவும் ஒருத்தி. ஆனால் சங்கத்தில் என்ன நிகழ்ச்சிகள் நடந்த தென்று சந்திராவுக்கு ஒன்றுந் தெரியாது. சந்திராவின் பெரிய கண்கள் சுழன்று சுழன்று சதாசிவத்தைத் தேடின. இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடிவரையும், மண்டபம் முழுவதும், சல்லடை போட்டுத் தேடின. சதாசிவம் இருப்பது போலத் தோற்றும். பின் கூர்ந்து பார்த்தால் வேறு யாரோ போல் தோன்றும்.

ஒரு மூலையில் சதாசிவந்தான். சாக்ஷாத் அவனேதான்; கண்டாள். அவளுடைய கண்கள் அங்கே நிலைத்துவிட்டன. தன்னை நன்றாக அவனுக்குக் காட்டுவதற்காக, உடை திருத்துபவள் போல் எழும்பி உட்கார்ந்தாள். அவனும் தன்னை நோக்குவதை அவதானித் தாள். அவன் இடையிடை புன்சிரிப்பும் கொள்ளுகிறான்.

கூட்ட முடிவில் அவன் எழும்பிச் சந்திராவை நோக்கி வந்தான். அப்பொழுதுதான் அவன் வேறு யாரோவென்று சந்திராவுக்குத் தெரிந்தது. அவள் மெதுவாகக் கூட்டத்தினுள் மறைந்து அவனில் அகப்படாமல் சென்றுவிட்டாள். மறுநாட் கூட்டத்தில் அவன் சந்திராவைத் தேடத் தொடங்கினான். சந்திராவுக்குச் சதாசிவத்தைத் தேடுவதை விட்டு, அவன் கண்ணிற் படாமல் மறைவதே பெரிய வேலையாயிருந்தது.

இவைகள் எல்லாவற்றையும் நினைத்து அவள் தனியே இருந்து அழுவாள். அவள் தனது சகபாடிகளுக்குக் கூடத் தனது ஏமாற்றத்தைக் கூறவில்லை. தனக்குள்ளேயே எண்ணி வருந்தினாள். அவள் தனது சுகதுக்கங்களை எவருக்குமே சொல்லுவது கிடையாது.

சந்திரா சதாசிவத்தையேயன்றி வேறு எவரையும் விவாகஞ் செய்வதில்லையென்று எண்ணியிருந்தாள். சதாசிவம் தன்னைத் தவிர்த்து

வேறு யாரையும் விவாகம் செய்தால் சந்தர்ப்பங்களுக்கியைய நடப்ப தென்றும் தீர்மானித்திருந்தாள்.

சதாசிவம் விவாகம் செய்தது, செய்யாததைப் பற்றி ஒன்றும் தெரியாது. தந்தையாரின் நெருக்கமும் கடுமையாய் இருந்தது. தான் விவாகஞ் செய்யப் போவதில்லை என்றும், தனக்கு விவாக ஒழுங்கு வேண்டாமென்றும், கண்டிப்பாகத் தகப்பனிடம் சொல்லிவிடச் சந்திரா தீர்மானித்தாள்.

சதாசிவத்தைச் சந்திப்பேன் என்று அவள் அந்தராத்மா கூறியது. ஆனால், அவள் சதாசிவத்தைத் தேடித் தேடி அலுத்துப் போனாள். இனித் தேடுவதில்லை; தான் விவாகஞ் செய்யாதிருக்கும் விஷயத்தி லேயே தனது சக்தியெல்லாவற்றையும் விரயஞ் செய்வது; கடவுள் எப்பொழுதாவது ஒரு நாள் அவரைக் காட்டுவார்; அதுவரையும் பொறுத்திருப்போம்; என்று தீர்மானித்தாள்.

ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளை தனது பிள்ளைகளையிட்டு மிகவும் மனம் வருந்தினார். இரண்டு பெண்பிள்ளைகளில் தான் ஒருவ ருக்காவது இன்னும் விவாகஞ் செய்து வைக்கவில்லையே என்று வருந்தினார். இம்முறை சந்திரா வந்ததும் அவளை எப்படியாவது சமாதானஞ் செய்து, விவாகத்திற்கு ஒழுங்கு செய்துவிட வேண்டுமென்று நினைத்தார்.

சந்திரா கொழும்பிலிருந்து வரும் வண்டியில் மாலை ஐந்து மணிக்குச் சம்பத்தூர் ஸ்டேசனில் வந்து இறங்கினாள். தகப்பனாருடன் பொதுவாகப் பேசிவிட்டு மேல்மாடிக்கு ஏறிச் சென்றாள்.

சந்திரா அங்கே தனது புத்தக அலுமாரியைக் கண்டதும் ஒரு முறை அதைத் திறந்து, புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தாள். தனது காதலன் சதாசிவத்தாற் கொடுக்கப்பட்ட புத்தகம் ஒன்று அதனுள் இருந்தது. அப்புத்தகத்தை எடுத்துத் திறந்து பார்த்தாள். முத்து முத்தான எழுத்தில் சதாசிவம் என்று எழுதியிருந்தது. அதைக் கண்டதும் தனது காதலனைக் கண்டவள் போன்று மகிழ்ச்சி கொண்டாள். அப்புத்தகத் தையும் எடுத்துக்கொண்டு போய் படுக்கையிற் படுத்துக் கொண்டு அவ்வெழுத்துக்களையே உற்றுப் பார்த்தாள். மேலும் மேலும் பார்த்தாள். அப்புத்தகத்தை மார்பில் அணைத்தவாறே அயர்ந்துவிட்டாள். பிரயாணக் களைப்பினாலும், தற்காலிகமாகக் கிடைத்த ஒரு மன அமைதியினா லும், நெடுநேரம் தூங்கிவிட்டாள்.

நாகலிங்கம்பிள்ளை இரவு சாப்பாட்டுக்கு வரும்பொழுது சந்திரா நல்ல நித்திரை. அவர் அவளை எழுப்பாமல் தான் சாப்பிட்டுவிட்டு தனது மகள் வந்திருக்கிறாள் என்றும், அவள் எழும்பினவுடன் அவளுக்கு உணவு கொடுக்கும்படியும் சமையற்காரனிடம் கூறிவிட்டு டியூற்றிக்குப் போய்விட்டார்.

இரவு ஒன்பது மணிக்கு கொழும்பு 'மெயில்' வண்டியின் இரைச் சலுக்குத்தான் சந்திரா எழும்பினாள். வண்டியின் அலறல் சத்தத்திற்கு எழும்பி வெளியே வந்தாள்; மேல்வீட்டு விறாந்தையில் நின்று கொண்டு 'மெயில் வண்டி'ப் பிரயாணிகளைக் கவனித்தாள். அந்தப் பிரயாணி களுக்குள் எங்காவது ஒரு இடத்தில் சதாசிவமும் இருப்பானோ என்று மனம் அங்கலாய்த்தது. அவளுடைய முயற்சியின்றியே அவள் கண்கள் அந்தப் பிரயாணிகளைத் துருவித் துருவி ஆராய்ந்தது.

அன்று வைகாசி விசாகம். தமிழர்களுக்கும் சிங்களருக்கும் சிறப்பான பண்டிகைத்தினம். வண்டி முழுவதும் சனக்கூட்டமாய் இருந்தது. அந்தப் பெரிய சனக்கூட்டத்துள் ஏன் சதாசிவம் இருக்கக் கூடாது, என்று அவள் எண்ணினாள். அவளுக்கு எல்லோரும் சதாசிவம் போலவே தென்பட்டனர். மறுகணம் சதாசிவம் போன்றோர்கள் கூட ஒருவரும் இல்லைப் போறபட்டது. அவள் கண்கள் வேலை செய்யும் சக்தியை இழந்துவிட்டன. நன்றாக வேலை செய்யும் மாட்டை மேலும் மேலும் தூண்ட அவை படுத்துக் கிடப்பதும், குறுக்கே இழுப்பதும் ஆகக் குழப்படி விடுவதுபோல அவள் கண்களும் அவளுக்குக் கீழ்படிய மறுத்துவிட்டன. ஒரே மாதிரியான வேலையை வருஷக் கணக்காகச் செய்து கண்கள் அலுத்துப்போய்விட்டன. கண்கள் அவளை ஏமாற்றின. உலகத்தில் ஒன்றும் இல்லையென்று சொல்லும்படியாகச் சில சமயம் அவளுக்கு இருளாகத் தோன்றும்.

'மெயில்' வண்டியிலிருந்து சதாசிவம் கைகாட்டி அழைப்பது போல் தோன்றும். உற்றுப் பார்க்க வேறு யாரோ போலத் தோன்றும். பின்னும் பார்க்க அவன் போலவே தோன்றும்.

இனிமேல் தனது கண்களை நம்பி வாழ முடியாதென்பதை உணர்ந்தாள். அவராகவே நான்தான் சதாசிவம், என்று வந்தாலன்றித் தான் அவரைக் கண்டுபிடிக்க முடியாதென்பதையும் உணர்ந்தாள்.

இதே சிந்தனையில் மேலே பிரகாசமாக இருந்த சந்திரனை நோக்கிப் பெருமூச்சு விட்டாள். சந்திரனின் கிரணங்கள் அவளின்

மயிர்க்கால் துவாரங்கள் ஒவ்வொன்றிலும் சென்று அவளைத் துளைப்பது போல் அவளுக்கு வேதனையூட்டியது. தனது கிரணங்க ளால் தன்னைக் குத்திக் கொல்லச் சந்திரன் அவளுக்குக் கிட்ட வருவது போலிருந்தது. வாகை மரத்தையும் தள்ளிக்கொண்டு நெருப்புப் போல அவள் முகத்தில் ஒரு தென்றற் காற்று தவழ்ந்து கொண்டு சென்றது.

'மெயில்' வண்டியும் சென்று விட்டது. இந்த வேதனைகளை அவளால் பொறுக்க முடியவில்லை. உள்ளே திரும்பினாள். திரும்பி ஒரு எட்டு எடுத்து வைப்பதற்கிடையில் யாரிலோ தடக்குப்பட்டு கீழே விழுந்துவிட்டாள். கீழே படுத்திருந்தவனுக்கு மேலே விழுந்ததால் காயம் ஒன்றும் ஏற்படவில்லை.

நாகலிங்கம்பிள்ளை 'டொக் டொக்' என்று மேல் வீட்டில் கைலாம்புடன் ஏறி வந்தார். அவர் ஏறி மேலே வருவதற்கும் சந்திரா எழுந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. கீழே கிடந்தவனும் எழும்பி நின்றான். விதி அவர்களைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தது. அங்கே கிடந்தவன் சதாசிவம்தான்.

# அத்தியாயம் - 10

'அடகெடுவாய் பலதொழிலு மிருக்கப் பள்ளி
ஆசிரியத் தொழில்பெரிதென் றெண்ணி வந்தோம்
படியினிலே மடப்பள்ளி வேலை நூறு
படிபெரிதென் றிப்பொழுதே யறிந்து கொண்டோம்
..................................................................................'

- 'பல்லிகள் தூதுக்கோஷ்டி' சோ.ந.

சதாசிவம், 'தமிழ் ஆசிரியனாகிய தன்னைச் சந்திரா இனிமேல் விருப்போடு விவாகம் செய்வாளா?' என்று சந்தேகப்பட்டான். ஒரு சமயம் 'சந்திரா அப்படிப்பட்டவளல்ல; அவள் தன்னையன்றி வேறு எவரையும் விவாகஞ் செய்யாள்' என்று நினைப்பான். இவ்விதமாக அவளிடத்து இருநிலைப்பட்ட மனம் உடையவனாக இருந்தான்.

சந்திரா இருக்குமிடத்தை அறிந்து அவளோடு மீண்டும் கடிதப் போக்குவரத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றே நினைத்தான். சிலசமயம், அவளுடைய நிலைக்கு அவள் யாரும் பெரிய உத்தியோகஸ்தர்களை விவாகஞ் செய்து கொண்டு நல்லாயிருக்கட்டும். நான் குறுக்கே போகக்கூடாது என்று நினைப்பான். முடிவில் விதியே தீர்மானிக்கட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டான்.

சதாசிவம் அம்பிகாபுரத்தைவிட்டுப் புறப்பட்டு முதலிற் கொழும்புக்குச் சென்றான். அங்கே வித்தியாகந்தோருக்குச் சென்று அரசினர் பாடசாலைகளில் இடம் எடுக்கலாமோவென்று அலைந்தான். அவர்கள் வேலையற்றோரைப் பதிந்து வைத்த முறைப்படி தரலாம் என்று சொன்னார்கள். அந்த முறை எந்த ஆண்டில் வருகிறதோ தெரியாது? என்று அதை விட்டுத் தோட்டப் பாடசாலைகளில் இடம் எடுக்கலாம் என்று மலைநாட்டுக்குச் சென்றான்.

அவன் போனவேளை அங்கும் ஒரு இடமும் கிடைக்கவில்லை. திரும்பி வந்து நண்பனுடன் வவுனியாவில் இறங்கினான். வவுனியா அப்பொழுது 'மிலிற்றரி' மத்திய நிலையம். வவுனியாவில் மிலிற்றரியில் ஏதோ உத்தியோகம் ஆனான்.

அவன் எடுக்கும் சம்பளமும் செலவும் சரியாக இருந்தது. எப்படிச் செலவழித்தபோதிலும்; போதிய உணவு அவனுக்குக் கிடைக்கவில்லை.

வவுனியாப் பகுதி நெல் மிகுந்த பகுதியேயானாலும், யுத்தகாலத்தில் அங்கே பெரிய பஞ்சம்.

சதாசிவம் இயற்கையிலேயே போசனத்தில் நூதனமுள்ளவன். ருசியான உணவாகச் சாப்பிடுபவன். அப்படிப்பட்டவனுக்குக் கடைகளில் சாப்பிடும் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. கடைசியாக அவனும் நண்பன் ஒருவனுமாக ஒரு இடத்தில் சமைத்துச் சாப்பிட்டார்கள். அதில் சிறிது திருப்தியடைந்தான். அதனால் நன்றாகச் சமைக்கவும் பழகிக்கொண்டான்.

வவுனியாவில் மிலிற்றரி வேலை சிலகாலத்துக்குத்தான் இருந்தது. இரண்டு வருஷத்தால் சதாசிவத்தை விட்டுவிட்டார்கள். சதாசிவத்திற்கு மேலே என்ன செய்வதென்று ஓடவில்லை. ஆசிரியத் தொழிலும் எடுக்க முடியாது. கடின வேலைகளும் செய்யமாட்டான். ஒருநாள் முழுதும் கிடந்து யோசித்தான். முடிவாகச் சமையற்காரன் வேலைதான் தனக்குச் சரியென்று தீர்மானித்துக்கொண்டான். சாப்பாட்டாலும் குறைவிராது. வேலையும் அவ்வளவு கடினமிராது. பெரிய உத்தியோகஸ்தர் வீட்டில் சமையலுக்கு நின்றால் சத்துள்ள சாப்பாடும் சாப்பிடலாம். கவலையில்லாமல் பொழுதும் கழியும். ஒரு சமையற்காரனுடைய அனுபவத்தையும் பெற்றதாய் விடும். சமையல் வேலையி லிருக்கும் பொழுது ஆசிரியர் உத்தியோகம் வந்தால் அதை விடுத்து ஆசிரியத் தொழிலுக்குப் போய் விடலாம். சதாசிவம் வேலையற்ற ஆசிரியர் ஏட்டில் தன்னையும் பதிந்து வைத்திருந்தான். என்றாவது ஒருநாள் தனக்கு அதன்படி வேலை கிடைக்கும் என்று நம்பியி ருந்தான்.

மறுநாளே வவுனியாவிலிருந்து புறப்பட்டான். தூர தேசத்தில் சமையற்காரனாக நின்றால், தன்னை அறிந்தவர்கள் ஒருவரும் சந்திக்க மாட்டார்கள், என்று எண்ணி மட்டக்களப்புக்குச் சென்றான். மட்டக்களப்பு ஸ்ரேசனில் இறங்கி அங்கே நின்று உலாவினான்.

சதாசிவத்துக்கு மட்டக்களப்பு முன்பின் தெரியாது. எங்கே போகவேண்டுமென்றும் தெரியாது. புகையிரத நிலையத்திலேயே நின்று யோசித்தான். மட்டக்களப்பு ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளை அவனைக் கூப்பிட்டு விசாரித்தார். அவன் அடக்க ஒடுக்கமாக நின்று விசுவாசமுள்ள சமையற்காரன் போலப் பதில் சொன்னான். நாகலிங்கம் பிள்ளைக்குக் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி இருந்தது.

சதாசிவத்திற்கு நாகலிங்கம்பிள்ளையை முன்பு தெரியாது. அவருடைய சொந்த ஊர் அம்பிகாபுரம் என்பது கூடத் தெரியாது. தனது ஊர் நல்லூர் என்றும் பெயர் சாம்பசிவம் என்றும் அவருக்குத் தன்னுடைய விலாசத்தையும் பிழையாய்த் தெரிவித்தான். அதனால் இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளவில்லை. தங்கள் தங்கள் கடமையைச் செய்துகொண்டு இருந்தார்கள்.

சாம்பசிவத்தின் சமையல் நாகலிங்கம்பிள்ளைக்கு நன்றாகப் பிடித்துக்கொண்டது. சாம்பசிவம் செலவிலும் சிக்கனமாக இருந்தான். பிறர் ஒருவரோடும் பேசாமல் தானும் தன்பாடுமாகச் சாம்பசிவம் சமைய லறையிலேயே அதிகமாகக் காலத்தைக் கழித்தான். தனது நாளாந்தர கடமைகளைப் பிறர் ஏவாமல் தானே செய்து முடித்து விடுவான். நாகலிங்கம்பிள்ளைக்கு அவன்மேல் அன்பு வளர்ந்தது.

சாம்பசிவம் மட்டக்களப்புப் போய் ஒரு கிழமையால் நாகலிங்கம் பிள்ளை சம்பத்தூருக்கு வேலை மாறி வந்து விட்டார். சம்பத்தூர் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் இருப்பதால் சம்பத்தூரில் தனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இருப்பார்கள் என்று சாம்பசிவம் சம்பத்தூருக்கு வரக் கூசினான். சம்பத்தூருக்கு வந்தபின் அவன் அதிகமாக வெளியில் வெளிப்படுவதேயில்லை.

நாகலிங்கம்பிள்ளை தனது மகள் வருகிறாள் என்றும், விசேஷ சமையல் செய்யுமாறும் அன்று மாலை சாம்பசிவத்துக்குச் சொன்னார். அவர் இரவு சாப்பிட வரும்பொழுது, சந்திரா நல்ல நித்திரையாய் இருக்கவே அவள் எழுந்ததன்பின் அவளுக்குச் சாப்பாடு கொடுக்கச் சொல்லிவிட்டு, அவர் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டார்.

சாம்பசிவம் நாகலிங்கம்பிள்ளையின் மகள் வந்தவுடன் காணவு மில்லை. பிறகு, பார்க்க அவன் நினைக்கவுமில்லை. அவள் எழும்பின வுடன் சாப்பாடு கொடுப்போம், என்று அவன் வழக்கப்படி மேல் வீட்டு வராந்தாவில் ஓலைப்பாயை விரித்துக்கொண்டு படுத்திருந்தான். படுத்திருந்து சற்று நேரத்தால் உறங்கிவிட்டான்.

சந்திரா 'மெயில்' வண்டியின் சத்தத்திற்கு எழும்பி வரும்பொழுது விறாந்தையில் படுத்திருந்த சமையற்காரனை அவதானிக்கவில்லை. அப்பொழுது அவள் தட்டுப்படவுமில்லை, அவளைக் கடந்து கொண்டு போய்த்தான் அவள் 'மெயில்' வண்டியைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

'மெயில்' சம்பத்தூர் ஸ்டேசனை விட்டுப் போகும்பொழுது இட்ட கூச்சலுக்குச் சாம்பசிவம் அருண்டு மறுபக்கம் திரும்பினான். அவன் அருண்டு காலை அசைத்ததற்கும், சந்திரா திரும்பினதற்கும் சரியாய் இருந்தது. சந்திராவின் கால்கள், சாம்பசிவத்தின் கால்களோடு தடக்குப் பட்டு, 'டபார்' என்று சாம்பசிவத்தின்மேல் விழுந்தாள்.

சாம்பசிவம் நித்திரை மயக்கத்தில் ஒன்றும் தெரியாமல் சில சமயம் கள்வனாயிருக்குமோ என்று யோசித்ததும் யோசிக்காமலும் விழுந்த உருவத்தை எழும்ப விடாது கெட்டியாகக் கட்டிப்பிடித்துக் கொண்டான். சாம்பசிவம் தன் மேல் விழுந்த உருவம், ஒரு பெண் என்று அறிந்ததும் பரபரப்போடு எழும்பினான்.

ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளை, மகள் எழாவிட்டால், எழுப்பிச் சாப்பிடச் சொல்லிவிட்டுச் சுருட்டுக் கட்டும் எடுத்துக்கொண்டு போவதற்காக மேலே வந்தார். சந்திராவோ, சாம்பசிவமோ, விழுந்தெழும்பி நிற்கிறார்கள் என்று ஊகித்தாரேயன்றி ஒருவருக்குமேல் ஒருவர் விழுந்தார்கள் என்று அவர் ஊகிக்கவில்லை. அவதானமாகப் படிகளால் இறங்கிப் போகவேண்டும் என்று எச்சரித்துவிட்டு, ஒரு 'ஸ்பெஷல்' வண்டியும் வருகின்றதென்று தன்னுடைய வேலைக் கஷ்டத்தைச் சொல்லிக் கொண்டு போனார்.

ஸ்ரேசன் மாஸ்ரர் வேலை என்ன கடினம் என்று சாதாரணமாகத் தோன்றும். ஒரு 'ஸ்பெஷல்' வண்டி வருகிறதென்றால் அவர்கள் மனக் கஷ்டத்தைப் பார்க்க வேண்டும். ஏதோ தங்கள் முதுகில் ஓடப்போவது போல வருத்தப்படுவார்கள். கீழ் வேலைக்காரர்களிடம் எரிந்து, புகைந்து கொண்டு நிற்பார்கள். பிரயாணிகள்மேல் சீறி விழுவார்கள். நாகலிங்கம் பிள்ளையும் 'ஸ்பெஷல்' வருகிற புகைச்சலுடன் தாமதியாமல் இறங்கிப் போய்விட்டார்.

நாகலிங்கம்பிள்ளை மேலே வந்ததும், 'இவன் வாசலுக்கு நேரே கிடந்து' அவனைப் புகார் சொல்ல உன்னிய சந்திரா, விளக்கு வெளிச் சத்தில் அவன் முகம் தெரிந்ததும் சடக்கென்று, ஒன்றும் சொல்லாமல் நிறுத்தினாள். 'அம்மா இன்னும் சாப்பிடவில்லையா?' என்று கேட்க உன்னிய சாம்பசிவம் விளக்கு வெளிச்சத்தில் அவளின் முகத்தைக் கண்டதும், உடனே நிறுத்தினான். ஏககாலத்தில் இவர்கள் இருவரும் சொன்ன வாக்கியத்தின் முதற் பகுதிகள் நாகலிங்கம்பிள்ளைக்கு விளங்கவில்லை. அவருக்கு 'ஸ்பெஷல்' வருகிற எரிச்சலில் இவை ஒன்றையும் கவனியாமல் இறங்கிப் போய்விட்டார்.

சந்திராவும் சமையற்காரனும் நின்ற இடத்தைவிட்டு அசைய வில்லை. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றனர்.

தனது தந்தையின் சமையற்காரனே, தனது காதலன் சதாசிவம் என்பதையுணர்ந்ததும் சந்திரா நடுங்கிப் போனாள். தனது காதலனைக் கண்டுவிட்டேனே என்ற மகிழ்ச்சியும் பொங்கிக்கொண்டு வந்தது. இவ்வளவு காலமும் தன்னைச் சந்தியாமல் இருந்ததும், இப்பொழுது சமையற்காரனாகத் தனது வீட்டில் வந்து நிற்பதும், சந்திராவுக்கு ஆத்திரத்தையும் உண்டு பண்ணியது. இப்படிப் பல உணர்ச்சிகளும் வேலை செய்ய அவள் சித்திரப்பாவை போல் நின்றாள்.

சதாசிவமோ, இந்த மாதிரித் தன்னைக் கொண்டுவந்து சேர்த்தது ஈசன் திருவிளையாடல் என்று நினைத்தான். அவனுக்கு நகைச்சுவை உணர்ச்சிதான் முன்னுக்கு வந்தது. உடனே, பயபக்தியோடு, "சாப்பிட வருகிறீர்களா? அம்மா" என்று மிகவும் பணிவாகக் கேட்டான். சந்திரா பொலுபொலென்று அழுதாள்.

# அத்தியாயம் - 11

**'கலியாண வீட்டில் மணமகனுக்கு மணமகள் அன்னம் பரிமாறுவதைப் பூதாக்கலம் பரிமாறுதல் என்று சொல்கிறார்கள். தாலி கட்டுவதிலும், பூதாக்கலம் பரிமாறுவதையே முக்கியமான சடங்காகப் பலர் கருதுகிறார்கள்'**

- 'கலியாண வீட்டில் நடக்கும் சில முறைகள்'

சந்திரா, "நீங்கள் ஏன் இப்படி என்னைச் சோதிக்கிறீர்கள்?" என்று அழுதழுது கூறினாள். முதலில், சதாசிவம்தான் அவளுக்குச் சமையற்காரனாக நிற்கிறேன். என்பதை அறிந்ததும், அவனுக்கு அவமானம் உண்டாகவில்லை. அசல் 'ஹாஸ்ய'க்கட்டம் என்றே நினைத்தான். எசமானுக்குப் பணிவாக வேலை செய்யும் அசல் வேலைக் காரன் தொனியில், தளுக்காக, அவன் சந்திராவைச் சாப்பாட்டுக்கு அழைத்தான்.

சந்திராவுக்கும் அழைத்ததைப் பார்க்க முதலிற் சிரிப்புத்தான் வந்தது. அடுத்த கணம் அந்தச் சிரிப்புக் கோபமாக மாறியது. அதே கணத்தில் கோபம் அழுகையாகப் பிரதிபலித்தது.

சதாசிவம் தனது நகைச்சுவைக்குச் சந்தர்ப்பம் சரியில்லை என்பதை உணர்ந்தான். அவள் அழுகையைக் கண்டதும் அவன் மனம் இளகிவிட்டது. மேலும், விளையாடுவதை நிறுத்திவிட்டு, அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சமையல் அறைக்குச் சென்றான். சமையல் அறையில் தனது பூர்வவிருத்தாந்தங்கள் எல்லாவற்றையும் விபரமாகச் சந்திராவுக்குச் சொன்னான்.

சந்திரா, தான் ஆசிரியராகக் கடமையாற்ற நினைத்த நோக்கத் தையும், ஆசிரியராக இருந்துகொண்டு தேடினதையும், அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் நிகழ்ந்ததையும், தான் அனுபவித்த துன்பத்தையும், கடைசியாகச் சதாசிவத்தின் மேல் தடக்குப்பட்டு விழுந்ததையும் கூறினாள். சதாசிவத்தின் மேல் விழுந்ததைக் கூறியதும் இருவருக்கும் சிரிப்படக்க முடியவில்லை.

"ஈஸ்வரன், ஒருவரையொருவர் தேடித்திரிந்த எங்களை எங்களுக்குத் தெரியாமல் ஒருவருக்கு மேல் ஒருவரை வீழ்த்தினது.

நாங்கள் ஒருவருக்காக ஒருவர் பிறந்திருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காகத்தான்" என்று சந்திரா சொன்னாள்.

"இல்லை; நான் உனக்குச் சமையற்காரனாக இருப்பதற்குத்தான் தகுதி என்பதைப் பிரத்தியட்சமாகக் கடவுள் காட்டியிருக்கிறார்; அல்லவா?"

"கடவுள் மேல் நான் பழி போட்டிருந்தேன். என்னால் இனிமேல் உங்களைத் தேட முடியாது. கடவுளே நீதான் இனி அவரைக் காட்டித்தர வேண்டும்; என்று வேண்டினேன். அவர் உங்களை எனது வீட்டிலேயே கொண்டு வந்து விட்டிருந்தார்."

"கடவுள் சமையற்காரனாகத்தான் கொண்டுவந்து விட வேண்டுமா?"

"சமையற்காரனாக விட்டபடியாற்றானே நாங்கள் இப்படி இருந்து இப்பொழுது கதைக்க முடிகிறது. அல்லது இந்தச் சாம நேரத்தில் நாங்கள் இருவரும் இருந்து கதைக்க முடியுமா? இவ்வளவு காலமும் நாங்கள் பிரிந்திருந்து வருத்திய வருத்தத்திற்குப் பரிகாரமாக, இப்பொழுது ஒரு பயமுமின்றிச் சேர்ந்திருந்து மகிழக்கூடியதாகக் கடவுள் விட்டிருக் கிறார் அல்லவா?"

"கடவுள் நீ கேட்டதெல்லாம் தருவார் போலிருக்கிறதே!"

"ஆம்; நான் மனம் வருந்திக் கேட்டால் எதுவும் தருவார்."

"எனக்கு இந்தச் சமையல் உத்தியோகத்தை நிரந்தரமாக்குவித் துத் தர மாட்டாயா?"

"அதை விருப்பமானால் நீங்கள் கடவுளைக் கேளுங்கள். நான் எனக்கு வேண்டியதைத்தானே கேட்பேன்?"

"உனக்கு வேண்டியதென்ன?"

"அது என்னவென்று உங்களுக்குச் சொல்ல வேண்டுமா?" என்று ஒரு பொய்க் கோபமாக அவனைப் பார்த்தாள். சதாசிவத்திற்கு ஆசை தலைக்கேறிவிட்டது. அவளை முத்தமிடப்போனான். சந்திரா அவன் முத்தமிடுகின்ற சமயத்தில், தன் நினைவு வந்தவளைப் போல், உடனே அவனைத் தடுத்து 'நாங்கள் என்ன இருந்தாலும் முறைப்படி

விவாகஞ் செய்யமுன் இப்படி நடந்துகொள்ளக்கூடாது" என்று சொன்னாள்.

சதாசிவமும் உடனே விலகி, அவள் சொன்னதைச் சரியென்று ஒத்துக்கொண்டான். சதாசிவம் உடனே சமாளித்துக் கொண்டு, "சரி, இப்பொழுது சாப்பிடுங்கள்" என்று பழையபடியும் சமையற்காரன் தோரணையில் கேட்டான்.

"நான் சமைத்து உங்களுக்குத் தருவதா? நீங்கள் சமைத்து எனக்குத் தருவதா? நான் ஒருபோதும் நீங்கள் ஆக்குவதை சாப்பிட மாட்டேன்"

"அப்படி என்மீது என்ன கோபமோ?"

"உங்கள் மீது கோபமல்ல. நான் உங்களுக்குச் சமைத்துத் தருவதை விடுத்து நீங்கள் எனக்குச் சமைத்துத் தருவதானால் என் மனம் ஒப்புமா?"

"இதெல்லாம் கால வித்தியாசம்; இந்தக் காலத்தில் புருஷர்கள் தான் பெண்களுக்குச் சமைத்துப் போட வேண்டியிருக்கிறது."

"காலம் எக்கேடு கெட்டுப் போகட்டும்; நான் முறைப்படிதான் நடப்பேன்; நான் நீங்கள் சமைத்ததை உண்ண மாட்டேன்."

"இன்றைக்குப் பட்டினி கிடப்பீர்; நாளைக்குமா பட்டினி கிடக்கப் போகிறீர்?"

"நான் அப்பாவுக்கு உங்கள் சமையல் பிடிக்கவில்லை என்று சொல்லி நானே சமையல் செய்வேன்."

"நல்லாயிருக்கிறது; எனது பிழைப்பிலா கடைசியாக மண்போடப் போகிறீர்?"

"நல்ல பிழைப்பு; சத்தியமாகச் சொல்லுகிறேன்; நீங்கள் இனிச் சமைக்கக்கூடாது."

"நான் என்ன செய்கிறது?"

"நீங்கள் பேசாமல் இருங்கள்; நானே சமைத்துத் தருகிறேன்."

"என்னுடைய சமையல் கூடாதென்று சொன்னால், உமக்குப் பைத்தியம் என்று உமது அப்பா சொல்லுவார். வேண்டுமானால், இப்பொழுது ஒரு முறை சாப்பிட்டுச் சொல்லும்."

“நான் சாப்பிடமாட்டேன்”

“நான் சமைத்தபடியாற்றானே சாப்பிட முடியாது. உண்மைக் காதலரானால், நான், நீ என்ற வித்தியாசம் ஏது? நான் சமைத்தது நீர் சமைத்ததுதான். நீர் சமைத்தது நான் சமைத்ததுதான்.”

“நீங்கள் சமையற்காரன் என்ற முறையிற் சமைத்ததைச் சாப்பிட என் உள்ளம் கூசுகிறது.”

“நான் சமையற்காரன் உமது அப்பாவுக்கு; உமக்கு எப்பொழுதும் காதலன்தானே”

“அப்படியானால் நான் உங்களுக்குப் பரிமாறுகிறேன்; நீங்கள் முதலில் சாப்பிடுங்கள். நான் பின்னர் சாப்பிடுகிறேன்.”

சந்திரா, சதாசிவத்திற்குப் பரிமாறிக்கொண்டே, “இன்று முதல் நாங்கள் இருவரும் தம்பதிகளாகிவிட்டோம். இனி நாங்கள் பிரிவதில்லை. அதோ ஜன்னலுக்கூடாக வைகாசி விசாகத்துப் பூரணச் சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். அவன் சில மணித்தியாலங்களுக்கு முன்னர் என்னைப் படுத்திய துன்பமோ சொல்ல முடியாது. இப்பொழுது அதே சந்திரன் எங்களுக்கு இன்பத்தை ஊட்டுகிறான். இந்தச் சந்திரனே எங்களுக்குச் சாட்சி” என்று சொன்னாள்.

“அந்தச் சந்திரன் மாத்திரமன்று; அந்த வாகை மரமும், முற்றத்தில் நிற்கும் தாழை மரமும், இந்தச் சமையல் அறையும், பாத்திரங்களும் எல்லாம் சாட்சிதான். ஆனால், இந்தச் சடப்பொருட்களின் சாட்சியை நம்பி நாங்கள் எத்தனை நாளைக்கு வாழலாம்? விரைவில் நாங்கள் பகிரங்கமாக விவாகஞ் செய்து கொள்ளும் வழியையல்லவா தேட வேண்டும்.”

“பகிரங்கமாக விவாகஞ் செய்துகொள்ள எங்களுக்கு இனிமேல் என்ன தடை?”

“சமையற்காரனாகிய எனக்கு விவாகஞ் செய்து கொடுக்க உமது அப்பா சம்மதிப்பாரா?”

“அப்பாவுக்கு உங்கள் உண்மைச் சரிதையைச் சொல்லி விவாகஞ் செய்ய உத்தரவு கேட்டால் சம்மதிப்பார்தானே?”

"என்ன உண்மையைச் சொன்னபோதிலும், சமையற்காரனாக வைத்திருந்த என்னைத் தனது மூத்த மருமகனாக ஏற்றுக்கொள்ள அவரின் பெற்ற உள்ளம் சம்மதிக்குமா?"

"வேறு என்ன செய்கிறது?"

"நான் அவருக்குத் தெரியாமல் இவ்விடத்தை விட்டு மறைகிறேன். மறைந்து உத்தியோகம் எடுத்துக்கொண்டு விவாகஞ் செய்யலாம். இப்பொழுது நான் வைத்திருக்கும் மீசையையும் எடுத்து விட்டு உத்தியோக இலட்சணத்தோடு இருக்கும்பொழுது என்னை உமது அப்பா அடையாளங் கண்டுகொள்ள மாட்டார்"

"நீங்கள் இனிமேல் என்னை விட்டுப் பிரிகிற யோசனையை விட்டுவிடுங்கள். இவ்வளவு காலமும் நான் பட்ட பாடு போதும். இனிமேலும், அந்தப் பிழையை விடமாட்டேன். நீங்கள் என்னைப் பகிரங்கமாக விவாகஞ் செய்யா விட்டாலும் என்னை மட்டும் விட்டுப் பிரிய வேண்டாம்."

"சரி; நான் நெடுகலும் உமது சமையற்காரனாகவே இருந்து விடுகிறேன். அது எனக்குப் பெரிய மகிழ்ச்சி. எனக்குச் சம்பளமும் தர வேண்டாம்."

"உங்களுக்கு எல்லாம் பகிடியாக இருக்கிறது."

"வேறு என்ன செய்ய?"

"நீங்கள் எனது விடுமுறை காலம் முடியுமட்டும் இப்படியே இருங்கள். நான் விடுமுறை முடிந்து கொழும்புக்குப் போகும்பொழுது என்னோடு கூட வாருங்கள். கொழும்பிலே உத்தியோகத்தைத் தெண்டித்து எடுத்துக்கொண்டு, பின்னர் விவாகஞ் செய்வோம்"

"உம்மோடு கூடக் கொழும்புக்கு நான் வர உமது அப்பா அனுமதிப்பாரா?"

"நீங்கள் அப்பாவுக்குப் பேசவேண்டாம்; நிற்குமாப்போல் நின்று விட்டு, நீங்கள் அவரைக் காணாமல், நான் செல்லும் வண்டியில் ஏறி விடுங்கள். அடுத்த ஸ்ரேஷனில் இறங்கி என்னோடு வந்து விடுங்கள்."

"உமது அப்பாவைக் காணாமல் வந்து ஏறிவிடலாம். ஆனால், ரிக்கெற் அவரிடம்தானே பெறவேண்டும். அதற்கென்ன செய்யலாம்?"

"அன்றைக்கு அப்பாவுக்குத்தான் 'டியூற்றி' வருகிறதோ, வேறு யாருக்கு வருகிறதோ? அது அந்த நேரத்தில் பார்த்துக் கொள்வோம். எனது சினேகிதி ஒருத்தி என்னுடன் பிரயாணஞ் செய்வாள். அவளிடம் சொன்னால் அவள் ஒரு ரிக்கற் கூட எடுத்து வருவாள்."

"உங்களிடம் அடுத்த ஸ்ரேஷனில் இறங்கி வந்து ரிக்கெற் பெற்றுக்கொள்வதற்கிடையில் ரிக்கெற் எக்ஸாமினர் பிடித்துக் கொண்டால் என்ன செய்கிறது?"

"அடுத்த பெட்டியில் எனது மனைவி இருக்கிறாள். அவளிடம் ரிக்கெற் இருக்கிறது" என்று சொல்லுங்கள்.

"நாங்கள் இருவரும் ஒரே நாளிற் போக, உங்கள் அப்பாவும் பிறகு சந்தேகப்படுவார்களே!"

"அதற்கென்ன செய்கிறது; சந்தேகப்பட்டால் சந்தேகப்பட்டுக் கொண்டு இருக்கட்டுமே!"

"சரி; விடியப் போகிறது; இனி உமது அப்பா வந்தாலும் வருவார். போய்ப் படுக்கலாம், கோழியும் கூவுகிறது."

அவர்கள் மிகுதியான இரண்டொரு மணித்தியாலங்களையும் மேல் மாடியில் போய் நின்று பேசினார்கள். காதலும், நித்திரையும் ஒன்றுக்கொன்று பகையானது போலும். காதலர்களுக்கு நித்திரை வராது. நித்திரை கொள்பவர்களுக்குக் காதல் இராது. காதலர்கள் பிரிந்தாலும் நித்திரை கொள்ள மாட்டார்கள்; கூடினாலும் நித்திரை கொள்ள மாட்டார்கள்; 'காதல் வாழ்வு அமர வாழ்வு' என்று இதனாற் தான் போலும் சொல்லுகிறார்கள்.

சதாசிவத்தினதும் சந்திராவினதும் வாழ்க்கை இப்படிச் சில நாள் கழிந்தது. பகலில் இருவரும் சேர்ந்து சமைப்பார்கள். இரவில், மேல் மாடியில் நின்று பேசுவார்கள். அவர்கள் கூடிச் சமைப்பதை நாகலிங்கம் பிள்ளை சந்தேகிக்கவில்லை. மகளின் மீதும், சமையற்காரன் மீதும் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. மகளும் நன்றாகச் சமைச்சுப் பழகட்டும் என்று நாகலிங்கம்பிள்ளை விட்டுவிட்டார்.

ஒரு கிழமையோடு நாகலிங்கம்பிள்ளைக்கு 'நைற் டியூற்றி' முடிந்து 'டே டியூற்றி' வந்தது. நாகலிங்கம்பிள்ளைக்கு 'நைற் டியூற்றி' முடிந்ததும், சதாசிவத்திற்கும் சந்திராவுக்கும் இரவுச் சம்பாஷணையும்

முடிந்தது. அவர்களுக்கு நித்திரை கொள்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் வந்தது.

சந்திராவின் இன்ப வாழ்க்கை நீடித்து நிற்கவில்லை. நாகலிங்கம் பிள்ளைக்கு 'நைற் டியூற்றி' முடிந்த மறுநாள் இரவு சதாசிவத்தைக் காணவில்லை. விடிய எழுந்து சந்திராவும், நாகலிங்கம்பிள்ளையும் பார்த்தால் சதாசிவத்தைக் காணவில்லை. சதாசிவத்தின் சாமான்கள் எல்லாம் இருந்தன.

சந்திராவுக்கு அழுகை அடக்க முடியவில்லை. 'இவ்வளவு நாளும் நான் கண்டது கனவா? அல்லது இப்பொழுது காண்பது கனவா? எனக்குச் சித்தக் கோளாறா? ஆ, தெய்வமே!' என்று புலம்பினாள். அவளைத் தேற்றுவதற்கு, அன்று அவள் சகோதரி சாரதாவும் வந்து சேர்ந்தாள்.

# அத்தியாயம் - 12

**'மிடுக்கான போர்வீரன் ஒருவன் நடந்து சென்றாலும் செல்வானேயன்றி ஓர் கிழக் குதிரையின் மேல் ஏறிச் செல்ல விரும்ப மாட்டான்.'**

- 'பழமொழி'

சம்பத்தூரில் பென்ஸனியர் தாமோதரம்பிள்ளையின் கமம், மிகவும் பெரியது; அழகுமுடையது. அறுநூற்று நாற்பதேக்கர் விசால மானது; பெருந்தொகையான நெல்லை ஒவ்வொரு வருஷமும் விற்பார். தாமோதரம்பிள்ளை ஓவசியராக இருந்து இளைப்பாறியவர். பெருந் தொகையான பணத்தை வேலை பார்க்கும்பொழுது சம்பாதித்துக் கொண்டார், என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர் கமச் செய்கை யோடு செங்கற் சூளையும் வைத்திருந்தார். சம்பத்தூரில் புதிதாகப் பல கட்டிடங்களைக் கட்டுகின்ற அரசினருக்கும், ஏனையோருக்கும் செங்கல் கொடுத்து வந்தார். அதனாலும் தொகையான பணஞ் சம்பாதித்தார்.

அவர் புதிய 'ஸ்ருடிபேக்கர்' கார் ஒன்று வைத்திருந்தார். கிழமை யில் இரண்டு, மூன்று நாட்கள் சம்பத்தூரில் வந்து தங்குவார். கமத்திலே பெரிய பங்களா ஒன்று கட்டியிருந்தார். அங்கே அவருடைய அத்தியந்த சமையற்காரன் முத்தையன் இருந்தான். அவன் பத்து வயதிலேயே அவரோடு போய்ச் சேர்ந்தான். அவனுக்கு இப்பொழுது நாற்பது வயது.

முத்தையன் இல்லாவிட்டால் தாமோதரம்பிள்ளை அரை நிமிஷம் சம்பத்தூரில் தங்கமாட்டார். அதிகாலை நாலு மணிக்கு நாலு முட்டை அடித்துக் கோப்பி தயார் செய்து முத்தையன் தாமோதரம் பிள்ளையை எழுப்பிக் கொடுப்பான். காலை எட்டுமணிக்கு இடியப்பமும், கற்கண்டோடு முறுகக் காய்ச்சிய பாலும் கொடுப்பான். தாமோதரம் பிள்ளை கமத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு திரும்பிப் பத்து மணி போல் வந்ததும், தோடம் பழம் கரைத்துக் கொடுப்பான். அவருக்கு என்னென்ன நேரத்தில் என்னென்ன கொடுக்க வேண்டுமென்று முத்தையனுக்குத்தான் தெரியும்.

தாமோதரம்பிள்ளையைப் பார்த்தவர்கள் அறுபது வயதுக் கிழவர் என்று சொல்ல மாட்டார்கள். எல்லாப் போக பாக்கியங்களையும்

அனுபவித்து வந்த அவருக்கு நோயாளியான தனது மனைவி ஒரு குறையாக இருந்தாள். சம்பத்தூரில் வந்து நிற்கும் நாட்களையாவது சந்தோஷமாகக் கழிக்க ஆசைப்பட்டார்.

அவருக்குத் தோன்றிய அதே நேரத்தில் அவரின் அத்தியந்த சமையற்காரன் முத்தையனுக்கும் அந்த ஆசை தோன்றியது. தனது விசுவாசமுள்ள எசமானுக்குக் கீழ் சகல பாக்கியங்களையும் தான் அனுபவித்து வந்தும், தனக்கு ஒரு மனைவியில்லையே என்று, இவ்வளவு காலமும் தோன்றாத ஆசை ஒன்று அவனுக்குத் தோன்றியது.

இவ்வளவு காலமும் முத்தையனுக்கு ஒரு விவாகஞ் செய்து வைக்கவேண்டுமென்று அவன் எசமான் நினைத்ததில்லை. முத்தையன் தனது எசமான் சந்தோஷமாயிருக்கிற நேரம் பார்த்துத் தனது ஆசையை வெளியிட்டான். அவனுடைய ஆசை நியாயமானதென்று அவருக்குப் படவில்லை. அவன் ஒரு மனைவியைத் திருப்தி பண்ணி நடப்பான் என்று அவர் நினைக்கவில்லை. ஆனால், அவனுடைய வேண்டுகோளையும் அவரால் மறுக்க முடியவில்லை.

தான் ஒரு வைப்புப் பெண்ணைச் சம்பத்தூரில் வைத்திருப்பதிலும், முத்தையனுக்கு ஒரு மனைவியைத் தேடிக் கொடுத்தல் இலகுவான வழியென்று தாமோதரம்பிள்ளைக்குப் பட்டது. வயது வந்த பெண்களும், பிள்ளைகளும் உள்ள தாமோதரம்பிள்ளை தன் கணக்கில் ஒரு வைப்பாடிச்சியை வைத்திருக்க விரும்பவில்லை. முத்தையனுக்கு விவாகஞ் செய்து வைத்தால் ஒரு எறியில் இரண்டு மாங்காய் விழுந்த மாதிரி இருக்கும் என்று எண்ணினார்.

தாமோதரம்பிள்ளை தனது புதிய 'ஸ்ருடிபேக்கர்' காரில் கமத்திலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் போகும்பொழுது இந்தியத் தொழிலாளர் வசிக்கும் பகுதியில் ஓர் இளம் கன்னிகை நிற்பதைக் கண்டார். அவள் உருவம் அவரைக் கவர்ந்து விட்டது. மேலே போக அவரால் முடியவில்லை. காரைத் திருப்பச் சொன்னார். தனது கமத்தில் நின்றுகொண்டு தான் கண்ட புதிய கன்னிகை யாரெனத் தனது ஆட்களைக் கொண்டு விசாரிப்பித்தார்.

தாமோதரம்பிள்ளையைக் கவர்ந்த கன்னிகை கண்டியிலிருந்து தனது புருஷனுடன் கோபித்துக்கொண்டு வந்து நிற்கும் மீனாட்சி

என்பவள். தாமோதரம்பிள்ளை காசைக் காசு என்று பாராமல் அள்ளி இறைத்து, முத்தையனுக்கு அன்றே அவளை மணம் முடித்து வைத்தார். மீனாட்சியும், பெரிய பங்களாவும், குறைவில்லாத சீவியமும் எனக் கண்டவுடன் இசைந்து விட்டாள்.

மீனாட்சி முத்தையனை இருத்தி எழுப்புவாள். அவளின் உருண்டு திரண்ட தேகமும், அகன்று விளங்கும் கண்களும் முத்தையனை நடுநடுங்கச் செய்தன. முத்தையன் அவளுக்கு முன்னால் பம்பரமாகச் சுழன்று ஆடுவான்.

இவ்வளவு காலமும் தனக்கு ஏது கலியாணம் என்று நினைத்த அவனுக்கு அழகு வாய்ந்த மீனாட்சி கிடைத்தது, ஏதோ அந்தப் பெருமானே வந்து வீட்டில் இருக்கிறார், என்று நினைத்தான்.

ஓடிப்போய் 'எனது சீலையைத் துவைத்துக் கொண்டு வா' என்று சொன்னால், முத்தையன் வண்ணான் வெளுத்த துணி மாதிரித் துவைத்துக் கொண்டு வந்து காட்டுவான். 'பாத்திரங்களை விளக்கி வை' என்றால் பவுண் மாதிரி விளக்கி வைப்பான். 'புழுக்கமாயிருக்கிறது, சற்றே விசிறியால் விசிக்கி விடு' என்றால், அவள் கட்டிலிலே படுத்தி ருக்க அவன் அயலிலே அடக்கமாக நின்று விசிறுவான். 'தலைக்குள் ஏதோ கடிக்கிறது இந்தத் தலையைப் பார்' என்றால் பார்ப்பான்.

முழங்கால் வரை நீண்ட கூந்தலை மீனாட்சி அள்ளிக் கொண்டையாகக் கட்டிக்கொண்டு கைவீசி நடந்தால், பக்கத்திலுள்ள மரங்கள் கூட நடுநடுங்கும். அவ்வளவு திடகாத்திரமும் விறுவிறுப்பும் உள்ளவள். அவன், அவளுக்கு பணியாளனல்ல, அடிமையாகத்தானும் இருப்பதைப் பெரும் பேறாகவே கருதினான்.

தாமோதரம்பிள்ளை முத்தையனுக்கு விவாகஞ் செய்து வைத்து விட்டுப் போனவர் வெகுநாட்களாக வரவில்லை. சரியாக இரண்டு கிழமைக்குப் பிறகே வந்தார். "முத்தையா எப்படி உனது மனைவி ருசியாகச் சமைப்பாளா?" என்று கேட்டார்.

தனக்கு விவாகஞ் செய்து விட்டுப் போனவர், இன்றைக்கு முதன்முதலாகத் தனது எசமானைக் கண்டதும் முத்தையா மெய்மறந்து போனான். அவர் கேட்ட கேள்விக்கு அவன் பதில் கூறவேயில்லை. பல்லைத்தான் இளித்தான். மீனாட்சி முன்னுக்கு வந்து, "என்னிலும் பார்க்க அவர்தான் நல்லாய் ஆக்குவார்" என்று சொன்னாள்.

தாமோதரம்பிள்ளை "உனக்கு இங்கே என்ன குறை" என்று விசாரித்தார். அவளுக்கு ஒரு குறையும் இல்லாமற் பார்த்தாற்றான் அவள் நிலைத்து நிற்பாள் என்று அவருக்குத் தெரியும்.

"எனக்கு என்ன ஐயா குறை! கட்டிக்கத்தான் சேலை இல்லை."

இரண்டு புதிய பட்டுச்சேலைகளைக் காரில் இருந்து எடுப்பித்துத் தாமோதரம்பிள்ளை அவளிடம் கொடுத்தார்.

"இதேனையா எனக்கு" என்று ஒரு கண் வீச்சும் புன்சிரிப்போடும் மீனாட்சி பெற்றுக்கொண்டாள்.

மீனாட்சி சில நாட்களுக்குள் தனக்கு வேண்டிய நகை, உடுப்பு, அலங்காரச் சாமான்கள் எல்லாம் தாமோதரம்பிள்ளையைக் கொண்டு வாங்குவித்துக் கொண்டாள். அவள் உணவினாலும், அலங்காரத் தினாலும் அங்கே ஒரு குறைவுமில்லாமல் இருந்தாள். அந்தப் பெரிய பங்களாவுக்கு ஒரு ராணி மாதிரி விளங்கினாள்.

சம்பத்தூர் சண்முகம் புதிய பல கட்டிடங்களை ஒப்பந்தம் எடுத்துக் கட்டினான். தனது கட்டிடங்களுக்குத் தாமோதரம்பிள்ளை யிடமே செங்கல் வாங்கினான். செங்கற்களை ஏற்றுவது சண்முகத்தின் கூலியாளான முருகன் என்பவனே. முருகன் பல நாட்களாகச் சண்முகத்துடன் நிற்கிறான். அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அகன்ற மார்பும், திரண்ட தோளும், கெம்பீரமான தோற்றமும் உடையவன். மிகுந்த பெலசாலி. எந்தக் கஷ்டமான வேலையுஞ் செய்வான். அவனைப் போல் பெலசாலிகள் சம்பத்தூரில் எவரும் இல்லை. சண்முகம் அவனை வண்டிச் சாரதியாகவும், சில சந்தர்ப்பங் களில் மெய்ப்பாதுகாவலனாகவும் வைத்திருந்தான்.

முருகன் தாமோதரம்பிள்ளையின் கமத்திற்கு ஒரு நாளைக்கு நாலு முறை கல்லிழுக்கப் போவான். கல்லிழுக்கப் போனவன் களைப்பு மிகுதியால் தாமோதரம்பிள்ளையின் பங்களாவில் சென்று தண்ணீர் குடிக்கப் போனான். தண்ணீர் கொண்டு வந்த மீனாட்சியைக் கண்டு அசந்து போனான். பின் அவனுக்கு ஒரு நாளைக்கு நாலு முறை தண்ணீர் விடாய்க்கும். தண்ணீர் தண்ணீராய்க் குடித்தாலும் அடங்காது.

பேச்சுவாக்கில் முருகன், "உன் புருஷன் எங்கேயம்மா" என்று மீனாட்சியைக் கேட்டான்.

"எனக்குப் புருஷனா.....? இவர்தான் இருக்கிறாரே" என்று முத்தையனைச் சுட்டிக் காட்டினாள். முருகனால் நம்ப முடியவில்லை.

முருகனுக்கு மீனாட்சிப் பைத்தியம் பிடித்துவிட்டது. அவளுடைய தளுக்கான கதைகளும், உருளும் விழிகளும், தான் செங்கல் ஏற்ற வந்தவன் என்பதைக்கூட மறக்கச் செய்துவிடும். மீனாட்சிக்கும் முருகன் ஒருவன்தான், உலகில் ஒரு ஆண்பிள்ளை என்று பட்டது.

தண்ணீர் குடிப்பதற்குப் போய் வந்த முருகன், வெற்றிலை சப்பவும் தொடங்கினான். பங்களாவில் இருந்து களையாறவும் தொடங்கினான். முருகனைக் கண்டவுடன் மீனாட்சி முத்தையனை ஏதோ ஒரு சாட்டில் கடைக்குத் துரத்தி விடுவாள்.

சம்பத்தூர் ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளையின் சமையற் காரனைக் காணாத இரவு தாமோதரம்பிள்ளையின் கமத்தில் மீனாட்சியையும் காணவில்லை. தாமோதரம்பிள்ளை பொலீஸாருக்கு அறிவித்துப் பொலீஸார் வந்து புலன் விசாரித்தனர். தாமோதரம் பிள்ளை யின் கமத்தின் வேலியில் சால்வை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அந்தச் சால்வை நாகலிங்கம்பிள்ளையின் சமையற்காரனின் சால்வை என்பதை நாகலிங்கம்பிள்ளை ஒத்துக் கொண்டார். பொலீஸார், நாகலிங்கம்பிள்ளையின் சமையற்காரனும், மீனாட்சியும் கூடிக்கொண்டு ஓடிவிட்டனர் என்று முடிவுகட்டினர். நாகலிங்கம்பிள்ளையும் அரை மனத்தோடு அக்கதையை ஏற்றுக் கொண்டார்.

சந்திரா இதை எப்படி நம்ப முடியும்? சந்திரா புழுவாய்த் துடித்தாள். சந்திரா அங்கே அழுது புலம்ப, தாமோதரம்பிள்ளையின் சமையற்காரன் முத்தையன் இங்கே அழுது புலம்பினான். அவர்களைச் சந்தித்தால், முத்தையனை நாகலிங்கம்பிள்ளையோடு விட்டுத் தான் நாகலிங்கம்பிள்ளையின் சமையற்காரனையும் மீனாட்சியையும் வைத்துக் கொள்ளலாம், என்று தாமோதரம்பிள்ளை மனப்பால் குடித்தார்.

# அத்தியாயம் - 13

'சுடர்த்தொடீஇ கேளாய் கேளாய் தெருவினாமாடு
மணற்சிற்றிற் காலிற் சிதையா வடர்ச்சிபொற
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
உண்ணுநீர் கேட்டே னெனவந்தாற் தன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனோ வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்.'

- 'கலித்தொகை - 51'

சம்பத்தூர் மைதானத்தில் 'ட்ரூறிங்' பேசும் படக்காட்சி காட்டு வோர் கூடாரமடித்து இருந்தார்கள். சம்பத்தூர் வாசிகளுக்கு 'ட்ரூறிங்' படக்காட்சி வந்தாற் சொல்ல முடியாத ஆனந்தம். எப்போதாவது பட்டினம் போகிற நாட்களிற் படக்காட்சி பார்த்தாலன்றி மற்றும்படி அவர்களுக்கும் படக்காட்சி பார்க்க வசதியேது? படக்காட்சி அதிகமாகப் பிற இடங்களிற் பார்த்த உத்தியோகஸ்தர்களும், சம்பத்தூருக்கு வந்தால் அவர்களுக்கு ஒரு பொழுது போக்குமிராது. அதனால், அவர்களுக்கும் படக்காட்சி வந்தால் மகிழ்ச்சி.

'ட்ரூறிங்' படக்காட்சியினர் வருஷத்தில் இரண்டொரு மாதம் சம்பத்தூரிலும் கொண்டுவந்து காட்டுவார்கள். சம்பத்தூரில் அவர் களுக்கு வருமானம் அதிகம். சிலர் ஒவ்வொரு நாளும் இரண்டு முறையும் பார்ப்பார்கள். காய்ந்த மாடு கம்பிலே விழுந்த மாதிரி என்று சொல்வார்கள். ஒரு விதமான பொழுதுபோக்குமில்லாமல், வரண்டிருந்த அவர்கள் உள்ளத்திற்கு இந்த இரண்டொரு மாதமும் நல்ல ஊற்றாக

இருக்கும். தினமும் மாலையில் சம்பத்தூர். 'ட்ரூறிங்' படக்காட்சி மாளிகையில் திரளும்.

சந்திரா தனது காதலன் மறைந்த மர்மம் தெரியாமல் வருந்தினாள். அன்று வந்த சாரதாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தனது சகோதரி சொல்பவையெல்லாம் உண்மையா? சதாசிவம் உண்மையாகச் சமையற் காரனாகத்தான் இருந்தானா? அந்தச் சதாசிவம் மீனாட்சியுடன் ஓடுவானா? மீனாட்சியுடன் ஓடாவிட்டால் அவன் எங்கே? மீனாட்சி என்பவள் எங்கே? இருவரும் ஒரு இரவில் மறைய வேண்டி வந்தது எப்படி? சதாசிவத்தின் சால்வை அங்கே எப்படிப் போனது? இவைகள் எல்லாம் ஒன்றைவிட ஒன்று மாயமாய் இருக்கிறதே! தனது சகோதரிக் குத்தான் மூளைக் கோளாறோ? என்று பலவாறாகச் சிந்தித்தாள். சாரதா வுக்கு எல்லாம் ஒரே குழப்பமாயிருந்தது.

சாரதா தான் தனது காதலனைச் சந்திக்கப் போவதுமில்லை; தான் விவாகஞ் செய்யப் போவதுமில்லை என்று எண்ணினாள். மகாதேவன் தன்னையும் வெறுத்துக்கொண்டுதானே போனவன். போய் இவ்வளவு காலமும் தனக்கு ஒரு காகிதமும் எழுதவுமில்லை; தனது ஊருக்கு மீண்டு வரவுமில்லை. இந்த நிலைமையில் அவனை விவாகஞ் செய்யலாம் என்று காத்திருப்பது வீண்.

முதலில் சாரதா, அவர் மீண்டு தனது ஊருக்கு வரட்டும் என்ற எண்ணத்துடனேயே இந்தியாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற் சங்கீதம் படிக்கச் சென்றாள். இரண்டு வருஷமாகியும் அவன் மீண்டு வரவில்லை என்று அறிந்ததும் தனது வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள். தான் இனிமேல் வேறொருவரை விவாகஞ் செய்து வாழ்தல் என்பது முடியாத காரியம். தனது சகோதரி இன்னும் விவாகம் முடியாததால் என்னை இப்பொழுது விவாகத்திற்கு நெருக்க மாட்டார்கள். சகோதரியின் விவாகம் முடியுமுன் நான் சங்கீதப் படிப்பை முடித்துக்கொண்டு சினிமாவிற் புகுந்து விடவேண்டும். சினிமாவிற் புகுந்து நடிக்கத் தொடங்கினால் எனது காலம் கவலையின்றிக் கழியும் என்றும் சாரதா திட்டமிட்டிருந்தாள்.

சாரதா தனது திட்டத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தாள். மகாதேவனைப் படிப்படியாக மறக்க முயற்சித்தாள். அவள் மகாதேவனைப் பூரணமாக மறக்க முடியாவிட்டாலும், எந்நேரமும் அவன் எண்ணம் அவளைத் தாக்கவில்லை. அவளுக்குச் சினிமா நட்சத்திரம் ஆகவேண்டும் என்ற எண்ணந்தான் தலைதூக்கி நின்றது.

சாரதா சினிமா நட்சத்திரமாக வேண்டுமென்ற கருத்தினால், சினிமாக்களைத் தவறாது பார்த்து வந்தாள். அவள் சம்பத்தூருக்கு வந்ததும் சினிமா பார்க்க முடியாதே என்று கவலைப்பட்டாள். அவள் விருப்பம் போல, அவளும் சம்பத்தூருக்கு வரவும் 'ட்ரூறிங்' படக்காட்சியும் சம்பத்தூருக்கு வந்தது.

அன்று சம்பத்தூர் 'ட்ரூறிங்' படமாளிகையில் ஏதோ ஒரு பழைய ஆங்கிலப் படம் ஓடினது. துன்பத்தினால் வருந்தும் சந்திரா, சிறிது நேரம் நிம்மதியாக இருக்கப் படக்காட்சி உதவும் என்று நினைத்துச் சந்திராவையும் படக்காட்சி பார்க்க வருமாறு சாரதா அழைத்தாள். சந்திரா முதலில் மறுத்துவிட்டாள். சாரதா விடாமல் வற்புறுத்தவே அரைமனத்தோடு இசைந்தாள். சந்திரா சாதாரண அலங்காரத்துடனேயே சென்றாள். சினிமா நட்சத்திரம் ஆகவேண்டும் என்னும் எண்ணமுடைய சாரதாவோ நாளுக்குநாள் வெவ்வேறு விதமாக அழகு செய்வாள். கண்ணுக்கு மை பூசுவாள்; இதழுக்கு வண்ணம் பூசுவாள். இயற்கையிலேயே அழகுவாய்ந்த சாரதா அழகு செய்துகொண்டு அப்ஸர ஸ்திரியோ என்று எண்ணக் கூடியதாகத் தமக்கைக்கு முன்னே போனாள். நாகலிங்கம்பிள்ளை சினிமா முடிந்ததும் அழைத்துவரத் தான் வருகிறேன் என்று சொல்லித் தனக்கு ஏதோ கடமையிருக்கின்றதென்று நின்றுவிட்டார்.

சந்திராவும் சாரதாவும் படமாளிகைக்குப் போனார்கள். சம்பத்தூர் வீதியில் ஆடவரும் பெண்களும் நின்று கண்கொட்டாமல் அவர்களைப் பார்த்தார்கள். சம்பத்தூர் வாசிகள் அப்படி அழகும் அலங்காரமும் வாய்ந்த பெண்களை ஆயிரத்தில் ஒரு நாளைக்குத்தான் காண்பார்கள். அதிலும் சாரதா தேவலோகத்திலிருந்து வந்த ஸ்திரீபோல அன்னநடை நடந்து போக எல்லோரும் தன் நினைவற்றனர்.

படமாளிகை முன்றலில் போடப்பட்ட ஆசனங்களில் சகோதரிகள் இருவரும் போய் உட்கார்ந்தனர். அன்றைய படக்காட்சியின் சில சந்தர்ப்பங்களின் படங்கள் வெளியிலே தூக்கப்பட்டிருந்தன. அப்படங்களைச் சாரதா சென்று பார்த்தாள்.

அன்று ஆங்கிலப் படமாக இருந்தபோதிலும், ஆங்கிலம் தெரியாத சம்பத்தூர் வாசிகள் அப்படத்தையும் விட்டுவைக்கவில்லை. சம்பத்தூர் வாசிகளுக்கு ஆங்கிலப்படம், ஹிந்திப்படம், தமிழ்ப்படம் என்று வித்தியாசமில்லை. எதுவாயிருந்தாலும் படக்காட்சி என்றாலே போதும். சனங்கள் கூடிவிடுவார்கள்.

சாரதா ஒரு ஐந்து ரூபா நோட்டைக் கொடுத்து இரண்டு முதல் வகுப்புச் சீட்டுக் கேட்டாள். பிரவேசச்சீட்டு விற்பவன் நாற்புறம் அடைக்கப்பட்ட ஒரு கூட்டுக்குள் இருந்தான். ஒரு சிறிய துவாரம் 'டிக்கெற்' கொடுப்பதற்கு இருந்தது. அத்துவாரத்துக்குள் கையை நீட்டியே சாரதா டிக்கெற் கேட்டாள்.

உள்ளே டிக்கெற் விற்க நின்றவன், அவள் கையைப் பிடித்து சிறிது இழுத்து, உள்ளங்கையில் முத்தமிட்டுவிட்டான். வெளியில் யாரும் கவனித்துக்கொண்டு நின்றிருந்தால், அவர்களுக்குக்கூட அவன் முத்தமிட்ட சத்தம் கேட்டிருக்கும். சாரதாவுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. அவளுக்குப் பெலம் இருந்திருந்தால் அந்த 'டிக்கெற்' விற்கும் கூட்டைக்கூட உதைத்து விழுத்தியிருப்பாள். அவள் முகமெல் லாம் சிவந்துவிட்டது. அவன் முகத்தில் காறித்துப்பவேண்டும் போலிருந்தது. அவன் உள்ளுக்குள் நின்றுகொண்டானே! அவனைக் கூடச் சரியாகத் தெரியவில்லையே.

சாரதா வெடுக்கென்று கையை இழுத்தாள். அவளுக்குத் தெரியாமல் அவள் கை சீலையில் தன்னைத் துடைத்துப் பரிசுத்தப் படுத்திக்கொண்டது. அவளுக்கோ அந்தக் கை ஏதோ ஒரு பெரிய பாரமாக இருப்பது போலத் தோற்றியது. அந்தக் கை உளைவு வேதனை யுள்ள கைபோலத் தோன்றியது. அந்தக் கையை வெட்டிவிட வேண்டும் போலத் தோன்றியது.

டிக்கெற் விற்பவன், "இந்தாருங்கள் அம்மா டிக்கெற். டிக்கெற் வாங்காமல் போகிறீர்கள்; அல்லது பணத்தைக் கொண்டுபோங்கள்" என்று கூப்பிட்டான். சாரதா ஒன்றும் பேசவில்லை. முதலில் அவளுக்கு அவனைப் பேசவேண்டும் போல் தோன்றியது. பேசி ஊரைக் கூட்டினால் தனக்கு இன்னும் அவமானந்தான் என்று நினைத்து ஒன்றும் பேசாது திரும்பினாள்.

சாரதா திரும்பியதும் அவள் முன்னிலையில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் நின்றார். பொலீஸ் இன்ஸ்பெக்டரிடம் நடந்த சம்பவத்தை விடுவிடென்று ஆங்கிலத்தில் சொன்னாள். இப்படியான காவாலிகளை படக்காட்சி மாளிகையில் வைத்திருந்தால் அபாயம்; சரியான தண்டனை கொடுக்க வேண்டும் என்று ஆத்திரத்தோடு பேசினாள்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் தியேட்டர் மனேச்சரைக் கூப்பிட்டு விசாரிப்பதாகச் சொன்னார். தியேட்டர் மனேச்சர் தன்னுடைய நண்பர்

என்றும், அவனுக்கு உடனேயே சரியான தண்டனை கொடுத்து வேலை யினின்றும் கலைத்து விடலாம், நீங்கள் வழக்குக்குப் போதல் உகந்த தல்ல என்றும் சொன்னார். சாரதாவும் ஒத்துக்கொண்டாள்.

பொலிஸ் இன்ஸ்பெக்டரை அங்கே பென்ஸனியர் தாமோதரம் பிள்ளை கூட்டி வந்தார். முருகனும் மீனாட்சியும் படக்காட்சி பார்க்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டுத் தாமோதரம்பிள்ளை பொலிஸ் இன்ஸ்பெக்டரைக் கூட்டி வந்தார்.

மீனாட்சி, தான் முருகனுடனேயே இருக்கப் போவதாகக் கண்டிப் பாகக் கூறிவிட்டாள். நகைகள், உடைகள் எல்லாம் தன்னுடை யவையே என்று சொன்னாள். முருகனையும் மீனாட்சியையும் கைது செய்யப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டுச் சம்பத்தூர் சண்முகம் பின்னால் ஒரு காரில் வந்து இறங்கினான். "முதலில் அவர்களைப் படம் பார்க்க அனுமதியுங்கள்; அவர்கள் சம்பந்தமாகப் பேசவேண்டியதை என்னோடு பேசிக்கொள்ளுங்கள்; நானே பொறுப்பாளி" என்று சம்பத்தூர் சண்முகம் கண்டிப்பாகக் கூறினான். முருகனும் மீனாட்சியும் படமாளிகைக்குள் புகுந்தார்கள்.

சம்பத்தூர் சண்முகத்தோடு ஆங்கில உடையும், மூக்குக் கண்ணாடியும் தரித்த ஒரு வாலிபனும் இறங்கி வந்தான். சந்திரா அவனைக் கூர்ந்து பார்த்ததில் சதாசிவம் போற் காணப்பட்டான். அதற்கிடையில் அவனே சந்திராவுக்கருகில் போய்விட்டான்.

சாரதா, சண்முகத்தையும் சதாசிவத்தையும் கண்டு ஆச்சரியப் பட்டாள். சண்முகம் வந்த காருக்குள் இராஜேஸ்வரியும் அவளின் பிள்ளைகளும் இருக்கக் கண்டாள். அவளிடம் போகக் காலெடுத்தவள் பக்கத்தில் தனது காதலன் மகாதேவன் நிற்பதையும் கண்டாள்.

# அத்தியாயம் - 14

'உலகத்தில் நடக்கும் குற்றங்களை மகிழ்வோடு
பார்த்திருப்பவர்களுமுண்டு, சகிக்க முடியாமல்
குற்றவாளிகளை தாங்களே தண்டிக்க
முற்படுபவர்களுமுண்டு

- 'ஒரு மனதத்துவ சாஸ்திரி'

சந்திரா விடுமுறையில் வந்து சம்பத்தூரில் நின்ற இரண்டொரு நாட்களுக்குள், சம்பத்தூரில் சந்திராவைப் பற்றிக் குசுகுசுத்தார்கள். "ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளையின் மகள் அவர்கள் சமையற் காரனுடன் கள்ள நட்புப் பூண்டிருக்கிறாளாம்" என்று சிலரும் பலரும் குசுகுசுத்தார்கள்.

சம்பத்தூர் சண்முகத்தின் காதிலும் இக்கதை எட்டியது. சண்முகத்தால் இந்தக் கதையை நம்பவே முடியவில்லை. சந்திராவிடம் சண்முகம் மிகவும் மதிப்பு வைத்திருந்தான். அவன் அம்பிகாபுரம் இந்துக்கல்லூரியில் படிக்கும் காலத்தில், சந்திராவுடன் ஒரு கேலியாவது, பகிடியாவது இல்லாமல் மரியாதையாக நடந்தான். மற்ற எல்லா மாணவி களுக்கும் அவன் ஒரு நொட்டை சொல்லாமல் விடான். ஆனால், சந்திராவோடு கதைக்கவே இவனுக்குப் பயம்.

சந்திராவின் காதலன் சதாசிவம் என்றும் அவனுக்குத் தெரியும். அவர்களை உத்தம காதலர்கள் என்று எண்ணியிருந்தான். இப்பொழுது சதாசிவம் எங்கேயென்று அவனுக்கும் தெரியாது. அவனை விவாகஞ் செய்ய மறுத்துக்கொண்டு வருகிறாள் என்று அவன் நினைத்தான்.

இப்பொழுது இப்படிக் கேள்விப்பட்டதும், அவன் ஒரே ஆச்சரி யத்தில் மூழ்கிப் போய்விட்டான். 'அந்தச் சந்திராவா இப்படி நடக்கிறாள்' என்று ஆச்சரியப்பட்டான். 'இது என்ன உலகம்' என்றிருந்தது அவனுக்கு. சந்திராவைப் பற்றிய கதை பரவுவதற்கு மூல காரணமாயிருந்த சம்பத்தூர் ஸ்ரேசன் போட்டரைக் கூப்பிடுவித்து அவனை வெருட்டினான். "அடே! வீண்கதை பெரிய மனிதரைப் பற்றிச் சொல்லாதே; நல்லாய் அறிய முன் உன்னை யார் வம்புக்கதை கட்டச் சொன்னது?" என்று அடிக்கப் போனான். போட்டர் கும்பிட்டான். "ஐயா நீங்கள் இராத்திரிக்கு வாருங்கள் ஐயா, உங்களுக்கு அவர்கள் இருவரையும் நேரிற் காட்டித் தருகிறேன்" என்று சொன்னான்.

இரவு ஒரு மணியிருக்கும். சம்பத்தூர் புகையிரத நிலையத்தில் ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளை மெயில் வண்டியின் வரவைப் பற்றி அடுத்த ஸ்ரேசனோடு ரெலிபோன் மூலம் ஏதோ பேசிக்கொண்டு நிற்கிறார்; மாடியில் சந்திராவும் சதாசிவமும் அருகருகே நின்றுகொண்டு ஏதோ கதைத்துக் கொண்டு நிற்கிறார்கள். போட்டர், சம்பத்தூர் ஸ்ரேசன் மேல் மாடியைச் சண்முகத்திற்கு சுட்டிக் காட்டினான். சண்முகம் தனது 'டோர்ச்லைற்'றை அவர்களுடைய முகத்திற்குப் பிடித்தான். சமையற் காரனும் சந்திராவுமேயெனச் சந்தேகமின்றிக் கண்டு கொண்டான். சமையற்காரனை எங்கோ பார்த்த ஞாபகமும் அவனுக்கு இருந்தது. அவனைச் சரியாகப் பார்க்க முன்னர் அவர்கள் இருவரும் மேல் மாடியில் மறைந்து விட்டனர்.

சந்திராவின் மேல் அவனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. சமையற்காரன் மீதும் அதே ஆத்திரம் வந்தது. 'சமையலுக்கு நின்று கொண்டு அவன் துணிவைப் பார்' என்று அவன் உள்ளம் கொதித்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே படவில்லை. ஆத்திரத்தோடு போய் வீட்டில் படுத்துக்கொண்டான்.

சம்பத்தூர் சண்முகம், தனது வண்டிக்காரன் முருகனுடைய நடத்தையில் சில நாட்களாக வித்தியாசமிருப்பதைக் கூர்மையாக அவதானித்தான். அன்று முருகன் சண்முகத்தைச் சுற்றிச் சுற்றித் திரிந்தான். தன்னிடம் ஏதோ பெரியதொரு காரியத்தைக் கேட்கத் தருணம் பார்த்துத் திரிகிறான் என்பதைச் சண்முகம் உணர்ந்து கொண்டான்.

"என்னடா முருகா" என்று சண்முகம் கேட்டான். முருகன் விக்கி இழுத்துத் தனக்கும் மீனாட்சிக்கும் உள்ள காதலைப் பற்றிக் குறிப்பாகச் சொன்னான். "அவளை இங்கே கூட்டி வரப்போகிறேன் ஐயா" என்று சண்முகத்திடம் உத்தரவு கேட்டான்.

'காதல்' என்பது ஒரு பொல்லாத சாமான் என்று சண்முகத்திற்குத் தெரியும். முருகனுக்கு உத்தரவு கொடுக்க மறுத்தால் தன்னைவிட்டு ஒரு சமயம் முருகன் நீங்கிவிடுவான் என்றும் தெரியும். முருகனை விடச் சிறந்த தொழிலாளி தனக்குக் கிடைக்க மாட்டான்; முருகன் தேவையானால், அவன் மீனாட்சியைக் கூட்டி வருவதால் ஏற்படும் இன்னல்களையும் சமாளிக்கத்தான் வேண்டும்.

சண்முகத்தினுடைய மூளையில் ஒரு புதிய யோசனை பிறந்தது. 'முருகனைக் கொண்டு நாகலிங்கம்பிள்ளையின் சமையற்காரனைத் தூக்குவிக்க வேண்டும். அவனுக்கு நல்ல அடி போட்டு இந்த ஊரில் மிதிக்கப்படாதென்று கலைக்க வேண்டும்' என்று யோசித்தான்.

"நீ முதலில் சம்பத்தூர் ஸ்ரேஷனுக்கு இன்று இரவு போய், அங்கே மேல் மாடி வராந்தாவில் படுத்திருக்கும் ஸ்ரேசன் மாஸ்ரரின் சமையற்காரனை ஒரு சந்தடியுமின்றித் தூக்கி வரவேண்டும். அவனை என்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிட்டு, நீ போய் மீனாட்சியைக் கூட்டி வரலாம்" என்று சண்முகம் முருகனுக்கு உத்தரவு போட்டான்.

முருகனுக்கு மீனாட்சியைக் கூட்டிவர உத்தரவு கொடுத்ததே பெரிய மகிழ்ச்சி. சதாசிவத்தைப் போல் பத்து சதாசிவத்தையும் அவன் தூக்கி வந்துவிடுவான். முருகன் சமையற்காரனைத் தூக்கப் போன சந்தர்ப்பமும் அவனுக்கு வாய்ப்பாக இருந்தது. அவன் இரவு பதினொரு மணிக்குப் போனான். அன்று தொடக்கம் ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம் பிள்ளைக்கு 'நைற் டியூட்டி' இல்லை. நாகலிங்கம்பிள்ளையும் மகளும் அறையில் படுத்துத் தூங்கினார்கள். சமையற்காரன் வெளி வராந்தாவில் படுத்துத் தூங்கினான். ஸ்ரேசனில் ஒருவருமில்லை. போட்டர்களும் படுத்துத் தூங்கினர்.

நாகலிங்கம்பிள்ளை ஒரு கிழமையாக 'நைற் டியூட்டி' செய்து, அந்த நித்திரையை வட்டி குட்டியுடன் அன்று வெளுத்து வாங்கினார். சந்திராவும், சமையற்காரனும் ஒரு கிழமையாக விழித்த நித்திரை யெல்லாம் அன்று கொண்டனர்.

முருகன் சண்முகம் சொன்னபடி, அறிந்தவன் மாதிரி, நேரே மேல்மாடிக்கு ஏறிச் சென்றான். சமையற்காரன் நல்ல நித்திரையாய்க் கிடந்தான். முருகன் அவனுடைய வாய்க்குள் சீலையை நிறைய அடைத்துவிட்டுத் தூக்கிக்கொண்டு இறங்கினான். முதலில் சமையற் காரன் உதறினான். முருகன் குத்தி விடுவேன் என்று சைகை காட்டினான்.

சதாசிவம் இவன் தன்னை என்ன செய்யப் போகிறான், என்று வாழாது இருந்துவிட்டான். முருகன் அவனைத் தூக்கிக் கொண்டு போய்ச் சண்முகத்திடம் ஒப்படைத்துவிட்டு, மீனாட்சியைக் கூட்டிவர அவளிடம் போய்விட்டான்.

மீனாட்சி அங்கே அவன் வருகைக்காகக் காத்து நின்றாள். முத்தையன் நல்ல நித்திரை. இருவரும் புறப்பட்டனர். முதலில் முள்ளுக் கம்பி வேலியால் முருகன் அவளைத் தூக்கி விட்டான். தூக்கிவிடும் பொழுது எங்கோ ஒரு நாய் குரைத்தது. ஒரு நாய் குரைக்க அடுத்த வீட்டு நாய்களும் குரைத்தன. எல்லா நாய்களும் குரைத்தன. முருகன் அவசரமாகக் கம்பி வேலியைக் கடந்து அவளையும் கூட்டிக் கொண்டு விரைவாகப் போனான். அவன் அவசரத்தில் சால்வை முள்ளுக் கம்பியில் தொங்கினதைக் காணவில்லை.

ஆனால், அந்தச் சால்வை அவனுடையதன்று. முருகன் நாகலிங்கம்பிள்ளையின் சமையற்காரனைத் தூக்கிக்கொண்டு வந்து, சண்முகத்தின் வீட்டில் விடும்பொழுது அவனுடைய சால்வையை மாறி முருகன் தோளில் போட்டுக்கொண்டு வந்துவிட்டான். அந்தச் சால்வை முள்ளுக்கம்பியில் தொங்க, மறுநாள் பொலிஸாருக்கு அது ஒரு பெரிய தடயமாக அகப்பட்டது. 'மீனாட்சியும், சதாசிவமும் கூடிக்கொண்டு போய்விட்டார்கள்' என்று இலகுவாக முடிவுகட்டிவிட்டார்கள்.

சண்முகம் முருகன் சமையற்காரனைத் தூக்கி வந்ததும், விளக்கைப் பிடித்து அவனைப் பார்த்தான். பார்த்ததும் மலைத்துப் போனான். 'ஒருவேளை அந்தச் சமையற்காரன் சதாசிவமாய் இருக்குமோ' என்று சண்முகம் யோசித்ததுண்டு. பின் அப்படி ஒருபோதும் இராதென்று அவனே தீர்மானித்துக் கொண்டான்.

"அம்பிகாபுரம் இந்துக் கல்லூரியில் முதலாம் பிள்ளையாகப் படித்த நீயா சமையற்காரனாய் இருக்கிறாய்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான். "ஐயோ! இவ்வளவு காலமும் நீ என் கண்ணில் பட வில்லையே!" என்று அங்கலாய்த்தான். "உன்னை இராசா மாதிரி வைத்திருப்பேனே; நீ என்னை ஏன் சந்திக்கவில்லை. என்னை ஏன் விசாரிக்கவில்லை?" என்று குறைப்பட்டுக்கொண்டான்.

சதாசிவம், சண்முகம் இருக்கும் ஐசுவரியத்தையும், செல்வச் செழிப்பையுங் கண்டு பிரமித்துப் போனான். மாடு, கன்று, ஆடு, கோழி எல்லாம் அவன் வீட்டில் கொழுத்துத் திரிந்தன. ஏவினதைச் செய்ய பூதகணங்கள் போன்று சண்முகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தைரியசாலிகளான வேலையாட்கள் இருந்தனர்.

தினவு வைத்துக் கொம்புக்கு மண் எடுக்கும் எருதுகள், வழிகடோறும் பால் சொரியும் பசுக்கள், கும்மியடிக்கும் ஆடுகள்,

கடாரம் போன்ற கோழிகள், கற்பகதருவை நிகர்த்தும் பழந்தரு விருட்சங்கள் எல்லாம் அவனுடைய இல்லத்தில் செல்வத்தை அள்ளிச் சொரிந்தன.

சதாசிவம் தானும் அவனும் படிக்கும் காலத்தில் இருந்த நிலை மையையும், இப்போது சண்முகத்தின் நிலைமையையும், தனது சோம்பல் வாழ்க்கையையும் யோசித்தான். 'சோம்பேறிக்கு பரமண்டலத்திலும் இடமில்லை' என்ற வாக்கியத்தை உணர்ந்தான். தான் படித்துப் பாஸ் செய்து உத்தியோகம் பெறக்கூடிய நிலைமையிருந்தும், என்ன பயன்? அவன் ஒன்றும் படித்துப் பாஸ் பண்ணாமல் இருந்தும் அவன் இருக்கும் நிலை என்ன? ஊக்கம் உள்ளவர்களைத் தனவந்தர் ஆக்குவதற்குச் சம்பத்தூரைப் போல எத்தனையோ காடுகள் காத்துக் கிடக்கின்றன.

சம்பத்தூர் சண்முகம் சதாசிவத்தை அழைத்துத் தனது செல்வம் எல்லாவற்றையும் காண்பித்தான். தன்னுடைய பாங்க் புத்தகம், உண்டியல் எல்லாவற்றையும் காட்டினான். இராணி மாதிரி வாட்டசாட்டமாக வளர்ந்து, 'முந்தின இராஜேஸ்வரிதானோ!' என்று சந்தேகிக்கும்படியாக அவன் மனைவி இருந்தாள். வைர நகைகளாக அவள் மேனி எங்குந் தொங்கின. அவளைக் கூப்பிட்டு "சதாசிவத்தைத் தெரியுமா?" என்று கேட்டான். இவைகள் எல்லாவற்றையும்விட அவர்கள் அரும்பெரும் செல்வங்களாகிய தங்க விக்கிரகங்களான இரு புத்திரர்களையும் அழைத்து அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான். அவனுடைய பிள்ளைகள் இருவரும் சில நிமிஷங்களுக்குள் அவனைச் சிநேகிதம் செய்துகொண்டனர். அவர்கள் தங்கள் புதிய மாமாவுடன் தோட்ட மெல்லாம் துள்ளித் திரிந்தனர். சதாசிவம் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரிய னல்லவா!

# அத்தியாயம் - 15

'திருமணத்துக்குப்பின் கணவனும் மனைவியும் உல்லாசப்பயணஞ் செய்து சில நாட்கள் தனித்து வாழ்தலை 'ஹனிமூன்' என்று மேல்நாட்டவர்கள் வழங்குகின்றனர். இது யாதோ சிறந்த ஒழுக்கம் எனக் கருதிக் கீழ்நாட்டவர்களிற் பலரும் அதனைப் பின்பற்றி வருகின்றனர். முற்காலத்தில் ஆடவன் ஒருவன் ஒரு தாய் வட்டத்திலிருந்து ஒரு பெண்ணைத் திருடிக் கொண்டு, அத்தாய் வட்டத்திலுள்ளவர்களின் சினம் தணியும்வரையில் மறைவில் வாழ்வதாகிய இவ் வழக்கமே 'ஹனிமூன்' எனப்படுகின்றது

- 'பெண்கள் உலகம்'

**யா**ப்பாணத்தவர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போகும் பொழுது, யானையிறவுப் பாலத்தில் போனதும் அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாகும், என்று சொல்லிக் கொள்கிறார்கள். தங்கள் வீட்டு வாயிலுக்கே வந்துவிட்ட மாதிரியான உணர்ச்சி ஏற்படும். அவர்கள் பல காலமாகக் காணாத, தங்களை வளர்த்து ஆளாக்கிவிட்ட பனைமரச் சோலையை யானையிறவுப் பாலத்தில் போனதும் காண்பார் கள். வண்டியில் தூங்கி வழிந்து கொண்டிருப்பவர்களையும், பாலத்தில் வண்டி ஓடும்பொழுது கேட்கும் கடகடாச் சத்தம், அவர்களைத் தட்டி எழுப்பி, 'அதோ பனைமரங்கள் தெரிகின்றன' என்று காட்டும். அவர்கள் உணர்ச்சிகளும் குணங்களும்கூட யானையிறவுப் பாலத்தில் வந்ததும் வித்தியாசப்பட்டுவிடும் என்று சிலர் கூறுகின்றார்கள்.

இந்தப் பிரசித்தி பெற்ற யானையிறவுப் பாலத்தில் நின்று பார்க்கும்பொழுது, வடகிழக்கே, கடலோரத்தில் ஒரு கட்டிடம் தெரியும். அந்தக் கட்டிடம் யானையிறவுக் கடலுக்கே ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டு கெம்பீரமாக நிற்கிறது. அதுதான் யானையிறவு வாடிவீடு. முற்றிலும பொருத்தமான இடத்தில் யானையிறவு வாடிவீடு கட்டப்பட்டிருந்தது. யானையிறவுப் பாலம் எப்படிச் சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததோ, அப்படியே, யானையிறவு வாடிவீடும் சரித்திரம் வாய்ந்தது.

யானையிறவு வாடி வீட்டின் மேல் மாடியில் நின்று பார்த்தால் இரண்டு சந்திரர்களைக் காணலாம். ஒரு சந்திரனே, உலகத்தின்

காதலர்களுக்கு ஒப்பற்ற இன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் பொழுது இரண்டு சந்திரர்களானால் சொல்லவா வேண்டும்! எது நிஜச் சந்திரன், எது போலிச் சந்திரன் என்று சொல்ல முடியாதபடி இரண்டு சந்திரர்களும் ஜகஜோதியாய் விளங்குவார்கள்.

மேலே சந்திரன் தண்கதிர் பொழியக் கடலில் பிரதி விம்பிக்கும் சந்திரனும் போட்டியாக இன்கதிர் பொழிவான். மேலே பிரகாசிக்கும் உடுக்கூட்டங்கள் எல்லாம் அப்படியே கடலினுள்ளேயும் தெரியும். தூரத்தில் தெரியும் யானையிறவுப் பாலங்கூட, கடலினுள்ளேயும் ஒன்று தெரியும். நின்று பார்ப்பவர்களுக்குத் தாங்கள் நேராக நிற்கிறோமோ? தலை கீழாக நிற்கிறோமோ? என்று சந்தேகந் தோன்றும்.

அன்றிரவு பதினோரு மணியிருக்கும். சந்திரன் கடலின் மத்திக்கு வந்து கொண்டிருந்தான். மகாதேவனும், சாரதாவும் யானையிறவு வாடி வீட்டின் மேல்மாடியில் நின்றார்கள். கடலினுள் தெரியும் சந்திரனை, மெல்லிய தென்றற் காற்று உருட்டி உருட்டி அவர்களுக்கு அண்மையிற் கொண்டுவருவது போலிருந்தது. சந்திரனுக்கும் நட்சத்திரங்களுக்கும் மேலாக வானத்தில் பறப்பது போன்று, அவர்களுக்கு இருந்தது. எத்தனையோ காலமாகப் பிரிந்திருந்த மகாதேவனினதும், சாரதாவினதும் காதல் வேட்கையை, அந்தச் சந்திரர்களும், நட்சத்திரங்களும், கடலும், தென்றலும் எல்லாம் அதிகரிக்கச் செய்தன.

மகாதேவனிடம் எத்தனையோ கேள்விகள் கேட்க வேண்டும் போல் சாரதாவுக்கு இருந்தது. சாரதாவுக்கு மகாதேவன் மேலுள்ள ஆத்திரம் சரியாகத் தீரவில்லை. இத்தனை காலமும், ஏனோ தானோ என்று எனக்கு மறைந்து தானே சீவித்தார். இவ்வளவுக்கும் நான் இவருக்குச் செய்த குற்றங்களென்ன? என்று எத்தனையோ கேள்விகள் புட்டுக்கொண்டு எழுந்தன. அவள் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு மிகவும் அமைதியாக, 'நீங்கள் இவ்வளவு காலமும் உங்களைப் பற்றிய தகவல் ஒன்றும் எனக்கு அறிவியாதிருந்த காரணம் என்ன?" என்று உணர்ச்சிவசப்படாதவள் போன்று மெதுவாகக் கேட்டாள்.

மகாதேவன் ஒன்றும் பேசவில்லை.

"சண்முகத்தை எவ்வளவு பாடுபட்டு, உங்களைத் தேடி வருமாறு அனுப்பினேன். அப்பொழுதாவது வந்தீர்களா? பிறகு போன இடமாவது எனக்கு அறிவித்தீர்களா? என்ன கல் நெஞ்சு" என்று மீண்டும் வினாவினாள்.

"உன்னாற்றான் சண்முகமும் இராஜேஸ்வரியும் விவாகஞ் செய்ய வேண்டி வந்ததாம்"

"ஆம்; அதுவும் ஒரு பழி என்னில் சூழப் பார்த்தது. ஏதோ நல்லகாலம், சண்முகம் அவளை விவாகஞ் செய்து கொண்டு நல்லாய் இருக்கிறான். எங்களோடு படித்தவர்களில் அவர்கள்தான் எல்லோரிலும் சிறப்பாக இருக்கிறார்கள். அவர்கள் படிக்கிற காலத்தில் எவ்வளவு மக்குகள்."

"இதிலிருந்து தெரியவில்லையா? படித்துப் பாஸ் பண்ணுவதில் ஒன்றுமில்லை என்று."

"நீங்கள் எல்லா முயற்சியையும் விட்டு, ரூறிங் ரோக்கீஸ் மனேச்சராக எப்படி வந்தீர்கள்?"

"ஏன் அது கூடாதா?"

"கூடாது அன்று; அதைவிடச் சிறந்த தொழிலே இல்லையென்று எனக்குப் படுகிறது. ஒவ்வொரு படத்தையும் நூறு முறை பார்த்தாலும், பின்னும் பார்க்க வேண்டும் என்று நினைக்கிற நானா அத்தொழிலைக் கூடாதென்று சொல்லுவேன்?

"எப்படி எடுத்தீர்கள்?"

"உனக்குத் தெரியுந்தானே, நான் இயற்கையிலே சினிமாப்பித்தன் என்று; அத்தோடு, எனது மனக்கவலையை நீக்குவதற்கும் சினிமாதான் விசேஷம். இலங்கையின் பல பாகங்களையும் பார்க்கலாம். ஒவ்வொரு ஊரிலுமாகத் திரிந்து வருவதனாலும், கவலையைச் சிறிது மறந்து வாழலாம்."

"என்ன மனக்கவலை உங்களுக்கு?"

மகாதேவன் மௌனம் சாதித்தான். சாரதா, "சொல்ல மாட்டீர் களா?" என்று நெருங்கி கெஞ்சிக் கேட்டாள். மகாதேவன் "ஆஅ.... ஊஉ...." என்று இழுத்தான். சாரதா கோபித்துக் கொண்டுபோய் தூரத்தில் நின்றுகொண்டு, கடலை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்; நின்றாள்; நின்றாள்; ஐந்து நிமிஷங்களாக நின்றாள். ஐந்து யுகங்களாக நின்றாள்.

மகாதேவன் எழுந்து வந்து, "அசடே என்ன கவலை என்று உனக்கு உணர முடியவில்லையா? சொல்கிறேன் கேள்."

சாரதா, மேலும் முகத்தை மறுபக்கமாய் விறைத்துப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

மகாதேவன், நான் எஸ்.எஸ்.ஸி. இரண்டு முறை சித்தியடையத் தவறியதும், நீ என்மேல் விருப்பமில்லாதவள் போல என்னை வெறுக்கத் தொடங்கினாய். நான் உன்னைத் தேடி வரவும், என்னை அலட்சியம் செய்தாய். எனக்கு உன் அலட்சியத் தன்மை பொறுக்க முடியவில்லை. இரவும் பகலும் வேதனைப்பட்டேன். உன்னிலும் பார்க்க எனது தாய் தந்தையர் என்னை வெறுத்தனர். நான் மறுமுறையும் தவறி விட்டாலோ என்று யோசிக்கும்பொழுது எனக்குப் பெருந்திகிலாய் இருந்தது. நான் மறுமுறையும் தவறினால் ஊரைவிட்டுக் கிளம்பி விடுவதே சிறந்தது என்று திட்டமிட்டிருந்தேன்.

நான் அனுராதபுரத்தில் விளக்கமறியலில் இருக்கும்பொழுது சண்முகம் வராவிட்டால் நான் நிச்சயம் சிறைக்குப் போயிருப்பேன். சண்முகத்தின் நன்றியை என்றும் மறக்க முடியாது. சண்முகம் உனது பிரிவுத்துன்பத்தைப் புராணமாகப் பாடினான். அவன் சொன்னதன் மேல் எனக்கு உன்மேல் இருந்த கோபம் நீங்கிற்று. அதற்கு முன்பும் எனக்கு உன்னை மறந்து இருக்க முடியவில்லை. நான் என்ன தொழில் செய்த பொழுதிலும் உன் உருவம் என் சிந்தனையுள் இருக்கும். சண்முகத் துடன் கூடி வந்திருப்பேன். ஆனால், எனக்கு ஒரு தொழிலுமின்றித் திரும்பி வரமனமில்லை. திரும்பி வந்தால் பின்னரும் படிக்க வேண்டித் தான் வந்திருக்கும். படிக்கவென்றால் எனக்கு வேப்பங்காயாய் இருந்தது. ஆகையால்தான் கொழும்புக்குச் சென்று, சில நாள் அங்கேயிருந்து, பின்னர் 'ட்டூறிங் ரோக்கீஸ்' மனேச்சராகத் திரிகிறேன்.

சினிமா உலகம் உன் மேலுள்ள எண்ணத்தை எனக்கு மறக்கச் செய்வதற்குப் பதிலாக, உன் சிந்தனையை வளரச்செய்தது. சண்முகத் துடன் நான் திரும்பி வராததைக் கண்டு, நீ வருந்துவாய் என்பதை நினைத்து, மிகவும் வருந்தினேன். பிரிவுத் துன்பத்தை இந்தச் சினிமா உலகம் இன்னும் மிகைப்படுத்திற்று என்றுதான் சொல்லவேண்டும்.

சம்பத்தூருக்கு வந்ததும், எங்களுக்கு நோட்டீஸ் பரவச் செய்வ தற்குப் பொருந்திக்கொண்ட வண்டிக்காரனிடம் சம்பத்தூர் சம்பவங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டேன். பின்னர் சண்முகத்திடம் சென்று எல்லாச் சம்பவங்களையும் அறிந்து கொண்டேன்.

நீ, 'ட்டூறிங்' தியேட்டருக்கு வரும்பொழுது, நான் கண்டேன். ரிக்கெற் விற்பவனை வேறு காரியமாக அனுப்பிவிட்டு, நானே ரிக்கெற் விற்கும் அறைக்குள் நின்றேன். எனக்கு உள்ளூர மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. உன் கையைப் பிடித்து முத்தமிட்டதற்காக நீ என்னைப் பொலீஸில் மாட்டிவிடப் பார்த்தாய். இப்பொழுதும் என்னைப் பொலீஸில் மாட்டி விடுவாயோ? என்னவோ?" என்று அவள் கையைப் பிடித்தான்.

"நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல் எனக்குத் தெரியாத இடத்தில் நின்றுகொண்டு, கையைப் பிடிக்கிறதா? உங்களை என்று எனக்கு எப்படித் தெரியும்? நான் பயந்து போனேன்."

"என்னையன்றி வேறு யார் உனது கையைத் தொடுவார்கள். பிறர் துணிந்து தொடுவார்களா?"

"எத்தனை காவாலிகள் இருப்பார்கள். நான் நடுநடுங்கிப் போனேன். என்ன இருந்தாலும் நீங்கள் அப்படிச் செய்திருக்கக்கூடாது."

"அதற்காக என்ன தண்டனை இப்பொழுது கொடுக்கப் போகிறாய்?"

"நீங்கள் என்னை விட்டு ஒருபோதும் பிரிய மாட்டேன் என்று உறுதி கூறுங்கள்."

"ஸ்ரேசன் மாஸ்ரர் நாகலிங்கம்பிள்ளை, தனது மகள் இப்பொழுது தனது சினேகிதி இராஜேஸ்வரியுடன் இருப்பாள், என்று எண்ணிக் கொண்டிருப்பார். ஆனால், அவர் இப்படி எப்பொழுதும் இருக்க அனுமதிக்கமாட்டாரே!"

"நான் நாளைக்கே எனது அப்பாவுக்கு எனது விருப்பத்தைச் சொல்லப் போகிறேன்."

"உனது விருப்பம் என்ன?"

"நெடுகலும் உங்களுக்குப் பகிடிதான்" என்று அவன்மேற் சாய்ந்தாள்.

# அத்தியாயம் - 16

'இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு கேலிக்கூத்து. அரைகுறை படித்துவிட்டு உத்தியோ கம் தேடும் வாலிபர்களாலும், சினிமா முதலிய களியாட்டங்கள் ஆதியாம் நகர வாழ்க்கையை விரும்பும், சேம்பேறிக் கூலியாட்களாலும் இந்த வேலை யில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக் கிளம்புகின்றது.

இலங்கையின் நாட்டுப் பகுதிகளிலும், காட்டுப் பகுதி களிலும் தொழிலாளர் இல்லாத் திண்டாட்டம் மிக அதிகமாக நிலவுகின்றது. ஊக்கமுள்ள மனிதனை எத்தனையோ பாண்குளங்களும் அவற்றைச் சூழ்ந்த காடுகளும் தேடித் தவங் கிடக்கின்றன. வேலையில் லையே என்று சொல்வோர் அரசினரின் குடியேற்றத் திட்டத்தின் பிரகாரம் சென்று குடியேற விரும்புகிறார் களில்லைப் போலும்.

இலங்கையில் இப்பொழுதுள்ள சனத்தைப் போல இன்னொரு பங்கு சனத்திற்கும் வருவாய் கொடுக்கக் கூடிய காடுகள் இன்று வறிதே கிடக்கின்றன. ஊக்கம் உள்ள சனங்களால் சம்பத்தூரைப்போல் எத்தனையோ ஊர் முளைக்கலாம். இலங்கையானது நெல் ஏற்றும் தேசமெனவும் பெயர் பெறலாம்.'

- அடியேன் அபிப்பிராயம்

கோட்டை, கொத்தளம் நிறைந்த பெரிய பட்டினங்கள் எல்லாம், ஒரு காலத்தில் மனித வாசனையைப் பல்லாயிரக்கணக்கான வருட காலமாக அறியாத நாடுகள் பெரிய பட்டினங்களாக விளங்கலாம். இவையெல்லாம் காலதேவனின் சாலவித்தை.

'நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்' என்று பழைய கதாசிரியர்கள், கதாநாயகனினதோ, கதாநாயகியினதோ வளர்ச்சியைக் குறிப்பிடுவது போல; சம்பத்தூரும் உல்லாசப் பிரயாணிகள் பார்ப்பதற் கேற்ற ஒரு அலங்கார நகரமாக மாறலாயிற்று.

இந்துக் கோயில்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும், விகாரை களும், பள்ளிவாசல்களும் அங்கே தோன்றின. தமிழ், சிங்கள, ஆங்கிலப்

பாடசாலைகள் பல தோன்றின. எல்லாச் சமூகத்தாரும் உழைப்பையே நோக்கமாகக் கருதி ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

சம்பத்தூர் பட்டினசங்க அந்தஸ்த்தைப் பெற்றது. பட்டினசங்க வட்டாரத்தில் ஒரு அங்கத்தவனாக சம்பத்தூர் சண்முகம் போட்டி யின்றித் தெரிவுசெய்யப்பட்டான்.

சில தலைமைப் பதவிகள் சிலரிடம் காதல் கொண்டு துரத்தும்; அவர்கள் 'வேண்டாம், வேண்டாம்' என்று ஓடுவார்கள்; சிலர் தலைமைப் பதவிகளைத் துரத்துவார்கள். அவைகள் 'மாட்டேன், மாட்டேன்' என்று ஓடும். எட்டிப் பிடித்துக் கட்டிக்கொண்டார்களாகில் இழுபறி நாடகம். இவையெல்லாம் ஆபாசக் காட்சிகள். திருந்தி வரும் சமூகத்தைப் பின்னுக்கு இழுத்துச் செல்லும். இப்படி எத்தனையோ பட்டின சங்கங் களும், நகர சங்கங்களும், பாராளுமன்றங்களும் இன்று உலகில் உண்டு.

*பழக்கப்பட்ட வண்டிமாடு போன்று, நுகத்தைக் கண்டதும் கழுத்தைத் தானே கொடுத்து இழுத்துச் செல்லும் பண்பட்ட தலை வனைப் போல், சம்பத்தூர் சண்முகம், சம்பத்தூர் பட்டின சங்க 'சேர்மன்' பதவியை ஏற்று நடத்தினான். சம்பத்தூர் . சண்முகத்தை கௌரவிப் பதற்காக அவ்வூரவர்கள் அவனுக்கு ஒரு விருந்துபசாரம் நடத்தினார் கள். அதில் பலரும் சம்பத்தூர் சண்முகத்தைப் புகழ்ந்து பேசினார்கள்.

"குற்றங்களைக் கண்டு பொறுக்க மாட்டாதவன், நேர்மையானவன், ஊக்கமுள்ளவன்" என்று சதாசிவம் பேசினான். "உலக விஷயங்களிற் கெட்டிக்காரன், காரியக்காரன், திட்டம்போட்டு வேலை செய்பவன்" என்று மகாதேவன் பேசினான். "சண்முகத்தின் வீடும், வளவும், அவற்றின் பாலைவனமும், இல்லற வாழ்க்கையும் ஒவ்வொருவரும் முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டியவை" என்று சந்திரா பேசினாள். "இராஜேஸ்வரியின் கெட்டித்தனமும், அன்பும், அதிட்டமுமே இவைகள் எல்லாவற்றிற்கும் அத்திபாரம்" என்று சாரதா பேசினாள். இன்னும் பல அன்பர்கள் அவனைப் புகழ்ந்து பேசினர். "உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பே என்னில் தானாகப் பிரதிபலிக்கிறதேயன்றி, நான் என்று ஒன்றுமில்லை" என்று சம்பத்தூர் சண்முகம் சுருக்கமாகப் பதிலளித்தான்.

அவன்மீது பொறாமை கொண்டவர்களும் சிலர் இல்லாமல் இல்லை. 'காவாலி, கடைப்புளி, சண்டியன்' என்று மதிக்கப்பட்ட சண்முகம் இந்த நிலைக்கு வந்துவிட்டானே என்று சிலர் பொருமினர்.

சம்பத்தூர் சண்முகத்தின் அந்தஸ்து இவ்வளவு தூரம் உயர்ந்ததைக் கண்டு, சிலர் பொறாமையும், சிலர் வியப்பும் அடைந்தனர்.

பொறாமைப்படுபவர்களை மேலும் பொறாமைப்பட வைப்பது இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்று. 'அவர்களின் பொறாமை மனோநிலை எவ்வளவு தூரம் ஏறுகிறது?' என்று பார்ப்பது அவருக்கு விளையாட்டு.

சம்பத்தூர் சண்முகத்திற்குச் சென்ற மன்னர்பிரான் பிறந்த தினக் கொண்டாட்டத்தின்போது, மன்னர்பிரானால், **முதலியார்ப்** பட்டம் வழங்கப்பட்டது. 'சம்பத்தூர் முதலியார் சண்முகம்' என்று அவனுடைய பெயர் வழங்கிற்று. அவனை இன்னும் என்னென்ன தேடிவரக் கிடக்கிறதோ யார் அறிவார்?

சம்பத்தூர் இப்பொழுது அரசினரால் மாதிரிப் பட்டினத்துக்குள் சேர்க்கப்பட்டது. பல தெருக்களும், கட்டடங்களும் அரசினரால் அழகுற அமைக்கப்பட்டன. இதுவோ, அதுவோ என்று சந்தேகிக்கும்படியாக, ஒன்றைப் போல் ஒன்று கட்டடங்களும் தெருக்களும் விளங்கின.

இராஜவீதி, கல்லூரி வீதி, பூஞ்சோலை வீதி என்பன முக்கியமான வீதிகள். இராஜவீதியின் இருமருங்கும் அரசாங்கக் காரியாலயங்கள் அமைந்திருந்தன. கல்லூரி வீதியில் கல்லூரிகளும், காட்சிச்சாலைகளும் இருந்தன. பூஞ்சோலை வீதியில் பூஞ்சோலையும், நடனசாலைகளும் இருந்தன.

ஒரு அழிந்த நகரின் பாழடைந்த கட்டடத்தின் சிதைவுகளை நுணுக்கமாகப் படித்தால், அவை அந்நகரின் பண்டைய நாகரிகத்தைச் சொல்லும். ஒரு புதிய நகரத்தின் பளபளப்பான புதிய கட்டடங்களின் ஒவ்வொரு பகுதியையும் நுணுக்கமாக அவதானித்தால் அந்நகர வாசிகளின் மனப்பான்மையை விளக்கமாக எடுத்துக்காட்டும். அவர்களின் பொருளாதாரத்தையும், கலைப்பண்பையும், உணர்ச்சித் துடிப்பையும் நன்கு எடுத்துக்காட்டும்.

சம்பத்தூர் முழுவதிலுமுள்ள எல்லாக் கட்டடங்களுள்ளும் மூன்று கட்டடங்கள் மிகவும் அழகாகக் கட்டப்பட்டு மிளிர்ந்தன. அவற்றின் எடுப்பான தோற்றம் கெச்சிதமாய் அமைந்திருந்தன.

இராஜவீதியில் கட்டப்பட்டது ஒன்று. அதன் வாயிலில் **இராஜஸ்தான்** என்று அவ்வீட்டின் பெயர் அழகாகத் தீட்டப்பட்டிருந்தது.

மேல்மாடியும், அவற்றின் மேலுள்ள மொட்டை மாடமும், அவற்றின் விளிம்புகளிலுள்ள செடி வேலைப்பாடுகளும் கைதேர்ந்த சிற்பியால் ஆக்கப்பட்டன என்று தெரிந்தன.

வீட்டிற்கு முன்பு விசாலமான பூந்தோட்டமும், பூந்தோட்டத்தைக் கிழித்துக்கொண்டு லாவகமான நெளிவுடன் வீட்டு முகப்புக்குள் சென்று மீளும் செம்மையான வீதியும், வீதியின் இரு கரைகளிலும் புன்சிரிப்போடு வரவேற்கும் பூச்செடிகளும் அவ்வீட்டை மேலும் அழகு செய்தன.

வீட்டு முகப்புக்குள் ஹட்சன் புதிய 'மொடல்' கார் ஒன்று நகரும் மாளிகை போன்று நின்றது. அதனுள் ரேடியோ இனிய சங்கீதத் தைப் பரப்பிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்துக்குள் அந்தக் காரில் 'மிஸிஸ் செயமன்' புறப்பட்டுச் செல்கிறாள். அந்த வீடு சம்பத்தூர்ப் பட்டினசங்க செயமனுடைய (தலைவருடைய) வீடு.

அடுத்த கட்டடம் பூஞ்சோலை வீதியில் உள்ளது. வண்ண வேலைப்பாட்டுடன் கூடிய சாரதா தியேட்டர். சினிமா பார்க்காவிட்டாலும், அந்தக் கட்டடத்தைப் பார்க்கவாவது அங்கே எல்லோரை யும் போகச் சொல்லும் தன்மை வாய்ந்தது. அது ஒரு கட்டடமல்ல; 'ஏதோ பழைய காவியங்களில் வருணிக்கப்பட்ட பர்ணசாலை' என்று சொல்லக் கூடியதாக இயற்கைக் காட்சிகள் அங்கே சித்திரிக்கப்பட்டிருந்தன. மலைகளும், காடுகளும், மிருகங்களும், பட்சிகளும், சரித்திரப் படங்களும், மின்சாரத் தீபங்களிடையே தோன்றி, மனிதன் தன் உண்மைச்சூழலை முற்றாய் மறக்கச்செய்தன. சுவர்க்க உலகத்துள் கால் வைத்தவன் மாதிரி மனிதன் உள்ளே சென்றதும் கூசுவான்.

சாரதா தியேட்டரின் மனேஜர் மிஸ்டர் மகாதேவனும், மிஸிஸ் மகாதேவனும் ஒரு புதிய ஹில்மன் காரில் சரியாக ஆறு மணிக்குத் தியேட்டருள் நுழைகின்றனர். காரிலிருந்து எழும்பிய இனிய 'பூம் போம்' என்ற ஓசை சாரதா தியேட்டர் அலுவலர்களின் தேகத்தில் ஒரு புதிய ஊக்கத்தைக் கிளப்பியது. 'பூரண நிலவினிலே' என்று ஏதோ ஒரு கீதத்தை இசைத்தட்டு மீட்டது.

மூன்றாவது கட்டடம் சம்பத்தூர் சந்திரோதய வித்தியாசாலை; கல்லூரி வீதியில் திகழ்ந்தது. அதன் முகப்பு ஒரு அழகிய கோபுரமாக விளங்கியது. கலாதேவியின் உருவம் சிலை வடிவமாக முகப்பில்

விளங்கியது. அதற்குப் பொலிவு கொடுப்பது போன்று சந்திரோதய இயற்கைக் காட்சி மிகவும் அழகாக அமைந்திருந்தது.

காலை எட்டுமணி தொடக்கமாக மாணவர்களும், ஆசிரியர் களும் கூட்டமாகவும், தனித்தனியும் உள்ளே நுழைந்துகொண்டிருந்தனர். சரியாக மணி எட்டரை அடிக்கச் சம்பத்தூர் சந்திரோதய வித்தியா சாலைத் தலைமை ஆசிரியர் திருவாளர் சதாசிவமும், உதவி ஆசிரியை திருமதி சதாசிவமும் சம்பத்தூர் பட்டினசங்கத் தலைவருடைய பிள்ளை கள் இருவரும் பட்டினசங்கத் தலைவருடைய காரில் வந்திறங்கினர். கார் அவர்களைக் கொண்டு வந்து விட்டபின் சென்றது.

சிறிது நேரத்திற்கெல்லாம் வித்தியாசாலை மணி 'டாண், டாண்' என்று அடித்தது. பிள்ளைகள் எல்லாரும் ஆராதனை மண்டபத்திற் கைகூப்பி நிற்கின்றனர். தேவார இன்னிசை கேட்கிறது.

❋❋❋ முற்றும் ❋❋❋



## கசின் பற்றி .....

'கசின்'-ஈழகேசரிப் பண்ணையில் உருவானவர். 1947 இல் இருந்து 1957 வரை ஈழகேசரியில் சிறு கதைகள், தொடர்கதைகள் எழுதியுள்ளார். க. சிவகுருநாதன் இவரது இயற்பெயர். சாவகச்சேரியைச் சேர்ந்தவர்.

கசினின் சிறுகதைகளிலும் நாவல்களிலும் கருப்பொருளாகக் குடும்ப உறவுகளே முக்கியம் பெற்றன. அவருடைய கதைகள் காதலும் காமமும் துக்கமுமாக இருக்கும். யதார்த்தப் பண்பு விரவிக் காணப்படும். புதிய உத்திகள் இவர் எழுத்தின் சிறப்பாகும். இனிமையாகவும் குஷியாகவும் கதை எழுதும் கசின் என்பது வல்லிக்கண்ணனின் மதிப்பீடு. அவரது கதை சொல்லும் பாணி சிக்கலின்றி ஒழுங்காக அமைந்துள்ளதால் சாதாரண வாசகரை அவரால் கவர முடிகின்றது என்பது கனக செந்திநாதனின் கருத்து.

- ஈழகேசரிச் சிறுகதைகள் தொகுப்பில்
செங்கை ஆழியான் கலாநிதி க. குணராசா

## ஆசிரியரின் நூலுருப்பெற்ற ஆக்கங்கள்

1. நிதானபுரி
2. காதலும் கடிதமும்
3. கசின் சிறுகதைகள்
4. குமாரி ரஞ்சிதம்

சந்திரா வெளியீட்டகம்

ISBN 955-97467-0-7